# நல்ல தமிழ்

அ. மு. ப.

# நல்ல தமிழ்

அ. மு. ப.

# நல்ல தமிழ்

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்,

வள்ளியம்மாள் கல்வி அறம்
அண்ணாநகர் கிழக்கு, சென்னை-102.

1985 நவம்பர் 14

விலை ரூ. 10-00

மாணவர்களுக்கு ரூ. 8-00

மீரா பிரஸ், AE-103, அண்ணாநகர், சென்னை-40

# முன்னுரை

மனித வாழ்வின் செம்மையை விளக்குவது மொழி. மொழியே மனிதனை மனிதனாக வாழவைப்பது; மொழியே மனிதனைப் பிற உயிர்களிடத்திருந்து வேறுபடுத்தி அவனை உயர்ந்தவனாக வாழ வைப்பது. மொழியே மனிதனின் அறிவைத் தெளிவுபடுத்தி, நல்லதன் நலனும் தீயதன் தீமையும் அறிந்து, நல்லதைச் செய்து அல்லதை நீக்கி வாழ வழிகாட்டி வரையறை செய்வது. மொழி இன்றேல் உலகில் வாழ்ந்த நாகரிகங்களையும் பண்பாட்டு நெறிகளையும் பிற சிறப்பியல்புகளையும் யாரால் உணர்ந்துகொள்ள இயலும்? இந்த மொழி என்ற ஒன்றே மனிதனைச் சென்ற காலத்தின் சிறப்பை எண்ண வைத்து, வருங்காலத்தில் பழுதிலா வாழ்வு வாழ வழிகாட்டியாய் அமைந்துள்ளது. சுருங்க கூறுவோமானால், 'மொழி யின்றேல் வாழ்வில்லை' என்ற முடிவினைக் காட்டி விட லாம்.

இம்மொழியைப் பற்றிப் பலர் தப்புக் கணக்குப் போடுகின்றனர்; மனிதன் கருத்தைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படுவதுதான் மொழி என்றும், அதை எப்படி வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ளலாம் என்றும் பேசு வர். மக்கள் கருத்தைப் பரிமாறிக்கொள்வதே அதன் எல்லை என்று முடிவு கட்ட முடியுமா? உண்மையில் மொழியைப் பற்றி அறிந்தவர்கள் அப்படிச் சொல்லுவார் களா? அப்படியே எல்லை கட்டினாலும் மனிதன் கருத்தை மற்றவருக்கு உணர்த்துவது அத்துணை முக்கிய மல்லவா? ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்துகொள்ளாத காரணத்தினால்தானே உலகில் வீட்டுக்கு வீடு சண்டை யும் நாட்டுக்கு நாடு போரும் நடைபெறுகின்றன! எனவே, அக்கருத்துப் பரிமாறிக்கொள்வதற்குங்கூட நல்ல செம்மை சான்ற மொழி நலம் தேவைப்படுகின்றது என்ற உண்மையைச் சிலர் உணருவதில்லை. அப்படி உணராத காரணத்தாலேயே மொழியை எப்படி வேண்டுமானாலும்

மாற்றியும் திருத்தியும் கெடுத்தும் குறைத்தும் வழங்க லாம் என வாதிடுவர். அதே வேளையில் அவர்கள் வேறொரு மொழி பற்றிப் பேசி அதன் வளம் ஓம்பப் பாடு படுவர். இதனால் மொழி வெறி வளர்வதைக் காண்கிறோ மேயன்றி, மொழி நலமும் அது போற்றும் பண்பாடும் மக்களிடையில் காண முடிவதில்லை. நல்ல மொழியே நாட்டை நாடாக்கி மனிதனை மனிதனாக வாழ வைப்பது என்பதை உணர வேண்டும்.

இந்த நல் உணர்விலேதான் பல அறிஞர்கள் உலகில் மொழி பற்றி ஆராய்கின்றார்கள். இன்று உலகில் இம் மொழி பற்றிய ஆராய்ச்சி ஒலி அளவையில் செல்லுவ தாக இருப்பினும் முடிவில் மொழியின் திறம் காணும் நிலையிலேதான் அது வந்து நிற்க வேண்டும். இவ்வாறு உலக மொழிகளின் திறம் காணும் அறிஞர்கள் மொழி மக்கட் சமுதாயத்துக்குச் செய்த – செய்கின்ற – செய்ய இருக்கின்ற – தொண்டினை எண்ணி எண்ணிப் போற்று கின்றார்கள். தாம் உயர்ந்தவர் என்றும் தமதே உயர்ந் தது என்றும் தருக்கும் சில மொழி வாதிகளுக்கு இம்மொழி யாராய்ச்சி பல உண்மைகளை உணர்த்தி, அவர் தருக்கை நீக்க வழி காட்டுகின்றது. மற்றும் இம்மொழி ஆய்வு உலகில் வாழ்ந்த பல மொழிக் குடும்பங்களை விளக்கி, அவை தம்முள் கலந்து வாழ வழி உள்ளமையையும் காட்டுகின்றது. இவற்றையெல்லாம் அறியாது சிலர் மொழி வெறி கொண்டும், மனம் போனபடி பேசியும் மொழி யின் நலத்தைக் கெடுக்கின்றனர். நாட்டில் மொழி நலம் பெறுவதே மக்கள் வாழ்வு நல்ல முறையில் அமைவதற்கு அடிப்படை என்ற உணர்வு மலரவேண்டும்.

இந்த மொழிக் குடும்பங்களுள் தொன்மை வாய்ந்த ஒன்று திராவிட மொழிக் குடும்பம். அக்குடும்ப மொழி களுக்குள்ளே சிறந்ததும் தொன்மை வாய்ந்ததும் தமிழே

யாகும். அத்தமிழ் வழங்கும் நாட்டில் பிறந்து தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட அனைவரும் பெருமைக்கு உரியவர்களே. அவர் அனைவரும் அத்தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பையும் அமைப்பு முறைகளையும் ஆக்கப் பணிகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அவ்வாறு எண்ணும்போது அதன் இலக்கண வரம்பும் வழக்கியல் முறைகளும் நன்கு விளங்கும். அவ்விளக்கமே நாட்டுக்குத் தேவை. மொழியின் இயல்பறிந்து, அதன் மரபு கெடாது அதை வழங்குவதே அதன் மக்கள் அதற்குச் செய்யும் தொண்டு. காலவேகத்தாலும் பிறர் சேர்க்கையாலும் இந்த அடிப்படையை மறந்து சிலர் மனம் போன போக்கில் சென்று தமிழின் எளிமையையும் இனிமையையும் மரபையும் தூய்மையினையும் பாழ்படுத்துகின்றனர். அவர்கள் மொழியை வளர்ப்பதற்குப் பதிலாக மொழியைக் கொலை செய்கின்றவர்களே எனப் பல நல்லவர் நைந்து நைந்து கண்ணீர் விடுகின்றனர். அறிஞர் திரு.வி.க. அவர்கள்,

**'தமிழினைப்போல் இனிமைமொழி**
**சாற்றுதற்கும் இல்லை இந்நாள்**
**தமிழரைப்போல் மொழிக்கொலையில்**
**தலைசிறந்தோர் எவர் உளரே!'**

என்று நைந்து பாடி உயிர் நீத்தார். இந்த நிலை இன்னும் நாட்டைவிட்டு நீங்கவில்லை.

அரசாங்க அலுவலர்களும், மாணவர்களும், நாளிதழ் எழுதும் எழுத்தாளர்களும் பிழை நீக்கி எழுதும் முறையைப் பயின்றுகொள்ளல் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். சில பள்ளி நூல்களிலும் கல்லூரி நூல்களிலுங்கூடப் பிழைகள் மலிந்துள்ளமையைக் காண்கிறோம். அவை நன்கு ஒப்பு நோக்காமையால் உண்டாகும் பிழைகளேயாகும். அவை யாவும் எளிதில் நீக்கக் கூடியனவே. தமிழ் மொழியைப் பிழையின்றி எழுதுவதற்கு நல்ல இலக்கண நூல்கள் தொல்

காப்பியனார் காலந்தொட்டு இன்று வரை வந்துகொண்டே உள்ளன. அவை அனைத்தும் அனைவராலும் படித்து அறிந்துகொள்ள முடியாதனவாயிருக்கலாம். எனவே, சிலர் அவற்றின் அடிப்படைகளைத் தொகுத்து அவ்வப் போது சிறு சிறு நூல்களாக வெளியிடுகின்றனர். மேலை நாட்டிலிருந்து சமயம் பரப்ப வந்த **போப்புப்** பாதிரியார், இளைஞர்களுக்கு அத்தகைய இலக்கண நூல்களை முதன் முதல் எழுதித் தந்தார் என்பர். இன்று பலர் இத்துறையில் கருத்திருத்துகின்றனர். இத்துறையில் பூத்த ஒரு மலரே இந்த **'நல்ல தமிழ்'**.

இன்றைக்குக் கால்நூற்றாண்டுக்கு முன் அமுதசுரபி ஆசிரியர் திரு. வேம்பு அவர்கள் தமிழ் இலக்கண முறை யினையும் மரபினையும் தங்கள் வாசகர்களும் பிறரும் எளிமை யில் அறிந்து கொள்ளும் வகையில், எளிய நடையில் விளக்கி, தொடர்ந்து தம் அமுதசுரபியில் எழுத வேண்டும் எனக் கேட்டார்கள். அதற்கு முன்பே நான் சில சில தனிக் கட்டுரைகளும் சீவகன் வாழ்வைப் பற்றித் தொடர் கட்டுரை களும் அவர் கேட்டுக்கொண்டபடியே எழுதித் தந்தேன். அவற்றை வெளியிட்ட பின் அவற்றைத் தொகுத்து நூலாக் கித்தந்தார்கள். அந்தச் 'சீவகன்' கதை பல்கலைக்கழகத்துப் பாடமாக அமைய, அதன் வருவாய் அனைத்தையும் நான் செயலாளனாக இருந்து தொடங்கிய ஷெனாய் நகர் திரு. வி. க. உயர்நிலைப் பள்ளிக்குத் தந்து உதவினேன். அப்படியே அதற்கு முன் என்னுடைய 'கடவுளர் போற்றும் தெய்வம்-கண்ணகி' என்ற நூல் பத்தாம் வகுப்பிற்குப் பாட மாக அமைய, அதன் வருவாயினை நான் செயலாளனாக இருந்து தொடங்கிய எங்கள் ஊர் (வாலாஜாபாத்) உயர் நிலைப்பள்ளிக்குக் கொடுத்து உதவினேன். அமுதசுரபியின் பதிப்பாசிரியரும் அவர்தம் இளவல்களும் அது அச்சிடப் பெற்ற இராசன் அச்சக உரிமையாளரும் எனக்கு அறிமுக மானவர்களாதலால் இந்த இலக்கணக் கட்டுரைகளையும்

அவ்வப்போதே தனியாகத் தொகுத்து அச்சிட்டு பின் நூலாக்கிச் சில படிகள் தந்து, இதன் வரவினால் ஏதேனும் பள்ளியைத் தொடங்குமாறு கூறினார்கள். எனினும் அப்போது அதுபற்றி நான் சிந்திக்கவில்லை. ஆயினும், கால் நூற்றாண்டிற்குப் பின் என் அன்னையின் பள்ளியின் சார்பிலே இன்று இந்த 'நல்லதமிழ்' இன்றைய தேவைக்கு ஏற்ற வகையில் சில பல மாற்றங்களுடன் வெளிவருகின்றது. இதன் வருவாய் அனைத்தும் வள்ளியம்மாள் கல்வி அறத்தையே சாரும்.

நான் இதற்குமுன் 'இளைஞர் இலக்கணம்' போன்றவற்றையும் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கென எழுதியுள்ளேன். எனினும் இது மாணவர்களுக்கு மட்டுமின்றி, தமிழைப் பிழையறப் பேசவும் எழுதவும் விரும்பும் யாருக்கும்—அதிகம் பயிலாதவருக்கும் பயன்படுவகையில் எளிய முறையில் தெளிவான வகையில் எழுதப்பட்டுள்ளது. அனைவருக்கும் இது பயன்படும் என நம்புகிறேன்.

இந்நூலினையும் என் பிற நூல்களையும் மறுபடி வெளிக்கொண்டு வரவேண்டும் எனப் பலரும் என் மாணவர் சிலரும் விரும்பிய நிலையிலேயே இது இன்று-குழந்தைகள் நாளில் வெளிவருகிறது. இதை மாணவரும் மற்றவரும் ஏற்றுப் பயன்படுத்தி நல்ல தமிழை நாட்டில் வளர்க்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்நூல் வெளிவர உடன் நின்ற அனைவருக்கும் நன்றியுடையேன்.

வள்ளியம்மாள் கல்வி அறம்
சென்னை-102
*14—11—85*

அன்பன்,

**அ. மு. பரமசிவானந்தம்**

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | எது நல்ல தமிழ் ? | 9 |
| 2. | எழுத்தும் ஒலியும் | 17 |
| 3. | சொற்களின் அமைப்பு | 27 |
| 4. | சொற்களின் பாகுபாடுகள் | 40 |
| 5. | சேரும் சொற்கள் | 50 |
| 6. | சொற்றொடர்கள் | 60 |
| 7. | மயக்கமும் தெளிவும் | 70 |
| 8. | வாக்கியங்கள் | 80 |
| 9. | அடிப்படை அமைதிகள் | 90 |
| 10. | மரபின் வழியே | 100 |
| 11. | யாப்பின் அமைதி | 110 |
| 12. | அணியும் தேவை | 120 |

# 1. எது நல்ல தமிழ் ?

நாட்டு மக்களின் வாழ்வைப் பல வகைகளில் ஆராய்கிறார்கள் இன்றைய ஆராய்ச்சியாளர்கள். அவர்கள் ஆராயும் கோணங்களுள் மொழியும் ஒன்று. உலகில் எத்தனையோ வகையான மொழிகள் வாழ்கின்றன. மனித வரலாற்றில் தோன்றி வளர்ந்து வாழ்ந்த மொழிகள் பல. அவை அனைத்தும் இன்று வாழ்கின்றன என்று சொல்ல இயலாது; எத்தனையோ அழிந்துவிட்டன. ஒரு சில பெயரளவில் வாழ்கின்றன. ஒரு சில வழக்கிழந்துள்ளன. ஒரு சிலவே செம்மொழியாய் வாழ்கின்றன என்னலாம். அவற்றுள் தமிழும் ஒன்று.

மொழியே மக்களின் வாழ்க்கை, நாகரிகம், பண்பாடு முதலிய அனைத்தையும் உலகுக்குக் காட்டுவதாய் உள்ளது. ஒரு நாட்டில் வாழும் மக்களுடைய மொழியைக் கொண்டே அவர்தம் வரலாற்றை ஓரளவு அறிந்து கொள்ள முடியும். மேலும், மொழியே மக்கள் உள்ளத்தைத் திறந்து காட்டும் கருவி. உள்ளத்தில் எண்ணியதை உத்தட்டால் உலகுக்கு உணர்த்துவதுதான் மொழி. ஆங்கிலத்தில் இம்மொழி பற்றிப் பல நூல்கள் புதிது புதிதாக வெளி வந்துகொண்டிருக்கின்றன. இன்று உலகில் பல்வேறு மொழிகளைப் பற்றி ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆசை வளர்ந்துள்ளது. மொழியே நாட்டின் பழைய கால வரலாற்றைக் காட்டுவதோடு புது உலக வாழ்வுக்கும் வழி அமைக்கின்றது.

இந்த மொழிகளுள்ளே தொன்மை வாய்ந்தன சில. அவற்றுள் தமிழ் மொழியும் ஒன்று. பரந்த பாரதத்தின்

தென்கோடியில் வாழும் சுமார் ஐந்து கோடிக்கு மேற்பட்ட மக்களால் இம்மொழி பேசப்பெற்று வாழ்கின்றது. இன்னும் பர்மா, மலேயா, இங்கிலாந்து, இலங்கை, ஆப்பிரிக்கா, பிஜித் தீவுகள், தென்னாப்பிரிக்காப் போன்ற நாடுகளிலும் பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற நம்நாட்டுத் தலை நகர்கள் பல வற்றிலும் இலட்சக்கணக்கான தமிழர்கள் வாழ்கிறார்கள். சுருங்கச் சொன்னால் **கால்டுவெல்** என்ற மேல் நாட்டு அறிஞர் காட்டியபடி, எங்கெங்கு உழைப்பு உண்டோ, அங்கங்கெல்லாம் தமிழனைக் காணலாம்.

தமிழர் பேசும் மொழி தமிழ் மொழி; அது வழங்கும் நாடு தமிழ் நாடு. இத்தமிழ் நாட்டைப் பழங்காலத்தில் தமிழ் வேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்கள் தங்கள் அருமைத் தாய்மொழியைப் போற்றி வளர்த்தார்கள். இடையில் வந்து ஆட்சி புரிந்த ஆங்கிலேயர் காலத்தில் தமிழ் அவ்வளவு நன்றாகப் பரவ வில்லை என்னலாம். என்றாலும், இந்திய நாடு உரிமை பெற்ற பிறகு தமிழ்நாடு அரசாங்கம் தமிழ் வளரப் பலவகை யில் பாடு படுகிறது. தமிழ் படிக்கத் தெரியாதவர்களுக்குத் தமிழ் நாட்டில் வேலை இல்லை என்ற நிலை உண்டாகி விட்டது. தமிழ் 'ஆட்சி மொழி' ஆகிவிட்டது. எனவே, தமிழ் மொழியை அனைவரும் தவறு இல்லாமல் பேசவும் எழுதவும் கற்றுக் கொள்ளல் அவசியம். தமிழ்ப் பலக்கலைக் கழகம் அமைத்து தமிழைப் பலவகையில் வளர்க்க இன்றைய அரசாங்கம் செயல் பெற்றுச் சிறக்கிறது.

**சி**ல ஆண்டுகளுக்கு முன் ஆஙகிலம் பற்றியிருந்த இடங் களையெல்லாம் இப்போது தமிழ் தனக்குரியனவாக்கிக் கொண்டு வருகிறது. பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாக் களில் நடைபெறும் சொற்பொழிவுகள் தமிழில் ஆற்றப் பெறு கின்றன. அமைச்சர்கள் தமிழிலேயே பேசுகிறார்கள்.

மாநிலப் பணியாளர்களாகிய பெரிய அலுவலர்களும் தமிழில் பேசுகிறார்கள். தமிழிலேயே கையெழுத்து இடுகிறார்கள். தமிழ் நாட்டில் வாழும் சாதாரண மனிதன்கூடத் தன் தாய் மொழியில், மேல் உள்ளவர்களுக்குத் தன் குறைய எடுத்து விளக்குகிறான். ஆம்! இந்த நிலையில் தமிழைப் பிழை இல்லாமல் எழுதவும் பேசவும் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் உண்டாகிறது அல்லவா?

எந்த ஒரு மொழியையும் திருத்தமாகவும் பிழையின்றிச் செம்மையாகவும் பேசினாற்றான்—எழுதினாற்றான்—அந்த மொழியின் சிறப்பும், தொன்மையும், பிற நல்ல இயல்புகளும் விளங்கும். தமிழ் மிகு பழங்காலந்தொட்டே வழங்கி வந்த மொழியான காரணத்தால் எத்தனையோ மாற்றங்களை அடைந்து, கடைசியில் தொல்காப்பியர் காலத்துக்கு முன் இன்றைய நிலையை அடைந்துள்ளது. எந்த மொழியும் தோன்றிய காலத்தை ஒட்டிப் பலப்பல மாறுதல்களைப் பெற்றே வளர்ச்சியுறும். சில நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய ஆங்கில மொழியில் நூற்றாண்டுதோறும் எத்தனை எத்தனையோ மாற்றங்களை நாம் காண வில்லையா? பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றண்டுகளில் உண்டான நல்ல ஆங்கில இலக்கியங்களைக்கூட இன்று—இந்த இருபதாம் நூற்றாண்டுக்கு இடையில் — சிறந்த ஆங்கிலப் புலவர்கள் ஏற்றுக்கொள்வதில்லையே! வடமொழி யுங்கூடக் காளிதாசர் போன்ற பெருங்கவிஞர்கள் உண்டா வதற்கு முன்னே எத்தனையோ மாற்றங்களையெல்லாம் பெற்று வளர்ந்தது என்று மேலை நாட்டு ஆராய்ச்சியாள ரெல்லாரும் கூறுகின்றனர். அவை போன்றே தமிழும் தொல்காப்பியர் காலத்துக்கு முன் எத்தனையோ மாற்றங் களைப் பெற்று, இன்று உள்ள நிலையில் அமைந்துள்ளது. தொல்காப்பியர் காலத்துக்கும் இன்றைக்கும் சில 'எழுத்துக் களில் மாற்றங்களைக் காண்கிறோம். எல்லா மொழிகளும் மாற்றத்துக்கு உரியனவே. 'பழையன கழிதலும் புதியன

புகுதலும் வழுவல கால வகையி னானே', என்று தமிழ் இலக்கணமாகிய நன்னூல் மாற்றத்துக்கு இடம் தருகிறதே!

இவ்வாறு மாற்றங்கள் உண்டாகும் போது அறிஞர்கள் சிந்தித்தே மாற்றம் செய்வார்கள். இன்று ஆங்கில மொழியிலேயே ஆங்கில உச்சரிப்புக்கும் எத்தனையோ வேறுபாடுகளைக் காண்கிறோம். எழுத்தமைப்பிலும் அப்படியே. இந்த மாற்றங்களை எந்தத் தனி மனிதனும் தன் விருப்பம் போல மாற்றி அமைத்துவிட்டான் என்று சொல்ல இயலாது. அறிஞர்கள் ஆராய்ந்து, பொருத்தமான முடிவுகளையே ஏற்றுக்கொள்வார்கள். அவ்வாறு ஏற்றுக் கொண்ட முடிவுகளின் அடிப்படையிலேதான் அந்தந்த மொழிகளின் இலக்கணங்கள் அமையும். தொல்காப்பியர் இதை எண்ணியே இலக்கணம் செய்தாலும், பலர் முன்னமே ஆராய்ந்த முடிவுகள் அவை என்பதை விளக்க 'என்ப' என்றும், 'என்மனார் புலவர்' என்றும் பல சூத்திரங்களில் கூறியுள்ளார். எனவே, தமிழ்மொழி என்பது பல்வேறு அறிஞர்களால் காலந்தோறும் வரையறுக்கப்பட்ட இலக்கண வரம்பில் நின்று, தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கணங்கள் காட்டிய நெறியிலே அமைதியாய்ச் சென்றுகொண்டிருக்கிறது. என்றாலும், இன்று பலர் அந்த இலக்கண வரம்புகளை அறியாதிருக்கின்றனர். இது வரையில் அறியாதிருப்பினும் தவறில்லை. இன்று தமிழ் மொழியே ஆட்சி மொழியாய் அரியணை ஏறிய பிறகும் அதை வழங்கும் இலக்கண வரம்பை அறியாது வாழ்தல் முறையாகுமா?

மொழிகள் எல்லாவற்றிலுமே சில பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை மொழி நூல் வல்லவர் யாவரும் அறிவர். மொழியின் அமைப்பையும் அடிப்படையையும் உணராதவர்களே மொழியை எப்படிப் பேசினாலும் தவறு இல்லை என நினைப்பார்கள்; எப்படி எழுதினாலும் தவறு

இல்லை என வாதிப்பார்கள். ''கதவைத் திரக்க' என்றால் கேட்பவருக்குப் பொருள் புரிந்துவிடுகின்றது; ஆகவே ஏன் 'திறக்க' என்றுதான் எழுதவேண்டும் என்று வற்புறுத்த வேண்டும்?'' என்பர் சிலர். தமிழில் உள்ள 'ற'கர 'ர'கர பேதத்தால் வருகின்ற இடர்ப்பாடு இது. இது போன்றே 'ண' கர, 'ன'கர, 'ந'கர வேறுபாடுகளையும் பிறவற்றையும் தமிழ் மொழி கொண்டுள்ளது. அவற்றின் அடிப்படைகளை நன்கு அறிந்து கொண்டாற்றான் அவற்றை எப்படி எழுதினால் சிறக்கும் என்ற உண்மை புலப்படும். அந்தத் துறையில் எனது எழுத்து ஓரளவு உதவும் என்னும் துணிபுடையேன்.

மொழி அமைப்பில் எத்தனையோ அடிப்படைகள் உள்ளன. அதிலும் தமிழ் போன்ற பழைய செம்மொழிகளும் அவற்றின் எழுத்துக்களும் சொற்களும் ஆராய்ந்து ஆராய்ந்து அமைக்கப்பெற்றன. தொல்காப்பியத்தில் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே', என்று ஒரு சூத்திரம் உண்டு. அதன்படி ஆராய்ந்தால், தமிழில் பொருளற்ற சொற்களோ **வீண்** அசைகளோ இல்லை என்பது நன்றாக விளங்கும். அது போன்றே எழுத்துக்களின் அமைப்புக்களுக்கும் பொருளும் காரணமும் காட்ட இயலும். மேல் நாட்டு அறிஞராகிய **கால்டுவெல்** அவர்கள் தமிழைப் பல காலம் கற்று, யாரும் காண இயலாத '**ஒப்பிலக்கணம**' என்ற ஒரு நூலையும் எழுதிவிட்டுச் சென்றார். தமிழ் எழுத்துக்கள் தமிழ்ச்சொற்கள் ஆகியவை ஏன், எவ்வாறு, இன்றைய அமைப்பில் அமைக்கப்பெற்றுள்ளன என்பதை அவர் காட்டியிருக்கிறார். அத்தனையும் நான் இங்கே காட்ட நினைத்தால், அது ஒரு பெரு மொழிநூலாக அமையும். எனவே, பின்னர்த் தேவையாகும் இடங்களில் எடுத்துக் காட்டுகின்றேன்.

நல்ல தமிழ் என்ற உடனே ஏதோ உயர்ந்த இலக்கிய நடையைப் பற்றி நான் எழுதப் போவதாக நினைத்துக்

கொள்ள வேண்டா. உயர்ந்த நடையில் புரியாத சொற்களை எழுதித் தம் திறமையைக் காட்டிப் பாட்டும் உரை நடையும் எழுதிய காலம் என்றோ கழிந்துவிட்டது அக் காலத்தை நான் குறை கூறவில்லை. அதனால் பலரும் பயன் அடைய முடியாது என்பதே என் கருத்து. ஒரு சிலர் வேண்டு மானால் அதைப் படித்துப் படித்துச் சுவைக்கலாம். ஆனால், நமக்கு வேண்டுவது எல்லோருக்கும் விளங்கக்கூடிய எளிய தமிழேயாகும். மொழிப்பற்றோ, மொழி ஆராய்ச்சியில் விருப்பமோ இல்லாத சாதாரண ஒரு மனிதன், தனது வாழ் வின் தேவைக்காகத் தன் கருத்தை வெளியிட வேண்டு மானால், அவனும் தவறு இல்லாத வகையில் தமிழைப் பேச வோ எழுதவோ வேண்டும் என்பதுதான் என் விருப்பம். தமிழை எழுதப் படிக்கத் தெரியாதவன் கூட, நல்ல தமிழில் பேசித் தன் கருத்தை வெளியிட வேண்டும் என்பதை அனை வரும் ஒத்துக்கொள்வர்.

இன்று பேச்சு நடை வேறு, எழுத்து நடை வேறு என்ற வகையில் மொழி இரு வேறு பாதைகளில் செல்ல நினைக் கின்றது. ஆனால், அது இயலாத ஒன்று. இந்த நிலை யில் உலகில் பல மொழிகளுக்கு உண்டு என்றாலும், அவை எழுத்து நடையில் இலக்கண வரம்பிலும் மரபிலும் நின்றே வளர்ந்து வருகின்றன. தமிழ் நாட்டிலோ, 'பேசுவது போல எழுதினால் என்ன?' என்றுகூடச் சிலர் கேட்கின்றனர். அது பொருந்துவதாகுமா! எண்ணிப் பாருங்கள். மாந்தர் சோம்பல் நிலைக்கு அடங்கியவர். சிலறடைய நிலை அளவின் எல்லை கடந்து அமைவதும் உண்டு. அப்போது அவர்தம் நாக்கும் அசைய மறுத்துவிடும் போலும்! ஆகவே, அவர்கள் பேசுவது யாருக்கும் விளங்காத ஒன்றாக அமைந்து விடும். சென்னையில் அது ப்பான்ற பேச்சை நாம் அதிக மாகக் கேட்க முடியும். 'இழுத்துக்கொண்டு வந்தாஸ்' என் பதை 'இஸ்திகினு வந்தான்' என்று சொல்லுவதும் 'வந்து

விட்டான்' என்பதை 'வந்துட்டான்' என்று சொல்வதும் நாம் நாள்தோறும் கேட்பனவே. இவை போன்ற எண்ணற்ற சொற்கள் பேச்சு வழக்கில் வந்து எழுத்து வழக்கை விட்டு நம்மை எங்கோ அழைத்துச் செல்கின்றன. இந்தப் பேச்சு வழக்கில் பாமரர் மட்டுமின்றிப் பண்டிதர்களுங்கூடத் தவறி விடுகின்றார்கள். எனவே, இவற்றையெல்லாம் எழுத்து வடிவிற் கொண்டுவரத் தொடங்கினால் மொழியின் கதி என்னாவது! உலகில் யாரும் எந்த மொழியிலும் இந்த வழக்கை விரும்புவார்கள் என்று சொல்ல இயலாது.

தமிழ் மொழியில் சில இலக்கண விதிகள் எல்லோருக்கும் விளங்கவில்லை எனச் சிலர் வாதிப்பர். ஒரு சிலர் தமக்கு அவற்றை பின்பற்ற முடியவில்லையானால், மொழிக்கே அவை தேவை இல்லை என்று கூறும் அளவிற்குக்கூடச் சென்று விடுகின்றனர். ஆனால், சற்று ஆராய்ந்து எண்ணிப் பார்த்தால், அத்தகைய வரம்புகள் இருப்பது சரி என்றே தோன்றும். ஆங்கில மொழியில் அதற்கென வரையறுக்கப் பட்ட இலக்கண வரம்மை மீறித் தவறாக எழுதினால் கவலையுறும் நம்முள் பலர், தமிழில் அப்படி எழுதினால் எண்ணிக்கூடப் பார்ப்பதில்லை; ஏதோ பொருள் விளங்கி விட்ட தல்லவோ' என்று கூறி ஆறுதல் அடைகின்றனர். இலக்கண வரம்பை அறிந்து முறைப்படி ஒழுங்காகவும் மரபு கெடாமலும் எழுதவிட்டால், மொழியும் அத்மொழிவழி அமையும் நாடும் மற்றவரால் எவ்வளவு தாழ்த்தி மதிக்கப் பெறும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ் உள்ள இலக்கண முறையோ, அன்றிமொழி யின் அமைப்போ, அத்துணை விளங்க இயலாத கடின நிலை யில் இல்லை. ஒரு சில மொழிகளுக்கு இருக்கின்ற எத்துணை யோசிக்கல் நிலையுடைய அமைப்புக்கள் தமிழில் இல்லை, மேலும் எழுத்துக்கள் அமைப்பும் அவை சேர்ந்து வரும் சொற்

களும் சொற்றொடர்களும் சீர்திருந்திய எளிய இலக்கண எல்லைக்களுள்ளேயே அமைந்துள்ளன.

இத்தகைய நல்ல செம்மையான அ மை ம ப் பு முறை இருந்தும், பலர் தவறாகத் தமிழ் மொழியை எழுதியும் பேசியும் வருகின்றனரே என்ற ஐயம் எழுதல் இயல்பு அதற்கு முக்கிய காரணம் தமிழ் இலக்கண அமைப்பு அனைவருக்கும் விளங்காதது என்று பலரும் தம்முள் அதுபற்றி அறிவதற்கு முன்னரே முடிவு கட்டிவிடுவதாகும். நாட்டில் எப்படி எழுதினாலும் 'ஏன்' என்று கேட்க இயலாத நிலையும் ஒரு காரணம். இன்னொரு முக்கிய காரணம், ஆங்கில மொழியில் இருப்பது போலச் சொற்களை வரிசைப்படுத்தி, அகராதி ஆக்கி, ஒவ்வொரு சொல்லினுடைய உச்சரிக்கும் முறை, அச்சொல்லோடு சேரும் பிற சொற்களின் அமைப்பு, சேரும்போது மாறும் நிலை இவை போன்றவற்றைச் சுட்டிக் காட்டி விளக்கும் நல்ல அகாரதிகள் தமிழில் இல்லை. இப்போது அரசாங்கத்தின் துணையால் தமிழ்ப்பல்கலைக் கழகம் அத்துறையில் தொழிற்பட இயங்கியுள்ளதென அறிகிறேன். பழைய அகாரதி (Lexicon) போன்று அன்றி, நல்ல ஆய்வாளரிடம் இ ப் ப ணி ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அ ந் த அகாரதித் தொகுதி வெளிவரின் நல்ல பயன் உண்டு என நம்பலாம்.

தமிழ் இலக்கண நூல்கள் இந்த முறைகளையெல்லாம் திட்டமாகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துக் காட்டியிருந்தாலும், அவை பெரும்பாலும் விளங்காத சூத்திரங்களாய் இருப்பதாலேயே பலரும் அறிந்துகொள்ள இயலவில்லை. அவற்றுள் ஒரு சிலவற்றை எடுத்துக்காட்டி நல்ல தமிழ் எழுதும் சில வழிகளைத் தொடர்ந்து விளக்க முயல்கிறேன்.

# 2. எழுத்தும் ஒளியும்

தமிழ் எழுத்துக்களின் அமைப்பையும் முறையையும், வழக்கில் வரும் விதங்களையும் புரிந்து கொண்டால் கூடிய வரையில் பிழையற எழுதப் பழகிக்கொள்ளலாம். தமிழ் எழுத்துக்களின் அமைப்பே மொழியின் நிலையை நன்றாகக் காட்ட வல்லது. தமிழ் மொழி தோன்றிய காலத்தில் இருந்த எழுத்துக்களின் ஒலி வடிவமோ, வரி வடிவமோ இன்று உள்ளது என்று கூற இயலாது. மொழி வரலாற்றில் அது இயலாத ஒன்று. எனவே, எழுத்துக்கள் தோன்றிய நாள் தொட்டு எத்தனையோ மாறுபாடுகளைப் பெற்ற தமிழ் எழுத்துக்கள் தொல்காப்பியர் காலத்திற்குப்பின் பெருமாறுதல்களைப் பெறவில்லை. இடைக்காலத்தில் பல்வேறு மொழிச் சார்புடைய எழுத்துக்கள் நாட்டில் உலவின போதிலும், அவை தமிழ் எழுத்துக்களின் அடிப் படையை மாற்றவில்லை என்பதும் நன்கு தெரிகிறது. எனினும், எழுத்து வழக்கத்தில் இன்று சிலர் சில எழுத்துக் களைத் திரித்து வழங்குவதைக் காண்கிறோம். நன்னூலில் எ, ஒ என்ற இரண்டும் மேல் புள்ளி பெற்று மெய்யெழுத்தைப் போல வரும் எனக் குறிக்கப் பெற்றுள்ளது. எனினும் இன்று நாம் அவ்வாறு எழுதுவதில்லை. இலக்கணம் கூறிய வடிவில் இன்று நாம் மாறுபட்டிருப்பது இந்த அமைப்பு ஒன்றிலேதான். மற்றவற்றுள் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக மாறுபாடு இல்லை.

தமிழ் எழுத்துக்களை முதல் எழுத்து, சார்பு எழுத்து என இரண்டாகப் பிரித்துள்ளார்கள். உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் முதல் எழுத்துக்களாகும்; மற்றவை சார்பு எழுத்துக்கள். இவை பற்றிய விளக்கங்கள் இங்கே தேவை

இல்லை என நினைக்கிறேன். முதல் எழுத்துக்களின் அமைப்பே, அதை நன்றாகப் புரிந்துகொண்டால் தமிழைத் தவறு இன்றி எழுத உதவும். உலகில் வாழ் வதற்கு முதலாக அமைவன உயிரும் உடம்பும். அவை இரண்டும் கலந்த பிறகே மற்றவற்றின் சார்புகள் ஏற்படும். இந்த உலக நிலைதான் தமிழ் எழுத்துக்களின் நிலையும். உடலும் உயிரும் ஒன்றுதல் இயல்பு. பிறகு மற்றவை வந்து சாரும். இதைத்தான் இலக்கண நூலோர் 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'. என்று எழுதி வைத் திருக்கின்றனர். உயிர் பிறந்தால் மெய் ஒலியற்றதாகி விடுகிறது.

உயிர் பன்னிரண்டு; மெய் பதினெட்டு இவை முப்ப திலேயும் சில பிரிவுகள் உள்ளன. உயிர் எழுத்அக்களை அவற்றின் ஒலியின் தன்மைக்கு ஏற்பக் குறில், நெடில் என்று இரண்டாகப் பிரித்துள்ளார்கள், உயிர் வரிசையில் 'ஐ, ஔ' என்னும் இரண்டு எழுத்துக்களை எழுதும்போது சில சமயங் களில் இடர்ப்பாடு உண்டாகின்றது. இவை தனி எழுத்தா என நினைக்க வேண்டியுள்ளது. வடமொழியில் இவை போன்ற இரண்டு ஒலி கலக்கும் எழுத்துக்களைக் கூட் டெழுத்து என்று சொல்லும் மரபு உண்டு. இங்கே அப்படிச் சொல்லவில்லை. என்றாலும், இவை இரண்டும் இரண்டு ஒலி கள் இணைந்தவையே. 'ஐ' என்பதற்குப் பதில் 'அய்' என்றும் 'ஔ' என்பதற்குப் பதில் 'அவ்' என்றும் எழுதுவதில் தவறு இல்லை. இவ்வாறு எழுதுவதை 'எழுத்துப் போலி' என்று இலக்கண நூலோர் கூறினாலும், எழுதுவது தவறு என்று அவர்கள் கூறவில்லை; கூறவும் கூடாது. எனவே, உயிர் பன்னிரண்குல் 'ஐ', 'ஔ' என்ற இரண்டு எழுத்துக் கள் தேவை இல்லை என்று கூடச் சிலர் சொல்லலாம். ஆனால், அதுவும் பொருந்தாது. அவற்றின் ஆட்சியை ஊன்றிக் கவனித்தால், அவை இருப்பதால் தமிழில் பல

பொருள்களை உணர்த்த முடிகின்றது என்ற கூண்மை புல னாகும். எனவே, எழுத்து வழக்கில் 'ஐ', 'ஔ' என்ற இரண்டும் அப்படியே வழங்கப் பெறவேண்டும். இவை இரண் டும் தனித்து எழுத்தாக நின்றே பொருளையும் தருகின் றனவே. அவ்வாறு அன்றிப் 'போலி'யாக 'அய்', 'அவ்' என வழங்கினும் இலக்கணம் தவறு என்று கொள்ளார். ''ஐயர்' என்பதை 'அய்யர்' என்றும், 'ஔவை' என்பதை 'அவ்வை' என்றும் இன்றும் எழுதுவதைக் காண்கிறோ மல்லவா? அந்த முறை தவறுடையது அன்று.

தமிழ் எழுத்துக்களுக்கு ஒலியும் வடிவம் தனித்தனியாக இன்னின்ன என்றும் வரையறுத்திருக்கிறார்கள், மற்றும் அந்த எழுத்துக்களின் ஒலி பிறக்கும் இலக்கணமும் நன்கு வரையறுக்கப்பட்டுள்ளது. அந்த நிலை அறிந்து எழுத்து ஒலிகளை நாம் உச்சரிப்போமானால், பேச்சில் பிழை உண் டாகக் காரணமே இல்லை. உயிர் எழுத்துக்களுக்கும் மெய் எழுத்துக்களுக்கும் தனித்தனியாகப் பிறப்பிடம் கூறுகின்றார் நன்னூலார். மெய் எழுத்துக்கள் அவ்வாறு தம்முள் மாறிப் பிறப்பதாலேதான் 'வல்லினம், மெல்லினம், இடையினம்' என்று மூன்று பிரிவுகளாக்கப்பட்டன. உயிரும் இடையினமும் கண்டத்தை இடமாகவும், மெல் எழுத்து மூக்கை இடமாக வும், வல்லெழுத்து மார்பை இடமாகவும் பெற்றுப் பிறக்கும் என்பது இலக்கணம். இவ்வாறு அவற்றின் பிறப்பிடம அறிந்த எழுத்தை உச்சரித்தால் பேச்சுத் தமிழில் பிழையே உண்டாகாது. மார்பிலிருந்து கிளம்ப வேண்டிய ஒலிக்குப் பதில் மூக்கிலிருந்து ஒலி உண்டானால் 'சீனாக்காரன்' பேச்சு மாதிரிதான் இருக்கும். எனவே, நல்ல தமிழில் பேசு வதற்கு, எழுத்துக்களின் பிறப்பிடத்தை அறிந்து நாமும் அவ்வாறு பேசுதலே சிறந்தது. இங்கே நான் கூறியது பொது விதி. ஒவ்வோர் எழுத்தும் எவ்வெவ்வாறு பிறக்கிறது என் பதையும் அதற்கு வேண்டிய நா, உதடு, பல், அண்ணம் இவற்றின் முயற்சிகளையும் இலக்கண நூலோர் நன்றாகப்

பகுத்துக் காட்டியிருக்கின்றனர். அவற்றையெல்லாம நாம் இங்கே விளக்க வேண்டா. பெரும்பாலும் மக்களது முயற்சியில் அவை இயல்பாகவே அமைந்துவிடுகின்றன. அப்படி அமையாத ஒரு சிலர்தாம் தவறாகப் பேசுகின்றனர். அந்தத் தவறே பேச்சு வழக்கை எழுத்து வழக்கிலிருந்து எங்கோ அழைத்துச் சென்றுவிடுகிறது.

மேல் அண்ணத்தை வருட 'ழ' பிறக்கும் என்பது இயற்கை விதி. ஆனால், அதற்கு முயற்சி வேண்டும். நாவை மேலே தூக்கி, மடித்துப் பின் மேல் வாயாகிய அண்ணத்தை வருட வேண்டும். இந்த முயற்சியைச் செய்யச் சிலர் சோம்பல் கொள்வது உண்டு. அப்போதுதான் 'வாழைப் பழம்', 'வாயப்பய'மாகவும் 'வாளப்பள'மாகவும் உருமாறி மொழியைச் சிதைக்கிறது. இந்தச் சோப்பல் நீங்கி, முயற்சி சரியாக உருப்பெறுமேயானால், பேச்சு மொழி நன்றாக அமையும். இவ்வாறே பல எழுத்துக்களின் பிறப்பிடம் அறியாத காரணத்தாலோ — அறிந்தும் முயலாத காரணத்தாலோதான் பிழைபடப் பேசும் நிலையும், அதனால் மொழியின் நிலையே மாறும் வகையும் உண்டாகின்றன. மனிதனுடைய சாதாரணமான சோம்பல் — வாயசைக்கவும் வருத்தப்படும் சோம்பல் — மொழியின் வரலாற்றையே மாற்றி விடுகிறது என்பதை அவர்கள் அறிவார்களானால் நிச்சயம் அவர்கள் சோம்பல் அடைய மாட்டார்கள்.

இனி, எழுத்துக்களின் அமைப்பு நல்ல தமிழ் எழுத உதவும் நிலையைக் காண்போம். பேச்சு வழக்கில் மனிதனின் சோம்பல் பெரிதும் இடம் பெற்றாலும், இன்னும் எழுத்து வழக்கில் அந்தப் 'பெரு' நிலை வரவில்லை. எழுத்துக்களை ஒழுங்காகவே பலர் எழுதுகின்றனர். என்றாலும் ஒரு சிலர் எழுதுவதைப் பார்த்தால் அஞ்ச வேண்டியுள்ளது. 'காஞ்ஜீபுரம்', 'பஞ்ஜி' போன்ற சொற்களைச்

சிலர் எழுதுவதைப் பார்க்கிறோம். அது கண்டு நல்ல தமிழ் விரும்பும் உள்ளம் வருந்துகின்றது.

தமிழில் சில ஒலிகளைக் குறிக்க எழுத்துக்கள் இல்லை என்றும், ஆகவேதான் இவ்வாறு எழுத நேரிடுகிறது என்றும் ஒரு சிலர் வாதிடவும் செய்கின்றனர், ஆழ்ந்து பார்த்தால், அந்த வாதத்துக்கு வழியே இல்லை. வல்லினம் மெல்லினம் என்ற இரு பிரிவை நாம் மேலே கண்டபடி ஒலி பிறக்கும் இடம் பற்றி மட்டும் அமைக்கவில்லை. அவை மொழிக்கு வேண்டிய ஒலிகளை அமைக்கும் வகையிலேயும் அந்தப் பகுப்பு அமைந்துள்ளது. 'க'வ்வுக்கு, 'ங'வ்வும், 'ச'வ்வுக்கு 'ஞ'வ்வும், 'ட'வ்வுக்கு 'ண'வ்வும், 'த'வ்வுக்கு 'ந'வ்வும், 'ப'வ்வுக்கு ம'வ்வும், 'ற'வ்வுக்கு 'ன'வ்வும் ஒட்டிய இனங்களாகவே அமைக்கப் பெற்றுள்ளன. இந்த உண்மை உணர்ந்து கொண்டால் தமிழில் உண்டாகும் பல பிழைகளை எளிதில் நீக்கிவிடலாம். அவற்றைப் பிறகு காணலாம்,

இங்கு ஒலி பற்றியல்லவா கண்டோம்? ஆம்! இந்த இன அமைப்பிலே ஒலி வகைகளுக்கு வழி செய்யப்பட்டுள்ளது. 'சுக்கு' என்ற சொல்லையும் 'சுங்கு' என்ற சொல்லையும் உச்சரித்துப் பாருங்கள் இரண்டிலும் கடைசியாக வரும் 'கு'வ்வின் ஒலியில் வேறுபாடு காண முடிகிறது அல்லவா? இந்த ஒலி வேறுபாடு எதனால் ஏற்பட்டது? 'கு'வ்வுக்கு முன் 'க்' வந்தால் வல் ஒலியும், 'ங்' வந்தால் அதனுடன் இணைந்த வேற்று மெல்லிய குழைவு ஒலியும் வருகின்றன அல்லவா? எனவே, 'க', தன் இன மெல்லெழுத்தோடு இணைந்தபோது ஒரு புது ஒலியை உண்டாக்கித் தருகின்றது. இதே நிலை 'பஞ்சு, பண்டு, கன்று, பந்து, கம்பு' போன்றவற்றில் காண முடியும். 'பஞ்சாட்சரம்' என்பதில் 'சா'வுக்குப் பதில் 'ஜா' போட வேண்டாமலே அந்த ஒலி இயல்பாகவே அமைவதைக் காண முடிகிறதன்றோ? இந்த உண்மையை இணராத காரணத்தாலேதான் பஞ்ஜி',,

'காஞ்ஜீபுரம்' என்றெல்லாம் பிழைபட எழுத வேண்டியுள்ளது, இந்த உண்மையைத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற பெருநூல் எழுதிய கால்டுவெல் பெருமகனார் நன்றாக எழுதி (Convertibility of surds and sonants) உள்ளார். இப்படியே எழுத்துக்களின் இனச் சேர்க்கையினாலே தேவையான புதுப்புது ஒலி அமைப்புக்களை ஆக்கும் முறையில் நல்ல தமிழில் எல்லாவற்றையும் எழுத முடியும்.

'க, ங' போன்ற வல்லின மெல்லின இணைப்புக்களை அறிந்தால், பல பிழைகளை நீக்கலாம் எனக் கண்டோமல்லவா? ஆம்! அந்த இணைப்பு முறை ஒழுங்காகக் கையாளப் பெற்றால், தவறுகள் நீங்குவதோடு, எழுதும் மொழியும் நல்ல மொழியாக அமைந்துவிடும். சிலர் 'வன்து', 'செந்று', 'பண்றி' போன்ற முறையில் சொற்களை எழுதுகின்றனர். இவை தவறு உடையவை என்பது நன்கு தெரிகின்றதே! இவை சாதாரணப் பள்ளிப் பிள்ளைகளைக் கூடச் சிரிக்க வைக்கும் பிழைகள் அல்லவா? ஆம்; அப்படி இருந்தாலும், ஏன் இந்தப் பிழைகள் உண்டாகின்றன? எழுபவர்கள் இன எழுத்துக்களின் அமைப்பை உணர்ந்து கொள்ளாமையே இதற்கு முக்கிய காரணமாகும். 'து'வ்வுக்கு முன் அதன் இனமாகிய 'ந'வ்வும், 'று'வ்வுக்கு முன் அதன் இனமாகிய 'ன'வ்வும் வரும் என்ற அடிப்படையை நன்கு புரிந்து கொண்டால், இத்தகைய பிழைகளை அறவே நீக்கிவிடலாம். இந்த உண்மை புரிந்துவிட்டால் தமிழில் மூன்று 'ண'கர, 'ந'கர, 'ன'கர ஒலி எழுத்துக்கள் ஏன் இருக்கின்றன என்ற கேள்வியே உண்டாகாது அல்லவா? ஆம்! தமிழில் ஒரே ஒலியில் மூன்று எழுத்துகளும், இரண்டு எழுத்துக்களும் இருப்பனவாக எண்ணினாலும், ஆராய்ந்து பார்த்தால், ஒலிக் குறிப்பும் அவை வழங்கும் இடமும் அமையும் முறையும் வழக்கும் நோக்க

வேறுபட்டே நிற்கும் என்பது நன்றாக விளங்குமமன்றோ! இந்த அடிப்படையைப் பற்றியே ஒரு பெருநூல் எழுதிவிட லாம். எனினும், விரிவு அஞ்சி நான் இந்த அளவோடு அமை கின்றேன்.

இனித் தமிழில் உள்ள எழுத்து முறையில் மற்றொன்றை யும் இங்கே கூறலாம் என எண்ணுகின்றேன். தமிழில் எல்லா எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வாரா. அவ் வாறே எல்லா எழுத்துக்களும் மொழிக்குக் கடைசியில் வாரா. இடையிலும் எல்லா மெய் எழுத்தும் ஒன்றை ஒன்று இணைந்து வாரா. இவை பற்றியெல்லாம் அறிந்து கொள்வது கடினமன்று. சற்றுக் கூர்ந்து நினைத்துப் பார்த்தால் நன்றாக விளங்கிவிடும் சொல்லுக்கு முதலில் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும், **க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங** என்ற பத்து மெய் எழுத்துக்களும் வரும் மெய் எழுத்துக்கள் தாமாகவே முதலில் இடம் பெற இயலாது என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும். மெய் அல்லது உடம்பு தானே இயங்காது; அதில் உயிர் சேர்ந்த பிறகே அதன் இயக்கம் உண்டாகும். இது உலக இயற்கை. இதுவே எழுத்துக்களுக்கும் பொருந்தும். மெய் எழுத்தோடு உயிர் எழுத்துச் சேர்ந்தாற்றான் அதன் இயக்கம் தெரியும். எனவே, இங்கே மொழிக்கு முதலில் வரும் மெய் எழுத்துக் கள் என்பன, அவை உயிரோடு கூடிய உயிர்மெய் எழுத்துக் களேயாகும். ஒவ்வொரு மெய்யும் பன்னிரண்டு உயிர் களோடும் சேரும். அப்படியானால், இங்கே குறிப்பிட்ட மெய் எழுத்துக்கள் பத்தும் பன்னிரண்டு உயிர் எழுத்து களோடும் சேர்ந்தும் மொழிக்கு முதலாக வருமா என்ற ஐயம் ஏற்படுமல்லவா? ஆம்: அந்த ஐயத்தைப் போக்கு வதற்காகவே விளக்கமாகத் தொல்காப்பியரும் நன்னூலாரும் சில சூத்திரங்கள் இயற்றியுள்ளார்கள். அவை அனைத்தை யும் அறிய வேண்டும்.

மேலே கூறிய பத்து மெய் எழுத்துக்களில் 'ஞ, ங' என்ற இரண்டும் இச்காலத்தில் மிகக் குறைந்தே மொழிக்கு முதலில் வருகின்றன. 'ங' என்ற எழுத்துக்குச் சொல்லே இல்லை. அந்தக் காலத்தில் இரண்டொரு சொற்கள் இருந்திருக்க லாம் எனவேதான் எழுத்துக்களை வகைப்படுத்திய நன்னூலார். இவை இரண்டையும் வைப்பு முறையில் கடைசியில் வைத்தார். அதிலும் 'ங'வ்வே இறுதியில் உள்ளது. க, த, ந, ப, ம என்ற ஐந்து மெய் எழுத்துக்களும் எல்லா உயிர் எழுத்துக்களுடனும் சேர்ந்து வரும்; பிற சிலவற்றோடு மட்டும் சேர்ந்து வரும். இவ்வாறு தமிழில் இன்னின்ன எழுத்துக்களே மொழிக்கு முதலாக வரக் கூடியன என்பதை அறியலாம்.

இன்று நாட்டில் பலரால் இந்த வரையறை கைக் கொள்ளப்படவில்லை என்பதைக் காண்கிறோம் அதனால், நல்ல தமிழ் நலிவுறுகின்றது. பிற நாட்டு மொழிகள் தமிழோடு கலக்கின்ற காரணத்தாலும் தமிழின் இந்த வரம்பு மீறப்படுகிறது. உதாரணமாக 'ர' என்ற எழுத்தைக் காண் போம். இவ்வெழுத்துத் தமிழில் மொழிக்கு முதலில் வாராது; ஆனால், இன்று ரப்பர், ராமன், ரம்பம் போன்ற பல சொற்களைக் காண்கிறோம். இவ்வாறே மொழிக்கு முதலில் வாராத 'ல' என்ற எழுத்தை முதலாகக் கொண்டு லட்சுமி, லட்சுமணன், லட்சம் போன்ற சொற்கள் தமிழில் வழங்குவதைக் காண்கிறோம். இலக்கண முறையில் கண் டால் இவற்றைப் பிற மொழிச் சொற்கள் என்று திட்ட மாகச் சொல்லி விடலாம். இவ்வாறாய பிற மொழிச் சொற் களைச் சேர்ப்பதா அல்லது வேண்டாவா என்ற ஆராய்ச்சி நமக்கு இங்கு வேண்டா. ஆனால், தமிழர்தம் செல் விருந் தோம்பி வருவிருந்து காணும் மனப்பான்மை தமிழ் எழுத்துக் களுக்கும் உண்டு. அவை அவ்வாறு தமிழில் வந்து வழங்கும் சொற்களை ஏற்றுத் தம் நிலைக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ளும். இரப்பர், இராமன், இரம்பம், இலக்குமி,

இலட்சுமணன், இலட்சம் என்று உயிர் எழுத்தை முதலிற் கொண்டு அவற்றைத் தமிழில் வழங்கலாம். இதுபோன்றே ரத்தினம் இரத்தினம் என்றும், லோகம் உலோகம் என்றும் மாற்றி வழங்கப் பெறுகின்றன. இந்த அமைப்புப் பற்றி பின்னர் வேண்டும்போது காணலாம். இவ்வாறு வழங்கும்போது அவை தமிழ் மரபை ஒட்டித் தமிழ் ஓசை கொண்டு தமிழாகவே மாறிவிடுகின்றன. இது இலக்கண நூலோர் கொண்ட நெறி. இவ்வாறு மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களை எண்ணி அதன்படி எழுதின், அதுநல்ல தமிழாகவே அமையும்.

இனி, மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்களையும் இவ்வாறு திட்டமாகக் கணக்கிட்டுள்ளனர். அவையும் எவ்வெவ்வாறு கடைசியில் வந்து வழங்கப்பெறும் என்றும், மெய் எழுத்துக்கள் எந்த உயிர்களோடு சேர்ந்து வரும் என்றும் இலக்கணம் காட்டியுள்ளார்கள் அப்படியே சொல்லின் இடையில் எவ்வெவ்வாறு மெய் எழுத்துக்கள் தம்முள் கலந்து மயங்கி வரும் என்பதையும் திட்டமாக வலியுறுத்தியிருக்கிறார்கள், அவற்றை அறியாத காரணத்தாலேதான் பல சாதாரணப் பிழைகளும் உண்டாகின்றன 'முயற்ச்சி பயிற்ச்சி, பற்ப்பொடி' எனச் சிலர் இயையா மெய்களை இயைத்து எழுதுவதைக் காண்கிறோம். இது தவறு என்பது நன்கு தெரிகிறதல்லவா! 'ற்' என்பதை அடுத்து மற்றொரு வல்லினமெய் வாராது என்பதைத் திட்டமாக அறிந்தால் இப்படி எழுதுவோமா? இப்படியே சில எழுத்துக்களை அறியாது பயன்படுத்துகின்றோம். 'போல்ச் சொன்னான்' வேல்க் குத்தினான்' என்பன போன்ற தொடர்களையும் எழுதுகிறோம். இவை இடையில் வழங்கும் எழுத்துக்களைப் பற்றி அறியாமையினால் வரும் பிழைகளே. இவைகளையெல்லாம் நீக்கத் திட்டமான இலக்கண வரம்பு தமிழில் உண்டு. தொல்காப்பியரும், பவணந்தியாரும் அவற்றைச் சூத்திரங்களாக எழுதி வைத்து விட்டார்கள். இன்று பலர்

அவற்றை விளக்கமாக உரை நடையில் எழுதி வருகிறார்கள். அவற்றைப் பார்த்துச் சாதாரணமான பிழைகளையெல்லாம் திருத்திக்கொள்ளலாம். மற்றும் இவையெல்லாம் சொல்லவும் எழுதவும் பழக்கத்தில் வருவனவே. அதனாலேதான் 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்ற கூற்று எழுந்தது. பல முறை சொல்லியும் எழுதியும் பழகின், பல பிழைகள் நம்மை அறியாமலே நம்மை விட்டு நீங்கிவிடும். இவ்வாறு மொழியின் அடிப்படையாகிய எழுத்துக்களையும், அவற்றின் அமைப்பு முதலியவற்றையும், அவை எவ்வெவ்வாறு சொற்களில் அமைக்கப்பெறும் என்பன போன்ற நிலைகளையும் ஓரளவு அறிந்துகொண்டாலும், நல்ல தமிழ் எழுதப் பழகிவிடலாம். எல்லாவற்றையும் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நியதி இல்லை; அது முடியாததுங்கூட. எனவே, இவற்றில் அடிப்படையாக உள்ள சிலவற்றை மட்டும் அறிதலே போதும்; நல்ல தமிழ் பழக்கமாகிவிடும். அதற்கு உரிய வழிகளை நன்றாகக் காணலாம்.

# 3. சொற்களின் அமைப்பு

தமிழ் எழுத்துக்களின் அமைப்பைப் பற்றியும் அவற்றின் உச்சரிப்பு முதலியன பற்றியும் எழுத்துக்களின் சேர்க்கையினால் உண்டாகின்ற ஒலி மாறும் நுணுக்கங்களைப் பற்றியும் முன் ஒருவாறு பார்த்தோ மல்லவா! அந்த எழுத்துக்களைப் பற்றி இன்று நாட்டில் பேசப்பெறும் இரண்டொன்றைப் பற்றிக் கண்டு மேலே செல்லலாம்.

தமிழில் எழுத்துக்கள் அதிகம் என்றும், அவற்றின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்றும் சிலர் கூறுகின்றனர். தட்டெழுத்துப் (Type writing) போன்ற சாதனங்களுக்கு எழுத்துக்களின் எண்ணிக்கை குறைந்திருக்க வேண்டுமென்றும் சிலர் சொல்லுகின்றனர். உலக மொழியாகிய ஆங்கிலத்திற்கு இருபத்தாறு எழுத்துக்கள் இருப்பது போன்று தமிழுக்கும் எழுத்தைக் குறைக்கலாம் என்று எடுத்துக்காட்டி விளக்குவர். அவர்கள் சொல்லும் வாதங்களிலெல்லாம் ஓரளவு உண்மை இருப்பது போலத் தெரிந்தாலும், அவர்கள் காட்டுவது போன்று தமிழில் எழுத்துக்கள் அத்தனை அதிகமாக இல்லையே! தமிழில் உள்ள எழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை முப்பதுதான்.

'எழுத்தெனப் படுவ
அகர முதல னகர இறுவாய்
முப்பஃது என்ப.'

எனத் தொல்காப்பியம் திட்டமாக வரையறுத்துக் கூறுகின்றது. அதையே நன்னூலார் 'உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே', (59) எனக் காட்டுகிறார். இந்த முப்பதுடன்

சார்ந்து வரும் மூன்று வகை எழுத்துக்களைத் தொல்காப்பியம் குறிக்கிறது. நன்னூலார் அவற்றின் எல்லையைப் பெருக்கிக் காட்டி எல்லாவற்றையும் அவர் காலத்துக்கு ஏற்ப 269 எழுத்துக்கள் சார்பெழுத்துக்கள் என அமைத்துவிட்டார். ஆனால், சற்று நின்று நினைத்துப் பார்ப்பின், முப்பது தான் தமிழ் எழுத்துக்கள் என்பதும், அவ்வெழுத்துக்கள் தனித்தும், ஒன்றை ஒன்று தழுவியும், அவ்வாறு தழுவுங்கால் ஒலி மிக்கும் குறைந்தும் உறழ்ந்தும் நீண்டும் இன்னும் பல வகையிலும் வருவனவற்றையெல்லாம் கூட்டுச் சார்பெழுத்து எனக் கணக்கிட்டார் களென்பதும், அவை அனைத்தும் அந்த முப்பது எழுத்துக்களிலேயே அடங்கிவிடும் என்பதும் நன்கு விளங்கும். ஆய்தம் என்னும் மூன்று புள்ளி (ஃ) வடிவுடைய எழுத்தை ஒரு சிலர் அம்முப்பதில் அடங்காது என வாதிடலாம். அப்படியே கொண்டாலும், தமிழ் எழுத்துக்கள் முப்பத்தொன்றாகும். ஆனால், நான் முன்னே காட்டியபடி நன்னூலார் கூறும் எழுத்துப் போலி இலக்கண அமைதியில் சூத். (125) 'ஐ' 'ஔ' என்ற இரண்டும் 'அ+ய்', 'அ+வ்' என்ற முறையில் கூட்டெழுத்தாகக் கொள்ள இடமிருக்கின்றமையால், தமிழ் எழுத்துக்கள் 'இருபத்து ஒன்பதே' எனக் கொள்ள இடமுண்டு இவற்றிலிருந்துதான் பிற எழுத்துக்கள் அமைகின்றன.

ஆங்கிலத்தில் இருபத்தாறு எழுத்துக்களை வைத்துக் கொண்டு எந்தச் சொல்லையும் எழுதுகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், அதனால் எழுத்துக்களின் உச்சரிப்பும், கூட்டுமுறையும் எத்தனையோ வகையில் மாறுபடுகின்றனவே ! இன்றைக்கு அமெரிக்க ஆங்கில உச்சரிப்புக்கும் சொற்களின் எழுத்து அமைப்புக்கும் இங்கிலாந்தில் வழங்கும் அவற்றின் அமைப்புக்கும் எத்தனையோ வேறுபாடுகளைக் காண்கிறோம். நான் அண்மையில் இரு நாடுகளுக்கும் சென்று வந்தபோது அந்த வேறுபாட்டை நன்கு உணர்ந்தேன். சில சொற்களில் சில எழுத்தொலிகள், அவ்வெழுத்

துக்கள் இருந்தும் உச்சரிக்கப்படாமல் விடப்பெறுகின்றன. 'Coffee' என்ற சொல் 'Kof'i, என்ற ஒலியில் பேசப்பெறு கின்றது. 'One' என்ற சொல் 'Won' என்ற வகையில் ஒலிக்கப் பெறுகின்றது. 'Edge' என்ற சொல் 'ej' என்று உச்சரிக்கப்பெறுகின்றது: 'Educate' என்ற சொல்லில் 'd' யின் ஒலி மாறுபடுவதைக் காண்கின்றோம் 'But', 'Put', 'Cut'—இம்மூன்றிலும் வரும் 'u' வின் ஒலி ஒரே மாதிரியாக இருக்கிறதா என்று உச்சரித்துப் பார்த்தால், மாறுபாடு நன்கு தெரியும். எனவே, எழுத்துக்கள் மிகக் குறைவாய் இருப்பதனால் இந்த மாறுபாடுகள் ஏற்படுகின்றன; இவற் றுடன் சொற்களை எழுதும்போதும் எழுத்துப் பிழைகள் அதிகம் இடம் பெறவும் வழி உண்டாகிறது தமிழில் 'க' என்ற எழுத்தை ஆங்கிலத்தில் 'Ka' என்று இரண்டு எழுத் தாலேதான் எழுத வேண்டும். அதுவே சில இடங்களில் 'Ca' என்றும் எழுதப்பெறுகின்றது. 'Ka' அல்லது 'Ca' என்ற இரண்டு எழுத்துக் கூட்டுத் தமிழில் வரும்போது 'க' வும் 'க்+அ' என்ற இரண்டு எழுத்துக்களின் சேர்க்கையே என நன்கு உணர முடியும். தமிழில் அவ்வாறு சேர்ந்த எழுத்துக்களையெல்லாம் தனித்தனியாகப் பிரித்துச் சார் பெழுத்துக்கள் என வகைப்படுத்திவிட்டார்கள். அதுபோல ஆரியம், தெலுங்கு போன்ற நம் நாட்டு மொழிகளிலும் இந்த வகையினைக் காணலாம். எனவே, தமிழில் முதல் எழுத்துக்களாகக் கணக்கிடும் முப்பதே எழுத்துக்கள் உள்ளன எனக் கொள்ளல் பொருந்தும். வேறு சில மொழிகளில் தமிழைக் காட்டிலும் ஒலி மாறுபாட்டிலும் பிறவற்றிலும் சில எழுத்துக்கள் அதிகமாகவும் உள்ளன அவை பற்றி யெல்லாம் நாம் இங்கே நினைக்க வேண்டா. 'தமிழில் எழுத் துக்கள் அதிகம் உள்ளன; அவற்றைச் சுருக்க வேண்டும்' என்பார்க்கு அவ்வாறு தமிழில் அதிக எழுத்துக்கள் இல்லை எனவும் எனவே குறைவு தேவை இல்லை எனவும் காட்டவே இவ்வளவும் எழுதவேண்டி வந்தது.

இனி, இவ்வெழுத்துக்களில் 'அ, ஆ, இ, ஈ' என்ற உயி ரெழுத்துக்களில் ஐந்தின் வகையினையும் குறிலை மட்டும் கொண்டு நெடிலுக்குப் பொதுவாக ஒரு குறியிடு கொள்ள லாமே என்பர் சிலர். அது தட்டெழுத்துக்குச் சாதகமாகும் என்பர். இன்னும் சிலர் வேறு வகை மாற்றங்களை விரும்பு வர். எனவே அவையெல்லாம் காலத்துக்கு ஏற்ற, சமயத்து கேற்ற வாழ்வாக அமையுமே தவிர, திண்ணிய முடிவா காது. பிற மொழிகளைக் கண்டு ஒரு சிலர் இத்தகைய மாற்றங்களைக் கொள்ள நினைத்தால் அது தவறாகும், தமிழின் தனித்தன்மை இந்த 'நெடுங்கணக்கு' என்ற எழுத் தமைப்பு முறையிலேயே உள்ளது. எந்த மொழியிலாவது எழுத்துக்கு 'கணக்கு' அதிலும் 'நெடுங் கணக்கு' என்ற பெயர் உண்டா என எண்ணிப் பார்க்கவேண்டும், தமிழைக் காட்டி லும் அதிக எழுத்துக்களை உடைய வடமொழி உலகப் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் போற்றப்படுகிறதே.

இனி, இந்த எழுத்துக்களால் ஆக்கப் பெறும் சொற் களைப் பற்றிக் காணலாம். மொழி சொற்களால் ஆக்கப் பெறுவது. வெற்று ஒலி அளவாக அமைந்த எழுத்துக்கள் அந்த அளவிலேயே வரி வடிவம் பெறாது அமைந்து விடுமே யானால், அவை வெறும் பேச்சு வழக்கில் உள்ள திருந்தாத மொழிகள் எனக்கொள்வர். அப்பேச்சு வழக்கில் உள்ள ஒலிக் கூட்டங்கள் எழுத்தில் வரி வடிவம் பெற்ற பிறகுதான் ஒரு மொழியைப் பற்றி நன்றாக அறிந்து கொள்ள முடியும். பேச்சு வழக்கில் மட்டும் இருந்தால். ஒரே சொல்லைப் பல் வேறு வகையில் பலர் உச்சரிக்கக்கூடும். அப்போது அதன் உண்மை இயல்பு நன்றாகத் தெரியாது. என்று தோன்றிற்று என அறியலாகாத தமிழ் வரி வடிவம் பழைய இலக்கண மாகிய தொல்காப்பியத்தில் கண்ட வகையிலேதான் அமைந் திருக்கிறது. இரண்டோ ரெழுத்துக்களில் சில மாற்றங்கள் இருக்கலாம். அவற்றை முன்னமே காட்டியிருக்கிறேன்.

அந்த எழுத்துக்கள் தனியாகவும் தொடர்ந்தும் சொற்களா கின்றன என்பதையே காணல் வேண்டும். தமிழ் எழுத்துக் களால் தொடர்ந்து எழுதப்படுகின்ற எதையும் சொல் என்று சொல்ல முடியாது. சொல் என்பதற்கு இலக்கணம் கூறு கின்றவர்கள் அது பொருள் தரவேண்டிய ஒன்றாகும் என்பர். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே,' (639) என்பது தொல்காப்பியம். ஓர் எழுத்தே தனித்து நின்று பொருள் தருமாயின், அதுவும் சொல்லாகும். 'பூ' என்பது ஓர் எழுத்து இது மலர் என்று பொருள்படுகிறது. எனவே, இது சொல்லே. 'சலசல' என்ற ஒலியைக் குறிக்க வரும் நான்கு எழுத்துக் கூட்டம் ஒரு பொருளையும் முடிந்த முடி பாகத் தரவில்லை. எனவே, அது சொல்லாகாது. இவ்வாறு வருவனவற்றை ஒலிக்குறிப்பு, அசை எனப் பல வகையில் பிரித்து வைக்கலாம். ஆனால், அவை சொல்லாகா. எனவே, சொல் என்பது ஏதாவது முற்றிய பொருளைத் தர வேண்டுமென்பதும், அச்சொல் தனி எழுத்தாலும், சில பல எழுத்துக்களாலும் ஆக்கப் பெறும் என்பதும் நன்கு தெரி கின்றன. இனி அச்சொற்களின் அமைதியையும், வகைகளை யும் காணலாம்.

சொற்கள் உலகப் பொருள்களின் நிலையை விளக்கவும், உள்ளத்து உணர்வை வெளிக்காட்டுவதற்கும் பயன்படு கின்றன. உலகில் எத்தனையோ உயிர்கள் வாழ்கின்றன. உயிரற்ற மேசை, நாற்காலி போன்ற பொருள்களும் உள் ளன. இவ்வுயிர்ப் பொருள்களையும் பிறவற்றையும் விளக்கிக் காட்டப் பயன்படுவனவே சொற்களாகும். இச்சொற்களை ஏன் எவ்வாறு உண்டாக்கினார்கள் என்பதை நம்மால் இன்று அறிய முடியாவிட்டாலும், எல்லாம் காரணங்களின் அடிப்படையிலேதான் உண்டாயின என்பதை ஆராய்ச்சி யாளர்கள் விளக்கிக் காட்டுகிறார்கள். கால்டுவெல் என்ற மேலை நாட்டு அறிஞர், தமது **ஒப்பியல் மொழி நூலில்** ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்ணுப் பெயர்களின் தோற்ற

அமைப்பை நன்றாக ஆராய்கின்றார். அவற்றுள் இரண்டொரு முறைகள் சிலர் கருத்துக்கு மாறுபட்டனவாகக் காணினும், அம்முறைப்படி செய்த ஆராய்ச்சியை உலகம் என்றும் போற்றும் என்பது உறுதி. அவ்வாறு சொற்களையும் அவற்றின் பொருள் நலத்தையும் அப்பொருள் பயக்கும் வேர்ச் சொற்களையும் கொண்டுதான் சொற்களை இன்னின்ன மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை எனப் பிரிக்கின்றனர். எனவே, சொற்களின் அடிப்படையே மொழி ஆராய்ச்சிக்கு முக்கியமானது.

இச்சொற்களைத் தமிழில் நான்காக வகைப்படுத்தியுள்ளனர் என்றாலும், ஆராய்ந்து பார்த்தால் இவை இரண்டாகவே அடங்கும். அதனாலேதான் தொல்காப்பியர்,

**'சொல்லெனப் படுப பெயரே வினையென்று**
**ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே.' (642)**

என்று இரண்டாக்கிப் பின்,

**'இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்**
**அவற்றுவழி மருங்கின் தோன்றும் என்ப' (833)**

எனப் பெயரையும் வினையையும் சார்ந்து வரும் இடைச் சொல்லையும் உரிச்சொல்லையும் சேர்த்தனர். எனவே தமிழில் பெயர்ச்சொல், வினைச்சொல் என்ற இரண்டுமே அடிப்படை இவற்றைச் சார்ந்து பிற சொற்கள் வழக்கத்தில் வரும் என அறிந்து கொள்ளல் வேண்டும்.

தமிழில் வழங்கும் இந்தப் பெயர்ச் சொற்கள் எதை எதைக் குறிக்க வருகின்றன என்பதை அறிந்துகொண்டால் இவற்றை நன்றாக வாக்கியங்களில் பயன்படுத்த முடியும். பெயரையும் வினையையும் கொண்டு ஒரு பொருளின் தன்மை

யையும், செயல், வாழ்வு, வகை இன்ன பிறவற்றையும் நன்றாக உணர்ந்துகொள்ள முடியும் பெயர்ச்சொல் என்பது திணை, பால், எண், இடம் இவைகளைக் குறிக்கப் பயன் படும். ஒரு சொல்-பெயர்ச்சொல்- கூறின், அது கொண்டு அது உணர்த்தும் பொருளை அறிந்துகொள்ள முடியும். 'மனிதன்' என்ற ஒரு பெயர்ச்சொல் அச்சொல்லுக்கு உரிய வன் ஒருவன் என்பதையும், ஒருமையையும், படர்க்கை இடத்தையும் குறிக்கும் இந்த 'மனிதன்' என்ற சொல்லின் பொருளைச் சில எழுத்துக்களோ அன்றி ஓர் எழுத்தோ அத னுடன் சேர்ந்து ஓரளவு வேறுபடுத்தும். அவ்வாறு வேறு படுத்த வரும் எழுத்துக்களை வேற்றுமை உருபுகள் எனவே வழங்குவர். எனவே, பெயர்ச்சொல் என்பது, திணை, பால், எண், இடம், வேற்றுமைகளைக் கொண்டு வரும் என அறிய வேண்டும்.

திணை என்பது உயிரினத்தின் பிரிவு. இந்தப் பிரிவைப் பழங்காலத்தில் தமிழர் நன்றாக ஆராய்ந்து பிரித்துள்ளார் கள். உயிர்களுக்கு ஆறுவகை அறிவு உண்டு என்றும், ஆறாவது அறிவே நல்லதையும் தீயதையும் அறியும் பகுத் தறிவு என்றும் அறிவோம். ஆம்! அந்தப் பகுத்தறிவை உடைய உயிர்களே உயர் திணை. அந்த உணர்வு மக்கள் எனப்படும் புலன் உணர்வோடு பகுத்தறிவும் பெற்றவர் களுக்கே உண்டு; இதனாலேதான் தொல்காப்பியர் உயர் திணை என்மனார் மக்கட் சுட்டே ' (484) என்றார். இந்தப் பகுத்தறிவு அற்றவர் மனிதராயினும், அவர் அஃறிணையிலே சார்த்தி எண்ணப்படுவர். உயிருள்ள உயிரற்ற பிற பொருள் கள் அனைத்தும் அஃறிணைகளே. எனவே, சொல்லின் எடுத்துக்காட்டு வழியிலேயே நலம் நிறைந்த அறிவுக்கு உயர்வு காட்டிவிட்டார்கள் தமிழ் இலக்கணப் புலவர்கள். இனி அந்த உயர்திணையில் ஆண், பெண் வேறுபாடும் ஒருமை பன்மை வேறுபாடும் உண்டல்லவா? அன்றியும் சொல்லுவோன், கேட்போன், சொல்லப்படுவோன் என்ற

மூன்று இடங்களும் உண்டல்லவா? இவற்றை எல்லாம் அச் சொல்லே விளக்கிவிடும். ஆண் பெண் எனப் பிரிக்க முடியாத சிலதொகைச் சொற்களைப் பொதுவாகவே சொல்வர். 'மக்கள்' என்ற சொல் அதற்கு உதாரணமாகும், இவற்றோடு வேற்றுமை உருபுகள் கலந்து பொருளை வேற்றுமை செய்வதே வேற்றுமை. அவற்றையெல்லாம் தனித்தனியாக விளக்கவேண்டாமெனக் கருதுகின்றேன். உதாரணத்துக்கு ஒன்று காட்டிச் செல்லலாம் 'மாணவன் நூலை எடுத்தான்' என்ற வாக்கியத்தில், 'மாணவன் நூலை' என்ற இரண்டு பெயர்ச்சொற்கள் வருகின்றன, 'மாணவன்' என்ற சொல்லில் வேறுபாடு இல்லை. 'நூல்' என்ற பெயர்ச்சொல்லை 'நூலை' என்று செயப்படுபொருளாக உபயோகிப்பதற்கு 'ஐ' என்ற ஓர் உருபு பயன்பட்டது. செயல் செய்யும் மனிதன் எழுவாயாகிறான். எடுத்தான் என்பது அவன் தொழிற்படும் பயனிலை. எடுக்கப்பட்டது 'நூல்' ஆம்; இந்தச் செயப்படு பொருளை விளக்க வருவது 'ஐ' என்ற வேற்றுமை உருபு. இதை இரண்டாம் வேற்றுமை என்பர். நூலின் பொருளை வேறுபடுத்தியதால் இது வேற்றுமையாயிற்று. இந்த உதாரணம் வழியாக நாம் மற்றொன்றும் அறிந்து கொண்டோம். அதுதான் சாதாரணமாகப் பள்ளிப் பிள்ளைகள் தொடக்கத்தில் தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்று: ஒரு வாக்கியத்தில் எழுவாய் பயனிலை செயப்படுபொருள் அறிவது. இவற்றைப் பிரித்து அறிந்து கொள்ள ஒருவன் கற்றுக்கொண்டானானால், அவன் எந்த நூலையும் எடுத்து நன்றாகப் படித்துப் பொருள் கண்டு கொள்வான். எனவே, இது மிக முக்கியமாகும். செய்பவன் எழுவாய். இந்த எழுவாயை முதல் வேற்றுமை என்றும் கூறுவார்கள். அவன் செய்யும் வினையே பயனிலை. அவனால் செய்யப்படும் பொருளே செயப்படுபொருள் இம்மூன்றுமே வாக்கியங்களில் வருவன. சில வாக்கியங்களில் செயப்படு பொருள் இராது. எனவே, இம்மூன்றையும் முறையாகப் பிரித்து அறியக் கற்றுக்கொண்டால் நல்ல தமிழில் பேசவும்

எழுதவும் இயலும் என அறிதல் வேண்டும். பெயர்ச்சொல் பற்றி அறிய வேண்டிய வேறு சிலவற்றைப் பற்றிப் பின்னால் தேவைப்படும்போது அறிந்து கொள்ளலாம். இனி வினைச் சொல்லைப் பற்றிக் காண்போம்.

வினைச்சொல்லே மொழிக்கு முக்கியமாகும். பல வினைகளின் முடிவுகளே மொழிகளைப் பற்றிய வரலாற்றை நமக்குக் காட்டுகின்றன. இவ் வினைச்சொல், முன் பெயர்ச் சொல்லுக்கு காட்டிய இலக்கணங்களைக் கொண்டது திணையும், பாலும், எண்ணும், இடமும் வினைக்கும் உண்டு. ஆனால், வினைச்சொல் வேற்றுமையை ஏற்றுக்கொள்ளாது; அதற்குப் பதிலாகக் காலம் காட்டும். இறந்தகாலம், நிகழ் காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களைக் காட்டுவது வினையேயாகும். ஆம்; உலகமே இந்த முக்கால எல்லையில் தானே அமைகின்றது. பெயர்ச் சொல்லாகிய எழுவாயைச் சொல்லாமல், வினைச்சொல்லை மட்டும் குறித்தாலும், எல்லாவற்றையும் அறிந்துகொள்ள இயலும். 'வந்தேன்' என்பது வினைச்சொல் நான் என்ற எழுவாயைச் சேர்க்கா விட்டாலும் இது தன்மையில் ஒருமையைக் காட்டுகிறதல் லவா? 'வந்தாள்' என்பதில் படர்க்கை, உயர்திணை, பெண் பால், ஒருமை இறந்த காலம் இத்தனையும் விளங்குகின்றன அல்லவா? 'அவள்' என்ற எழுவாய் மறைந்திருந்தாலும், வினை முடிபு அவளையும் காட்டி அவள் செயலுக்கு உரிய அனைத்தையும் காட்டுகிறது. ஆனால், 'அவள்' என்ற பெயர்ச்சொல்லை மட்டும் குறித்தால் 'அவள் என்னானாள்?' என்ற வினாவிற்கு விடை கண்டே ஆகவேண்டுமல்லவா? எனவே, வினையே மொழிக்கு அடிப்படையாகின்றது.

தமிழில் இலக்கணம் அமைத்த பெரியவர்கள் தம் வாழ்வை ஒட்டியே அவ்விலக்கண அமைதியையும் போக்கை யும் சொல்லாக்கங்களையும் அமைத்தார்கள் என்று கொள்ள லாம். எழுத்துக்கள் மொழிக்கு அடிப்படை. அவற்றை

உயிர், மெய் எனப் பிரித்தனர். உலக வாழ்வுக்கும் உயிரும் மெய்யும் அடிப்படையல்லவா! இரண்டும் பிரியின் உலக வாழ்வு ஏது? மொழியின் வாழ்வும் அப்படியே, உயிர் மெய் யோடு கலந்து இயல்பாகவே இயங்காவிட்டால், மொழி ஏது? 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.' (204) என்று நன்னூலார் இந்த உலக இயல்பை இலக்கணத்தின் மேல் ஏற்றிக் காட்டியுள்ளார். எப்படி உயிர் உடம்போடு கூடிய வாழ்வு சேர்க்கை வாழ்வோ — கூட்டு வாழ்வோ— அது போன்றேதான் உயிர்மெய் எழுத்தின் வாழ்க்கையும் அமைகின்றது உயிர் நீங்கின், உடம்பின் வாழ்வு இல்லை; உயிரின் நிலையும் அறிய முடியாது என்றாலும், உலக வாழ்வுக்கு அடிப்படை அந்த உயிரும் உடம்புமேதான். அதே நிலை எழுத்துக்கும் பொருந்தும். ஆகவேதான் முன்பு உயிர், மெய் என்ற இரு வகை எழுத்துக்களைத் தவிர்த்துப் பிற வற்றைத் தனி எழுத்துக்களாக எண்ண வேண்டா என்று சொன்னேன்.

இங்கே வினைச் சொல்லைக் கண்டோம். உலக வாழ் விற்கே, வினை முக்கியமானது அவரவர் வினை வழியே உலக நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பர் பழம்பிறப்பில் பற்றுக்கொண்டவர். இல்லாதாருங்கூட, அவர்தம் வினை அல்லது செயல் வழியேதான் வாழ்க்கை நடத்துகின்றனர். வினை என்ற சொல் சென்ற காலத்து முன்பிறப்பின் செயலை உணர்த்தி அதன் பிந்திய ஆக்கத்தையும் உணர்த்து கின்றது; அன்றி, அவ்வப்போது செய்யும் வினையையும் உணர்த்துகின்றது. இந்த வினையே வாழ்வின் அடிப்படை. வினை இன்றேல், செயல் இல்லை. செயலற்ற உயிரின் நீங்கிய உடம்புக்கு வினை உண்டோ? இல்லை. அவ்வுடம் பின் நீங்கிய உயிர் மறுபடி உடலோடு சேர்ந்தால்தான் வினை உண்டு. இங்கும் அப்படித்தான். உயிர் உடலின் நீங்கி னும் சில சமயம் இயங்கும் எனச் சிலர் சொல்வது போன்று, 'ஈ' என்பது போன்ற வினைகளும் உள்ளன. மொழிக்கு

வினையே முக்கியமானது. வினைச்சொல் இன்றேல், மொழியால் பயன் இல்லை எனவே, தமிழ் இலக்கண நூலோர் வழங்கிய பெயர்கள் வாழ்வின் நிலைக்களன்களாகவே அமைகின்றன. இந்த இலக்கண அமைதியை நன்கு ஆராய்ந்தால், இன்னும் எத்தனையோ உண்மைகளைக் காண இயலும். நாம் அவற்றை விட்டு மேலே செல்வோம்.

வினைச்சொல் காலம் காட்டும் என்றேன் அல்லவா? ஆம்; செய்பவனுடைய செயலையும், அச்செய்பவனையும், காலத்தையும், கருவி, நிலம், செய்பொருள் என்ற ஆறு பிரிவையும் காட்டுவது வினை என்பார்கள். இவ்வாறு விளக்கமாகக் காட்டுவதைத் 'தெரிநிலை வினை' என்பார்கள். குறிப்பு வினை என்ற ஒன்றும் உண்டு அது செயலுக்கு உரியவனை மட்டும் காட்டுவது அது அதிகமாக வழக்கத்தில் பயின்று வாராதது என்றாலும், அது பற்றியும் அறியத்தான் வேண்டும். மேல் 'வந்தாள்' என்று பார்த்தோம். அதில் எல்லாப் பொருளும் விளங்குகின்றன. எனவே, அது தெரிநிலை வினை. இனிக் 'குழையினான்' என்பதைக் குறிப்பு வினை என்பர். 'குழையை உடையவன்' என்பது பொருள். இது 'அவன் குழையை உடையவன்' என்று வினைக்கு முதலாகிய அவனை மட்டும் உணர்த்துகிறது. இது பற்றி இவ்வளவே போதும்,

இனி இவ் வினை பற்றிய பல விளக்கங்கள் உள்ளன. ஒன்றின் வினை முடிந்தால் முற்றுவினை என்றும், குறைவாக நின்று தன் வினையை முடிக்க மற்றொன்றை அவாவி நின்றால் எச்சவினை என்றும் சொல்லுவர். ஒரு சொல் பெயர் எஞ்சி நின்றால் பெயரெச்சமென்றும், வினை எஞ்சி நின்றால் வினை எச்சம் என்றும் பெயர் பெறும். 'வந்தான்' என்பது முற்றுவினை 'வந்த மனிதன்' என்பதில் 'வந்த' என்ற வினை மனிதன் என்ற பெயர் எஞ்சி நின்றதால் பெயரெச்சம். 'வந்து போனான்' என்பதில் 'வந்து' என்ற வினை

போனான் என்ற வினை எஞ்சி நின்றதால் வினை எச்சம். இனி இவ்வினைச் சொல்லைத் தமிழ் இலக்கண நூலோர் பல உறுப்புக்களாகப் பிரிப்பார்கள். சொல்லைப் பாட்டின் சந்த இசைக்காகப் பிரிக்கும் முறை ஆங்கிலம் முதலிய மொழி களில் உண்டு. தமிழ், ஆரியம் போன்ற மொழிகளில் சொல் லைப் பல்வேறு வகையாகப் பகுத்து, அதன் ஒவ்வொரு பகுப் பும் இன்னின்ன காட்டும் என்று விளக்கும் முறை உண்டு. அவ் வாறு பிரிக்கும்போது அமையும் பகுதி அல்லது முதல் நிலை கொண்டே மொழியின் வரலாற்றை அறிவர். இந்திய நாட்டுப் பல்வேறு மொழிகளை ஆராயும் ஆராய்ச்சியாளர் கள் இந்த வகையில் இன்னின்ன சொற்கள் இன்னின்ன இனத் தைச் சேர்ந்தன எனக் கண்டு விளக்குவர். இன்று சில சொற்கள் தமிழ்ச் சொற்களா, ஆரியச் சொற்களா என்று எண்ணி எண்ணி 'மயங்கும்' நிலையெல்லாம் இந்த முதல் நிலையைச் சரியாக ஆராய்ந்து பகுத்துக் கண்டால் நிச்சயம் நீங்கும். எனவே, வினை மொழிக்கு முதலாக அமைவதோடு மொழிச் சிக்கல்களை நீக்கி அவ்வம்மொழி இனத்துக்கு உரிய சிறப்பியல்புகளைக் கெடாமலும் காத்துக் கொள்கிறது என்பதையும் நாம் உணர வேண்டும்.

அத்தகைய பகுப்புக்களில் **பகுதி, விகுதி, இடைநிலை** மூன்றுமே இன்றியமையாதன. பகுதி தொழிலையும், விகுதி செய்பவனையும், இடைநிலை காலத்தையும் காட்டும். இத்தகைய நுண்ணிய வகையில் எழுத்துக்களை அமைத்துச் சொல்லாக்கிப் பொருள் உணர வைக்கும் நிலை, ஒவ்வொரு சொல்லையும் பகுக்கும் காலந்தோறும் எண்ணி எண்ணி மகிழ வேண்டிய ஒன்றாகும். எனினும், இந்த அடிப்படை களை நன்கு உணராத பல மாணவர்கள்—ஏன்?—பெரியவர் களுங்கூட—இவற்றைப் பிரித்து வகை காண முடியாது மயங்குகின்றார்கள். அதற்குக் காரணம் இம்மூன்றையும் இணைக்க இன்னும் மூன்று உடன் வருவதேயாம். அவை, **சந்தி, சாரியை, விகாரம்** என்பன. இவை மூன்றும் இல்லாத

சொற்களை எளிதில் பிரிக்கலாம். இவை கலந்தால் பிரிப்பது சற்றுக் கடினம். எனினும், வீடு கட்டக் கற்களை உபயோகிக்கும் போது மணலும், நீரும், சுண்ணாம்பும், சிமிட்டியும் தேவையாவது போன்று, முடிந்த சொற்களை ஆக்கும்போது இவற்றை இடமறிந்து சேர்த்தேயாக வேண்டும். எனவே, இவையும் சொற்களுக்குத் தேவையாகின்றன. பிரிப்பவர் நன்கறிந்து பிரிக்க வேண்டும்.

வினைச்சொற்களின் பாகுபாடுகள் பல. அவற்றையெல்லாம் வழக்கொடு பின் விளக்க வரும் காலத்தில் காணலாம். இப்போது இந்த அளவோடு அமைவோம். இப்பெயர் வினைகளைச் சேர்க்கும்போதும் வாக்கியம் அல்லது சொற்றொடர்களை அமைக்கும்போதும் இடையிடையில் வந்து உதவுவன **இடைச்சொல்** என்றும், இப்பெயர் வினைக்கு உரிய பொருள்களின் பண்பை விளக்கும் தன்மை பெற்று இவற்றைச் சார்ந்து வருவன **உரிச்சொல்** என்றும் பாகுபடுத்தப்பட்டுள்ளன. சிலர் இவற்றையும் சேர்த்துத் தமிழில் சொற்கள் நான்கு வகை என்பர். அது பொருந்தாது என்பது மேலே கண்டோம். எனவே, தமிழில் எழுத்துக்கள் இருவகை—உயிரும் மெய்யும் என. அவை போன்றே சொற்களும் இரு வகை—பெயரும் வினையும் என. இவற்றின் வழக்கு வழி நல்ல தமிழ் உருவாவதைத் தொடர்ந்து காண்போம்.

# 4. சொற்களின் பாகுபாடுகள்

**சொ**ற்களைத் தமிழில் சிறப்பாக நான்கு வகையாக்குவர் என்றும், அவை பெயர், வினை, இடை, உரி என்று வகுக்கப்பெறும் என்றும், அவற்றுள் பெயர், வினை இரண்டுமே அடிப்படை என்றும் கண்டோம். இச்சொற்களால் ஆக்கப்பெறும் வாக்கியங்கள் பற்றியும் அவற்றின் அமைப்பு முறை பற்றியும் அறியுமுன் இச்சொற்களின் பல்வேறு வகைகளைப் பற்றியும் அறிந்து கொள்ளல் அவசியம்.

தமிழில் வழங்கும் சொற்களை இந்த முறையிலன்றி வேறொரு வகையாகவும் பிரிப்பார்கள். அந்தப் பகுப்பைப் புரிந்துகொண்டால் நல்ல தமிழைப்பற்றி உண்மையிலேயே நன்கு அறிந்தவர்கள் ஆவோம். பெயர் வினைகளின் அடிப்படையில் பிரிக்கும் தமிழ்ச் சொற்களை இயற்சொல், திரிசொல் என்னும் இரண்டு வகையாகப் பிரித்துள்ளனர். அவற்றுடன் தமிழில் வழங்கும் பிற சொற்களாகிய திசைச்சொல், வடசொல் என்னும் இரண்டையும் சேர்த்து நான்கு வகையாகக் கணக்கிட்டிருக்கின்றனர். இவற்றைப் பகுத்துப் பார்த்தால், இன்று உள்ள பல சிக்கல்கள் நீங்கும்.

தொல்காப்பியர் இந்தப் பகுப்பை எந்த முன் இயலோடும் தொடர்பு படுத்தாது, பின் சொல்லதிகாரக் கடைசி இயலாகிய எச்ச இயலில் எடுத்துக் காட்டியுள்ளார். இதனால், இந்தப் பகுப்பு முன்னது போன்று அத்துணைச் சிறந்ததன்று என்பார்கள். என்றாலும், இவையும் தமிழ் மொழி இயங்க உதவுவனவே என்று கொண்டு, இவற்றைப் பற்றியும் அறிந்துகொள்ளல் நல்லது அல்லவா.

இயற்சொல் என்பது இயல்பாய் நின்று, யாதொரு திரிபும் மாறுபாடும் இன்றித் தமிழ்மக்களுக்கு எளிதில் விளங்க வல்லது மண், பொன், வந்தான், நடந்தான் என்பன போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் காட்டுவர் உரையாசிரியர். திரிசொல் என்பது சொல் நிலையும் பொருள் வகையும் திரிந்து மாறுபட்டு வருவது. இது இயற்சொல் போன்று அவ்வளவு எளிதாகப் பொருளை விளக்காது. சற்று ஆழ்ந்து சிந்திப்பவர்தாம் பொருள் காண முடியும். இத் திரி சொல்லை ஒரு பொருள் குறித்த பல சொல் எனவும், பல பொருள் குறித்த ஒரு சொல்லெனவும் இரண்டாகப் பிரிப்பர் தொல்காப்பியர். நன்னூலார் இவை எளிதில் பொருள் உணர இயலாதன என்பர். 'கிள்ளை, சுகம், தத்தை' என்பன ஒரு பொருள் குறித்த பல திரிசொல் என்றும் 'கொல்' என்பது ஐயம், அசைநிலைக்கூற்று, முதலிய பல பொருள் குறித்த ஒரு சொல் என்றும் உதாரணம் காட்டுவார்கள். இவை எந்த இடத்தில் என்ன பொருளைக் குறிக்கின்றன என்பது சற்று ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டி வருவன வாதலால் இவற்றைத் திரிசொல் என்று அமைத்தனர்.

இனி எட்டு, கொட்டு, தாமரை போன்றவற்றையும் இப் பகுதியில் அடக்குவர் சிலர். தனித் தனியாக எளிய இயற்சொல் போன்று இவை பொருள் தருகின்றன. இவற்றையே பிரித்து (எள் + துள் = எட்டு) எள்ளைத் தின், (கொள் + து) கொள்ளைத் தின், (தா + மரை) தாவும் மான் எனவும் பொருள் கொள்வதால், இவற்றையும் திரிசொல் என்பார்கள். இவ்வாறு இரு பொருள்பட்ட சொற்களின் அடிப்படையிலேயே 'சிலேடை அணி' என்னும் செய்யுளை அழகு செய்யும் வகையிலேயே நல்ல அணி உண்டாயிற்று. அது பற்றி வாய்ப்பு நேர்ந்தால் பின்னர்க் காணலாம்.

இனி, திசைச்சொல் என்பது யாது? தமிழ்நாட்டைச் செந்தமிழ் வழங்கும் நிலம் எனவும் கொடுந்தமிழ் வழங்கும்

நிலம் எனவும் இரு வகையாகப் பிரித்து, செந்தமிழ் சேர்ந்த (கொடுந்தமிழ் வழங்கும்) பன்னிரு நிலத்திலும் வழங்கும் சொற்களும், நாட்டில் பிற பகுதிகளில் வழங்கும் சொற்களும் செந்தமிழ்ச் சொற்களோடு கலந்து வருவதைத் திசைச் சொல் என்பர். தமிழ் நாட்டில் பாண்டி நாட்டைச் செந்தமிழ் நாடு என்றும், பிறபகுதிகளை அதைச் சேர்ந்த பன்னிரு நாடுகள் என்றும் கொள்வர். இன்றைய மலையாள நாடும் அதில் அடங்கும். தமிழ் நாட்டு எல்லைக்கு அப்பால் வழங்கும் மொழிகளும் திசை மொழிகளே. தமிழோடு பதினெட்டு மொழிகள் நம்நாட்டில் வழங்கினவாம். 'செப்பும் மொழி பதினெட்டுடையாள் எனில்-சிந்தனை ஒன்றுடையாள்'. என்று பாரதியாரும் இதை ஒட்டித்தான் பாடினார். எனவே, இந்தப் பதினெட்டு மொழியிலும் தமிழ் ஒழிந்த பிற மொழிச் சொற்கள் தமிழில் வந்து வழங்கினால், அவற்றையும் திசைச் சொல்லெனத் தமிழில் சேர்த்துக்கொள்வர். தொல்காப்பியர் இவற்றைக் கூறாது,

> **'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும**
> **தங்குறிப் பினவே திசைச் சொற் கிளவி'**
>
> **(எச்ச 4)**

என்றார். அவர் காலத்து அமைப்பிற்குப் பொருந்தியது அது. நன்னூலார் காலத்தில் பிற மொழிகளிலிருந்தும் பல சொற்கள் தமிழில் வந்து வழங்கினமையின் அவர் அவற்றையும் சேர்த்தார். அதுதானே இலக்கண மரபு!

இவைகளைத் தவிர, இருவரும் '**வடசொல்**' என்னும் நான்காவது பிரிவையும் சொல்லுகின்றனர். தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தின் வடக்குப் பகுதியன்றி மற்றப்பகுதிகள் கடலாய் இருந்தமையின், அத்தமிழ் நாட்டு மொழியில் வடக்கிலிருந்து வந்து வழங்கிய அத்தனையும் வடசொல் எனக்குறித்தார் எனக் கொள்ளலாம். சங்க இலக்கியங்களும் வேங்கடத்துக்கு வடக்கே இருக்கும் நாடுகளையெல்லாம்

'மொழிபெயர் தேயம்' எனவே குறிக்கின்றன. எனவே, அந்தப் பகுதியிலிருந்து வரும் சொற்களையெல்லாம் 'வட சொல்' என்ற தொடரே குறிக்கின்றமையின், மேலே நன்னூலார் குறித்தபடி பிற சொற்களைப் பிரித்துக் கூற வேண்டிய தேவை அவருக்கு உண்டாகவில்லை போலும்!

நன்னூலார் இவ்வடசொல்லை வடக்கே வழங்கும் பிற சொற்களினின்றும் விலக்கி ஆரியச்சொல் என்றார். அவ்வாறு அம்மொழியிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்கள், இருமொழிக்கும் பொதுவான எழுத்துக்களாலும், ஆரியத்துக்கே உரிய சிறப்பெழுத்தாலும் இவ்விரண்டினாலும் வந்து வழங்கும் என்பர். இச்சூத்திரத்துக்கு உரை கூறிய சங்கர நமச்சிவாயர் நல்ல விளக்கம் தந்துள்ளார். ''ஆரியச்சொல் சிதைந்து வடசொல் ஆதலின் இவை சொல்லால் செந்தமிழ்ச் சொல்லை ஒவ்வாமை கருதி, எழுத்தான் ஒக்குமென்பார், 'எழுத்தான் இயைவன,' என்றார்'' எனக் காட்டுவர்; எனவே, ஆரியம் சிதைந்து தமிழில் வந்து வழங்கும்போதே அது வடசொல் எனப் பெயர் பெறுகிறது எனக் காட்டுவர். அன்றி, இன்று நாம் காண்பது போன்று தமிழ் நாட்டுக்கு வடக்கே வழங்கும் அத்தனை மொழிகளிலும் வடசொற்கள் சிதைந்து வழங்குவதைக் காண்கிறோம்; அந்த வகையிலேயும் அவற்றின் தமிழ் வழக்கையும் சிலர் கூறுவர். நமக்கு அந்த ஆராய்ச்சி எல்லாம் இங்கே தேவையில்லை. 'வடசொல்' 'சமஸ்கிருதம்', 'ஆரியம்' என்ற மூன்றும் வேறுபட்டவை என்பதை என் 'வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும்' என்ற நூலில் தெளிவாகக் காட்டியுள்ளேன். தொல்காப்பியர் காலத்திலிருந்தே தமிழில் பிற சொற்கள் வந்து வழங்கின என்பதே நாம் அறிவது.

இதை எண்ணும் போது இந்தக் காலத்தில் நிலவும் மாறுபட்ட கருத்துக்களைப்பற்றி ஒரு சிறிது கூறியே மேலே செல்ல வேண்டியுள்ளது. தமிழில் பிற மொழிச் சொற்களைக்

கலத்தல் நல்லதா கெட்டதா என்ற வாதம் நாட்டில் வலுப் பெற்றுள்ளது. சிலர் வடமொழிச் சொற்களை அப்படி அப்படியே ஒலி மாறாமல் எழுத விரும்புகின்றனர். சிலர் தனித் தமிழில் எழுத நினைக்கின்றனர். ஒரு சிலர் தமிழ்ச் சொற்களை வடசொற்களென்றும், மற்றும் சிலர் வடசொற் களைத் தமிழ் சொற்களென்றும் வாதிடுவர். பிற மொழிக் கலப்பால் மொழி கேடுறும் என்பாரும், அதனால் மொழி வளர்ச்சியுறு மென்பாரும் நாட்டில் உளர். ஒரு சிலர், 'எது எப் படிப் போனால் நமக்கென்ன?' என்று வாய் மூடி மௌனிய ராய் உள்ளனர். சற்று ஆராய்ந்து பார்த்தால், இந்த வாதங் களுக்கு இடமேயில்லை.

மொழி வரலாற்றை நோக்கும் போது எந்த மொழியும் பிற மொழி கலவாமல் தனித்து இயங்கிற்று என்று சொல்ல இயலாது. தமிழிலும் மிகு பழங்காலந்தொட்டே இந்தக் கலப்பு உண்டு என்பதைத்தான் தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் திசைச்சொல், வடசொல் என் னும் வழக்குக்களால் வழங்குகின்றன. எனவே, பிறமொழிச் சொற்களின் கலப்பால் ஒரு மொழி கெடும் என்று கூற இய லாது. என்றாலும், அக்கலப்புக்கு அதே இலக்கண நூலோர் வகுக்கும் வழிகளை மறந்துவிடுவதாலேதான் தொல்லை உண்டாகிறது.

தமிழில் வழக்கத்தில் உள்ள நல்ல சொற்கள் இருக்கவும் அவற்றை நீக்கிப் பிறமொழிச் சொற்களைப் புகுத்தல் மரபுக்கும், இலக்கண அமைதிக்கும், பிற நல்ல இயல்புகளுக் கும் மாறுபட்டதாகும். 'நீர்' என்பதற்குப் பதில் 'ஜலம்' என்பதோ, 'மலர், என்பதற்குப் பதில் 'புஷ்பம்' என்பதோ வேண்டாதனவாகும். ஆனால், அதே சமயத்தில் தமிழில் வழக்கல்லாத பல சொற்களைத் தமிழில் எடுத்து வழங்கு வதில் தவறு இல்லை. விஞ்ஞானம் விரைந்து வளர்ந்து வரும் இந்நாளில் எத்தனையோ ஆங்கிலச் சொற்களை அப்படியே

எடுத்தாள வேண்டியுள்ளது. சிலவற்றைத் தமிழ்ப்படுத்தினாலும் அவை விளங்கா; பொருளும் மாறுபடலாம். அது போன்றே அக்காலத்திலும் சில ஆரியச் சொற்களையும் பிற வடசொற்களையும் எடுத்தாள வேண்டிய தேவை இருந்திருக்கும். 'பிற சொற்களையே தொட மாட்டோம்,' என்றால் அறிவு வளர்ச்சி பெறாது. அதனாலேதான் தொல்காப்பியர் அவற்றை எடுத்தாள இலக்கணம் வகுத்தார். பலர் அதை மறந்த காரணத்தினாலேயே வாதங்கள் உண்டாகின்றன.

தமிழில் நல்ல சொற்கள் இருக்க பிற மொழிச் சொற்களைப் பயன்படுத்துவது தவறு என்பதைக் காட்டினேன் அல்லவா? அது போன்றே பிறமொழிச் சொற்களை எடுத்தாள வேண்டுமாயின், அவற்றைத் தமிழ்முறைக்கு ஏற்பவே மாற்றி, அவையும் தமிழ்ச் சொற்கள் போல ஒலிக்குமாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதே தொல்காப்பியரின் விளக்கமாகும்,

**'வடசொற் கிளவி வடஎழுத்து ஒரீஇ**
**எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.' (எச்ச. 5)**

என்பது அவர் வாய்மொழி. எனவே, வடசொல்லையோ பிற சொற்கனளயோ எடுத்தாளும் போது அவற்றில் உள்ள அந்தந்த மொழி எழுத்துக்களை நீக்கி, அவற்றின் பொருள் கெடாத வகையில் தமிழ்ச்சொற்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே அதன் முடிவு. அதற்குப் பிற்காலத்தில் பல வகையில் இலக்கணங்களை அமைத்துள்ளார்கள். 'புஷ்பம்' என்ற சொல்லைப் 'புட்பம்' என மாற்றி வழங்கலாம். இதுவும் மலர் என்ற வழக்காறு இல்லாவிட்டாறானே என்னலாம். ஆனால், சில சொற்கள் இன்றியமையாது தேவையாய் உள்ளன. லக்ஷ்மணன் என்ற சொல்லைத் தமிழில் சிலர் அப்படியே எழுதுகின்றனர். 'ல' தமிழ் இலக்கணப்படி மொழிக்கு முதலில் வாராது. அதனால், இச்

சொல்லைத் தமிழ் அறிஞர் வேண்டா என்று சொல்ல வில்லை. 'லட்சுமணன்' எனச் சிலர் எழுதுவர். அதுவும் தவறு. தமிழ் இலக்கண மரபுப்படி இதை 'இலட்சுமணன்' அல்லது 'இலக்குவன்' என்றே எழுத வேண்டும். எம்மொழி யையும் ஏற்கும் மொழிவழி மாற்றி அமைத்துக்கொள்ளுதலே மொழி இலக்கண அமைதியாகும். இலக்கணத்துக்கு மட்டு மன்று இந் நியதி; இலக்கியத்துக்கும் பொருந்தும். வட மொழி இராமாயணத்தைத் தமிழாக்கிய கம்பர் அதைத் தமிழ் மரபோடு சார்த்தி எழுதிய காரணத்தாலேதான் பல எதிர்ப்புகளுக்கு இடையிலும் அது வாழ்கிறது அல்லாத பல மொழி பெயர்ப்பு இலக்கியங்கள் தோன்றிய காலத் துக்குப்பின் நெடுநாள் வாழாது மறைகின்றன எனவே, தமிழில் பிற மொழியை எடுத்தாள்வது தவறன்று என்பதும், அப்படி எடுத்தாளும் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்கள் இல்லாத வழியே அவற்றை எடுத்தாள வேண்டும் என்பதும், அவ்வாறு எடுத்தாளுங்கால் அப்பிற மொழி எழுத்துக்களைத் தமிழ் மரபுக்கு ஏற்ப மாற்றி, தேவையும் இடமும் கருதிப் பயன்படுத்த வேண்டும் என்பதும் பண்டைய தமிழ் இலக்கண நூலோர் கண்ட முடிவு என்பதை அறிய வேண்டும். இவை களெல்லாம் நல்ல தமிழ் உருவாக நாம் கைக்கொள்ள வேண்டிய முறைகளாகும்.

தமிழில் உள்ள சொற்களை இப்படி இருவகையாகப் பகுத்தனர் இலக்கண நூலோர். அவற்றின் தேவையையும், இடத்தையும், தன்மையையும் அறிந்து பயன்படுத்துவதே நல்ல தமிழ். இச்சொற்களின் கூட்டு அமைப்பே வாக்கியம்—பாட்டு—உரைநடை-எல்லாம். எனவே, இவற்றை நன்கு அறிந்து பயன்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும்.

இச்சொற்களைப்பற்றி அறியும் போது மற்றொன்றை யும் நினைக்க வேண்டியுள்ளது. பெயர், வினை என்று சொற்களைப் பாகுபடுத்தத் தொடங்கிய தொல்காப்பியர்

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே,' என்ற முதற் சூத்திரத் தானே தொடங்குகிறார். எனவே, தமிழில் அசைச்சொற்கள் அதிகமாகப் பயின்று வரவில்லை என்பதை உணர வேண்டும். சொற்களைப் பொருள் கருதியே அமைத்தார்கள். எனவே, ஒவ்வொரு பொருளையும் நுணுகி ஆராயும் வகையில் தமிழில் சொற்கள் அமைந்திருந்தன. அதனால், 'இடுகுறி' என்ற வழக்கம் பழங்காலத்தில் இல்லை. நன்னூலார் காலத்தில் சில சொற்களின் தோற்றத்திற்குக் காரணம் விளங்கவில்லை. எனவே, அவற்றை இடுகுறி என்றும், பொருள் அறிந்தவற்றைக் காரணம் என்றும் பிரித்தார்கள். எவ்வாறாயினும், நல்ல தமிழ் உருவாவதற்குச் சொல்லைச் 'செட்டாக' உபயோகப்படுத்த வேண்டும். 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்ற முறை இந்த அடிப்படையில் உண்டானதேயாகும்.

இனிச் சொற்களைப் பற்றி மற்றொன்று கண்டு இப் பகுதியை முடிக்கலாம். தமிழில் கண்ட சொற்களைக் கண்ட பொருளுக்குப் பயன்படுத்த இயலாது. இன்னின்னவற்றிற்கு இன்னின்ன சொற்களை உபயோகிக்க வேண்டும் என்ற நியதி உண்டு.

**'எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.'**

என்று நன்னூலார் இலக்கணம் வகுத்துள்ளார். அவர் உயர்ந்தோர்கள் எப்படிச் சொன்னார்கள் என்பதை விளக்கவில்லை. தொல்காப்பியரோ, மரபியல் என்றே இயல் ஒன்று வகுத்து, அதில் வழக்கத்தில் உள்ள சொற்களை நன்கு விளக்கிக் காட்டுகின்றார். அவற்றையெல்லாம் இங்கே நாம் விளக்கிக்கொண்டிருக்க வேண்டா. என்றாலும், இரண்டொன்று காணல் சிறந்தது எனக் கருதுகின்றேன்.

தமிழ் முறைப்படி மக்களினத்தில் மட்டுமின்றி விலங்கினத்திலும் ஆண் பெண் வேறுபாடுகள் உண்டென்றும், அவற்றை இன்னின்ன வகையிலேதான் வழங்க வேண்டுமென்றும் கூறுவர். ஆண் குரங்குக் 'கடுவன்' என்பதும், பெண் குரங்குக்கு 'மந்தி' என்பதும் பெயர். அவ்வாறே 'களிறு, பிடி' என்பன யானையில் ஆணையும் பெண்ணையும் குறிப்பன. பறவைகளின் ஆண்களுக்குச் சேவல்' என்பது பெயர். ஆனால், அது மயிலுக்குப் பொருந்தாது. இவை போன்ற பல பெயர்கள் விலங்கினத்தில் ஆணையும் பெண்ணையும் பிரிக்கின்றன. பறப்பனவற் றுள்ளும் ஊர்வனவற் றுள்ளும் உள்ள வேறுபாடுகளை விளக்கும் நுண்ணிய பெயர்களும் உள்ளன. இளமையில் உள்ள சிலவற்றைக் கன்று என்றும், சிலவற்றைக் குட்டி என்றும், சிலவற்றைப் பிள்ளை என்றும், சிலவற்றைக் குழவி என்றும் வழங்குகின்றோம். எவை எவை எவ்வெவற்றிற்குப் பொருந்தும் என்பனவற்றையெல்லாம் விளக்கி இங்கே காட்ட இயலாது. ஒரு சிலவற்றைச் சுட்டிக்காட்டினேன். இந்த வகையில் மரபறிந்து நல்ல சொற்களை இடம் கருதிப் பயன்படுத்தினால், நல்ல தமிழ் உருவாவதற்கும் ஐயம் உண்டோ!

இச்சொற்களை வாக்கியங்களில் அமைக்கும் போது சில முறைகளைக் கையாள வேண்டும். ஆண் பெயர்க்கு ஆண் பால் வினையும் பெண் பெயர்க்குப் பெண்பால் வினையும் கொள்ள வேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே. ஒருமைக்கு ஒருமையும், பன்மைக்குப் பன்மையும் அமைகின்றன. சிலர் இவற்றில் தவறிவிடுகின்றனர். அதற்கேற்பத் தமிழில் சில சொற்கள் ஒருமையா பன்மையா என்று கூற இயலாதபடி தடுமாற வைக்கின்றன. படை என்பதைக் காண்போம். 'படை'யில் பலவும் சேர்ந்திருக்கும். நால்வகைப்படை உண்டு. ஒவ்வொரு படையிலும் பலர் உளர்; பல உள்ளன. இச்சொல்லை எழுவாயாகப் பயன்படுத்தினால் பயனிலை

எப்படி அமையும்? பன்மையாக அமையும் என்று சிலர் சொல்லலாம். அது பொருந்ாது. ‘படை சென்றது,’ என்று ஒருமையாலேயே கூற வேண்டும். ‘புத்தகம் உள்ளது,’ என்றே கூறுங்கள். அதில் பல ஏடுகள் இருப்பினும் ஒன்றாகவே கொள்ள வேண்டும். வெந்தவை பல சோறுகள் ஆயினும், ‘அடிசில் வெந்தது’ என்றே முடிக்க வேண்டும். இதைக் கருதியே **‘பலவின் இயைந்தன ஒன்றெனப் படுமே’** என்று விதி வகுத்துள்ளனர். இவ்வாறு சொற்களை ஆய்ந்து பயன்படுத்தும் வழிகள் பல. அவை எழுதிப் பயிலப் பயிலப் பழக்கத்தில் வந்து அமைந்துவிடுகின்றன. இங்கே நான் இலக்கண வகைகளில் ஒரு சிலவற்றையே எடுத்துக் காட்டினேன். இவை அமையும் என்று கருதி மேலே செல்லலாம்.

இனி இந்தச் சொற்கள் எப்படிச் சொற்றொடர் அல்லது வாக்கியம் ஆகின்றன என்பது பற்றியும், அவ்வாக்கிய அமைப்புக்கள் நல்ல தமிழை எவ்வாறு உருவாக்குகின்றன என்பது பற்றியும் காணலாம்,

# 5. சேரும் சொற்கள்

**சொ**ற்களாலாகிய வாக்கியங்கள் அல்லது சொற்றொடர்களைப் பின்பற்றி அறிந்துகொள்வதற்குமுன் அச்சொற்கள் ஒன்றோடொன்று சேரும்போது எவ்வெவ்வாறு அமைந்து நிற்கின்றன என்பதைக் காணல் வேண்டும். ஆங்கிலம் போன்ற மொழிகளில் சொற்கள் சேரும் போது மாற்றங்களைக் காண இயலாது. எனினும், தமிழிலும் இன்னும் சில மொழிகளிலும் சொற்கள் சேரும் போது உண்டாகும் சில மாறுதல்களைக் கண்டு, அந்த மாற்றங்கள் அடிப்படையிலேயே இலக்கணங்களும் வகுத்துள்ளார்கள். தமிழில் அதைப் **புணர்ச்சி** என்கின்றோம். அந்த இலக்கணம் கூறும் பகுதிக்கும் **புணரியல்** என்பதே பெயர்.

இரண்டு ஒன்று கூடுவதற்குப் புணர்ச்சி என்பது பெயர். இங்கே சொற்கள் ஒன்றோடு ஒன்று சேர்கின்றன. அவ்வாறு சேரும்போது அப்படியே நிலை கெடாமல் இருப்பதில்லை. அச்சேர்க்கையினால் சில எழுத்துக்கள் புதியனவாகத் தோன்றலாம்; சில கெடலாம்; சில உரு மாறலாம்; சில நிலை பெயரலாம். ஒரு சில சொற்கள் இயல்பாகவே நிலை கெடாமல் இருப்பதும் உண்டு. இவற்றையெல்லாம் தொகுத்துத்தான் **புணரி**யல் என இலக்கணம் வகுத்துள்ளார்கள். தொல்காப்பியத்தில் உயிர் மயங்கு இயல், புள்ளி மயங்கு இயல், குற்றியலுகரப் புணரியல் என்ற மூன்று பகுப்புக்கள் உள்ளன. அப்படியே நன்னூலிலும் உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுப் புணரியல் என்ற மூன்று பிரிவுகளைக் காணலாம். இவை அனைத்தும் சொற்கள் ஒன்றோடொன்று சேரும் காலத்து உண்டாகும் இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சிகளையே காட்டுகின்றன. தமிழில் உயிரும் மெய்யுந்தாமே முதல் எழுத்துக்கள்! அவ்வெழுத்துக்களைக் கடை

சியில் பெற்று வரும் சொற்கள் சேரும்போது பெறும் மாற்றங் களைத் தனித்தனியாகப் பிரித்து இவ்வாறு காட்டியுள்ளார் கள். உருபுப் புணரியலிலே வேற்றுமை உருபுகளைக் கடைசி யிலேயே கொண்ட சொற்களின் புணர்ச்சியைக் காணலாம். ஏறக்குறைய அதே அடிப்படையிலேதான் குற்றியலுகரப் புணரியல் அமைந்துள்ளது. ஒன்று முதலிய எண்ணுப் பெயர்களே பெரும்பாலும் இந்தப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு சொற்கள் புணரும் போது முதலில் உள்ள சொற்களின் கடைசியில் உள்ள எழுத்துக்களின் அடிப் படையிலேதான் இந்தப் புணர்ச்சி இலக்கணம் அமைக்கப் பெற்றுள்ளது.

இரண்டு சொற்கள் சேரும்போது ஒன்றை மற்றொன்றி லிருந்து பிரித்துக் காட்ட வேண்டுமல்லவா? ஆம்; அதனா லேயே நிலைமொழி, வருமொழி என அவற்றை வழங்கினர். முதலில் உள்ளது நிலைமொழி; அதனோடு வந்து சேருவது வருமொழி. இந்த மொழிகளின் சேர்க்கையே புணர்ச்சி.

சொற்கள் சேரும்போது ஏன் இவ்வாறு மாறவேண்டும்? 'மொழியின் அமைப்பு அப்படி,' என்று சுலபமாகப் பதில் சொல்லிவிடலாம். 'எனினும், எல்லா மொழிகளிலும் இத் தகைய மாற்றம் இல்லையே?' என்ற வினா எழும். ஒவ் வொரு மொழியிலும் அதனதன் இயல்புக்கு ஏற்ற வகையில் சிற்சில விதிகள் அமைந்துள்ளன. தமிழ் 'இழுமென் மொழி யாக' உருப்பெற்றது என்பர். அதன் ஓசை நலம் தனித் தன்மை வாய்ந்தது. ஒரு பொருளைப் பற்றியே தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது அச்சொற்களுக்கு இடையில் அமையும் ஓசையானது குறைந்தோ, கெட்டோ, அன்றித் தூண்டித்தோ ஒலிக்கக் கூடாது. ஒலித்தால், சொல் நடை யின் அழகு குறைவதோடு பேசுவதற்கு வேண்டிய முயற்சியும் அதிகமாகத் தேவையாகும். இதனால் மனித சக்தியை அதிகமாகத் தேவையற்ற வகையில் உபயோகிக்க வேண்டி

யுள்ளது. 'அவனை கண்டேன்' என்றால் பொருள் விளங்கி விடுகிறது என்பது உண்மைதான். என்றாலும், இரண்டையும் இப்படியே சொல்லும்போது இடையில் ஓர் ஒலிப்பள்ளம் உண்டாவதைச் சொல்லிப் பாருங்கள். அப்பள்ளத்தை நிறைக்கவே 'க்' என்ற 'க'வ்வுக்கு ஏற்ற ஒற்றும் சேர்க்கப்படுகின்றது. 'க்' என்ற மெய் எழுத்துத் தனியாகப் புதுப் பொருள் ஒன்றும் தரவில்லை; என்றாலும், அந்த மொழியின் இன்னோசைக்கு உறுதுணை யாகின்றது. ஒலியெழுப்பும் முயற்சியிலும் மனித சத்தி சற்றுக் குறைவாகவே பயன்படுத் தப்படுகின்றது. ஆகவே, இந்த 'க்'கு, புணர்ச்சியில் இன்றியமையாததாய் உள்ளது. இப்படிச் சில எழுத்துக்கள் குறைக்க வேண்டிய நிலையும் உண்டாகலாம்.

வடக்குத் திசை என்ற தொடர் வடக்குப் பக்கத்துத் திசை என்பதை நன்கு விளக்குகின்றது; அதைச் சுருக்கி 'வட திசை' என்கிறோம். இப்படிச் சுருக்குவதால் மேலே நாம் கண்டபடி மனித முயற்சி குறைவுபடுவதோடு, எழுத்துச் சுருக்கமும் எய்திச் சொல்லில் செட்டாக இருக்க முடிகின்றது. இவ்வாறன்றிச் சிலவற்றில் சில சொற்களோ அசைகளோ தோன்றலுமுண்டு. பனையும் காயும் சேர்ந்தால் பனங்காய் ஆகின்றது. இதில் 'ஐ' என்ற எழுத்து நீங்கி 'அம்' என்ற '**சாரியை**' சேர்கின்றது. இப்படி இரண்டு சொற்கள் சேரும் போது மாற்றங்கள் அவ்வவற்றின் தேவையை ஒட்டி அமைகின்றன. 'பனைக்காய்' என்றாலோ, பனைகாய்' என்றாலோ ஓசை இழுமென இனிமையாக அமைவதில்லை என்பதைச் சொல்லிச் சொல்லிப் பார்த்தால் தெரியும். எனவே 'ஐ' என்ற ஓர் எழுத்துக் கெட, 'அம்' என்ற ஈரெழுத்துச் சாரியை வரவேண்டியிருக்கிறது. எனவே, இப்புணர்ச்சி வழி மாற்றங்களும் புதுத் தோற்றங்களும் மொழியை நன்கு பேசவும் எழுதவும் பயன்பட்டு, மொழியின் சிறப்பை நன்கு பாதுகாக்கின்றன என்பது பொருந்தும்.

'இவ்வாறு திட்டமாக எப்படி இலக்கணம் வகுக்க முடியும்?' என்று சிலர் கேட்கலாம். 'ஏன்?' என்ற கேள்விக்குத் தான் மேலே விடை கண்டு விட்டோம். 'எப்படி?' என்பதற்கும் விடை காண முடியும். பொதுவான இலக்கண விதிகளைப்பற்றி நான் முதலில் கூறியதே இதற்கும் பொருந்தும். இலக்கியங் கண்டு அதற்கு இலக்கணம் கூறுதல்தானே மரபு! அந்த முறை இந்தப் புணர்ச்சிக்கும் ஏற்றதேயாகும். தொடர்களைப் பயன்படுத்தும் போதோ, அன்றிப் பேசும் போதோ, இயல்பாகவே நா, உதடு, பல் இவற்றின் அசைவின் நிலைக்கும், நல்ல ஒலி அமைப்புக்கும், மொழியின் பிற நல் இயல்புகளுக்கும் ஏற்ப இந்த மாற்றங்கள் அமைந்துவிடுகின்றன. பின் வருகின்ற இலக்கணப் புலவர்கள் இவற்றின் முறையை நுணுகி ஆராய்ந்து முறைப்படுத்தி இவைகளை எழுதி வைத்துச் சென்றிருக்கிறார்கள். இன்று சிலர் இவை தேவையில்லை என்று கூடப் பேசலாம். சிலர் விதி யறியாது, புணர்ச்சிக்குத் தேவையான தோன்றலோ, திரிதலோ, கெடுதலோ இன்றித் தம் மனம் போன அமைப்பில் எழுதலாம். என்றாலும், அவர்களும் சற்றே சிந்தித்துப் பார்த்தால், இலக்கண விதிப்படி எழுதுவதும் பேசுவதும் எவ்வளவு பொருத்தமானவை என்பதை உணராமல் போகமாட்டார்கள். அதற்காக எல்லா விதிகளையும் ஒவ்வொருவரும் கற்று மனப்பாடம் செய்து கொண்டு அவற்றின் வழியேதான் எண்ணி எண்ணிப் பேசவேண்டும் என்பதில்லை. அவர்கள் நல்ல தமிழ் பேசினாலும் எழுதினாலும் இயல்பாகவே அவை அமைந்துவிடும். இலக்கணமே அறியாத சிலர் இந்தப் புணர்ச்சி விதிகள் கெடாதபடியே பேசியும் எழுதியும் வருவதையும் இலக்கணம் பயின்ற சிலர் மாறுபட்டு எழுதிப் பேசிப் பின் எண்ணித் திருத்திக்கொள்வதையும் காண்கிறோம். எனவே, இந்தப் புணர்ச்சி முறைகள் இயல்பாகவே பழகப்பழக அமைவனவாகும். இதனாலேதான் போலும் 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்று பாடி வைத்தார்கள்! இது நிற்க.

இப்புணர்ச்சி விதியின்படி அமையும் சில அமைதிகளைக் கண்டு மேலே செல்லலாம். இலக்கணத்தை வரையறை செய்த ஆசிரியர்கள் உயிர் எழுத்துக்களையும் மெய் எழுத்துக் களையும் தனித்தனி எடுத்து அந்தந்த எழுத்துக்கள் ஈற்றில் வரும் சொற்கள் வருமொழி முதலில் வரும் எழுத்துக்களுக்கு ஏற்ப எப்படி எப்படி மாறும் என்பதை எழுதியுள்ளார்கள். 'அகர ஈறு, ஆகார ஈறு', 'இகர ஈறு, ஈகார ஈறு' என்று இப்படிப் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களையும் தனித்தனியே பிரித்து உயிர்ஈற்றுப் புணரியல் என அமைத்தார்கள்; பின் மெய் எழுத்துக்களைத் தேவைப்படி வல்லினம், மெல்லினம், இடையினம் என்றும் தனித்தனியாகப் பிரித்து இலக்கணம் காட்டினார்கள். மேலும், வேற்றுமை உருபுகள் ஒருமொழி யோடு சேரும் போது உண்டாகும் மாறுதல்களையும், குற்றி யலுகரப் புணர்ச்சிபோன்ற தனித்தனிச் சொற்கள் புணரும் போது உண்டாகும் மாறுதல்களையும் விளக்கிக் காட்டியுள் ளார்கள். தமிழ் இலக்கணத்திலே இப்பகுதிக்கு அதிக இடம் கொடுத்துள்ளார்கள் தொல்காப்பியரும் நன்னூலாரும். எனவே, இந்த அமைப்பிலேதான் மொழியின் தொடர் இயல் பும் செம்மையும் அமைந்து உள்ளன என்பதை அவர்கள் நன்கு உணர்த்தியிருக்கிறார்கள். அவற்றுள் ஒவ்வொன்றை யும் நாம் ஆராய்ந்துகொண்டே செல்லின், விரியும். சில வழக் கத்திலேயே வந்துவிடும். ஒரு சிலர் அறிந்தோ அறியாமலோ, சாதாரணமான தவறுகளைக்கூடப் புணர்ச்சியிலேயே செய் கிறார்கள். அவற்றுள் சிலகண்டு அமைவோம்.

எழுத்துக்கள் மிகும் இடம் என்று புணர்ச்சி விதிகளில் காண்கிறோ மல்லவா? அவற்றுள் பெரும்பாலன வல்லெழுத் துக்களே. இதை **வலிமிகுதல்** என்று சொல்லுவதும் உண்டு. சிலவிடங்களில் இந்த வல்லெழுத்துத் தன் இனமான மெல்லெ ழுத்தாகத் திரிதல் உண்டு. இனம் என்பது **க, ச, ட, த, ப, ற,** என்ற வல்லினம் ஆறுக்கும். **ங, ஞ, ண, ந, ம, ன,** என்ற மெல்லினம் ஆறும் தனித்தனி இனமாக வருவது. இப்படி

வல்லின எழுத்துக்களும், அவற்றிற்கு இனமான மெல்லின எழுத்துக்களுமே பெரும்பாலும் புணர்ச்சியில் இடம் பெறுகின்றன.

இச்சொற்புணர்ச்சியில் மற்றொன்றையும் இலக்கண ஆசிரியர்கள் முக்கியமாகக் குறிக்கிறார்கள். அதுதான் 'வேற்றுமை, அல்வழி' என்னும் வழக்கு. வேற்றுமை என்பது வேற்றுமை உருபுகளை ஏற்று வருவது. இந்த உருபுப் புணர்ச்சியைப் பற்றித் தனியாக நன்னூலார் சொன்னாலும், இது பிற இடங்களிலும் விளக்கம் பெறவேண்டி உள்ளது, எனவேதான் புணர்ச்சியைப் பற்றி அவர் முதலில் கூறும் போது இந்த இரண்டு வகைகளையும் விளக்குகிறார். தொல் காப்பியரும் உயிர் மயங்கியல் முதல் சூத்திரத்திலேயே இவை இரண்டைப் பற்றியும் காட்டித்தான் மேலே செல்கிறார். எனவே, சொற்றொடர்களை வேற்றுமை என்றும், வேற்றுமை அல்லாத எல்லாவற்றையும் அல்வழி என்றும் பிரிப்பது எளிதாகும். அந்த அல்வழி பலவகைப்படும் என்பதை நன்னூலார் நன்றாக விளக்குகிறார். இவற்றின் விரிவெல்லாம் இங்கே நமக்கு வேண்டா. பின்பு தொடர்களைப் பற்றிக் காணும் காலத்தில் இவை பற்றி நன்கு ஆராயலாம். இங்கே வேற்றுமையிலும் அல்வழியிலும் வரும் எல்லாத் தொடர்களும் புணர்ச்சி விதிகளுக்கு உட்பட்டே இயல்பாயும், திரிந்தும், மிகுந்தும், குறைந்தும் வரும் என்பதை மட்டும் காணுதல் போதும் என நினைத்து இந்த அளவோடு நிறுத்திக் கொள்கிறேன்.

புணர்ச்சி விதிகளில் மிகச்சுலபமான விதிகளும் சில உள. அவற்றுள் உடம்படுமெய் என்பது ஒன்று. உயிர் எழுத்தோடு உயிர் எழுத்துச் சேர்ந்தால் என்னாகும் என்பதை இவ்வுடம்படு மெய்யே விளக்குகின்றது. மணி என்பதோடு அழகிது என்னும் சொல் சேரும் காலத்தில் 'மணியழகிது' என்று எழுதுகிறோம். மணி அழகிது என்று சொன்னாலும்

எழுதினாலும் தவறு இல்லைதான். என்றாலும், இரண்டையும் உச்சரித்துப் பார்த்தால், முன்னது உச்சரிக்க எளிமையாக இருப்பதோடு ஓசை நயம் உடையதாகவும் இருக்கிறதல்லவா? ஆகவே உடம்படுமெய் தேவையாகிறது. இங்கு எது உடம்படுமெய்? 'ய்' என்பதல்லவா? மணி+ய்+அழகிது= மணியழகிது. எனவே, 'ய்' உடம்படுமெய்யாகிறது. இது 'ய'கர வுடம்படுமெய் எனப்படும். இது போன்ற 'வ'கர உடம்படுமெய்யும் உண்டு. நன்னூலார் இரண்டையும் சேர்த்து.

'இஈ ஐவழி யவவும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும். (162)

எனக் கூறினார். இப்படியே எ+யானை என்பது எவ்யானை என்றும், நாடு+யாது என்பது நாடியது என்றும் வருவனவற்றிற்கெல்லாம் இலக்கணம் கூறினார் இப்படியே உயிரெழுத்தின் முன் வல்லினம், மெல்லினம், இடையினம், வந்தால் பொருந்தும் இலக்கணங்களையெல்லாம் உயிர் ஈற்றுப் புணரியலில் கூறி, மெய் எழுத்தினைக் கடைசியில் கொண்ட சொற்கள் பெறும் மாறுபாடுகளை மெய் ஈற்றுப் புணரியலில் காட்டுகின்றனர் அறிஞர். நிலை மொழியீற்றில் மெய் இருந்து வருமொழி முதலில் உயிர் வந்தால், இயல்பாக உடல்மேல் உயிர் வந்து பொருந்தும் என்று விளக்கி, 'தோன்றல்+அழகன்=தோன்றலழகன்' என்று உதாரணமும் தருகின்றனர். இப்படி மெய் முன் மெய் எழுத்துச் சேர்ந்தால் என்னாகும் என்பதையும் காட்டுகின்றனர்.

இங்கே உதாரணமாக வழக்கிலுள்ள ஒரு சில சொற்றொடர்களைக் கண்டு நாம் அமைவோம். 'திருகுறள்', 'இப்படி சொல்', 'விறகு கடை' என்றெல்லாம் சிலர் பேசுவதையும் எழுதுவதையும் காண்கிறோம், ஆனால் அவை

தவறு, 'திருக்குறள், இப்படிச் சொல், விறகுக்கடை என்று தான் எழுத வேண்டும். இந்த விதியை எளிதாக அறிந்து கொள்ளத்தான் நன்னூலார்,

**'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்**
**கசதப மிகும்; வித வாதன மன்னே.'** **(165)**

என்று கூறினார். இது பொது விதியாகும். பின்னர்த் தனித் தனி ஒவ்வொன்றுக்கும் சிறப்பு விதியும் கூறுகின்றார்.

இவ்வாறு எழுத்து மிகுவதற்கும் மிகாமல் இருப்பதற்கும் சிலவிடங்களில் அதிக வேறுபாடுகளும் உள்ளன. சாதாரண மாகப் 'பசி, பிணி' என்னும் இரண்டு சொற்களை எடுத்துக் கொள்வோம் இரண்டையும் சேர்த்துப் பேசுவோம். 'பசி பிணி நாட்டைக் கெடுக்கின்றன; பசிப்பிணி நாட்டைக் கெடுக் கின்றது,' என அமைவதைக் காண்கிறோம். முன்னது பன்மை; பின்னது ஒருமையாய் உள்ளது. ஏன்? இரண்டிற்கும் என்ன வேறுபாடு? முன்னதில் இல்லாத **'ப்'** ஒன்று பின்னதில் இரண்டுக்கும் இடையில் வந்துள்ளது. எனவே, மாறுபாடு காண்கிறோம். பசி பிணி என்றால் 'பசியும் பிணியும்' என்ற உம்மைத் தொகையாக இரண்டும் தனித்தனி வெவ்வேறு பொருள்களாகிப் பன்மை வினை கொண்டு முடிகின்றன. ஆனால், 'பசிப்பிணி' என்று ஒற்று மிகுமானால் 'பசியாகிய பிணி' என்று பண்புத் தொகையாகி ஒரே பொருளாகி ஒருமை வினை கொண்டு முடிகின்றது; இப்படியே சில சொற்கள் சேரும் காலத்தில் ஓர் எழுத்து மிகுவதாலோ அன்றிக் குறை வதாலோ பொருள் மாறுபட்டு நிற்பதும் உண்டு. எனவே, சொல்பவர் இலக்கண அமைதி அறிந்து புணர்ச்சிவழி பொருந்தச் சொல்ல வேண்டும்; எழுதுவதும் அப்படியே.

இந்தப் புணர்ச்சி விதியில் எண்ணுப் பெயர்களாகிய ஒன்று இரண்டு முதலியன தம்முள் தாம் சேர்வதற்குத் தனித் தனி விதிகள் வகுத்துள்ளார்கள். பதினொன்று, பன்னிரண்டு முதலியன எவ்வாறு சேர்ந்தன? இருபது, முப்பது எப்படி வந்தன? ஒன்பது, தொண்ணூறு எப்படி எழுந்தன? இவையெல்லாம் இலக்கண அமைதி முறையை ஒட்டியே அமைந்துள்ளன என அறிகின்றோம். இவற்றை யாரும் பெரும்பாலும் பிழைபட எழுதுவது இல்லை. இவற்றின் இலக்கணங்களும் அனைவருக்கும் தெரியா என்றாலும், பிழை இன்றி எழுதுகிறார்கள் என்றால், அதற்குப் பழக்கத்தின் அடிப்படை தான் காரணம். ஒரு சில சொற்கள் புணரும் போது சில இடங்களில் இயல்பாயும் சில இடங்களில் மிகுந்தும் புணருதல் உண்டு. நன்னூலில் 'கீழ்குலம், கீழ்க்குலம்,' கீழ்சாதி' கீழ்ச்சாதி' என்ற உதாரணங்கள் காட்டியுள்ளனர். இவற்றைச் சொல்லும் இடமும் ஓசை கெடாத வகையும் அறிந்தே உபயோகிக்க வேண்டும். இப்படி இன்னும் எத்தனையோ புணர்ச்சி வகைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். அவற்றையெல்லாம் இங்கே கூறி மாறாட்டம் உண்டாக்க விரும்பவில்லை நான். தமிழில் வடமொழிச் சொற்கள் வந்து வழங்கும் என்பதைப் பார்த்தோமல்லவா? அவை அவ்வாறு வழங்கும் போது கொள்ளும் இரண்டொரு புணர்ச்சி விதிகளை மட்டும் கண்டு அமைவோம்.

வடமொழியில் 'சந்தி' என்று இதைச் சொல்வார்கள். இதில் மிக முக்கியமாக நாம் அறிந்து கொள்ள வேண்டுவன மூன்றே. அவை தீர்க்க சந்தி, குண சந்தி, விருத்தி சந்தி என்பன. நிலை மொழியின் கடைசியில் 'அ' அல்லது 'ஆ' இருந்து, வருமொழி முதலிலும் அவையே வந்தால், இரண்டுப் சேரும்போது இரண்டிடத்தும் உள்ள உயிர் கெட்டு 'ஆ' தோன்றுவது தீர்க்க சந்தி. நிலை மொழியின் கடைசியில் 'இ' அல்லது' 'ஈ' இருந்து வருமொழியிலும் அவை வந்தால் அவை கெட 'ஈ' தோன்றுவதும், அது போன்றே உ, ஊவுக்குப் பதில் மற்றோர் 'ஊ' தோன்றுவதும், அந்தச் சந்

தியே. இவ்வாறு அன்றி, அ, ஆ, இ, ஈ க்குப் பதில் 'ஏ' தோன்றுவதும், அ, ஆ, உ, ஊ வுக்குப் பதில் 'ஓ' தோன்றுவதும் குண சந்தியாகும். அ, ஆ, ஏ, ஐ க்குப் பதில் ஐ தோன்றுவதும். அ, ஆ, ஓ, ஔ வுக்குப் பதில் ஔ தோன்றுவதும் விருத்தி சந்தியாகும். இராமாயணம் என்பது இராம+அயனம் என்னும் இரண்டின் சேர்க்கை தானே? முனி+ஈஸ்வரன் என்பது முனீஸ்வரன் ஆயிற்று. இராஜ+இந்திரன் என்பது இராஜேந்திரன் ஆயிற்று. இப்படியே மற்றவையும்.

புணர்ச்சி இலக்கணம் சற்றே கடினந்தான்; இப்படி அமைந்தது என எடுத்துத் திட்டமாகக் காட்ட முடியாத ஒன்றுதான். எனினும், தொல்காப்பியர், பவணந்தியார் போன்ற புலவர்கள் ஓரளவு தொட்டுக் காட்டி அமைதி பெற்றுள்ளார்கள். எனினும், தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தின் இறுதியில்,

**'கிளந்த அல்ல செய்யுளில் திரிநவும்**
**வழங்கியன் மருங்கின் மருவொடு திரிநவும்**
**விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்**
**வழங்கியன் மருங்கில் உணர்ந்தனர் ஒழுக்கல்**
**நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்.'** (483)

எனக் காட்டி எத்தனையோ கூறாது விடப்பட்டன எனவும், அவற்றை வழக்கியல் மூலமாகவேதான் அறிந்துகொள்ள இயலும் எனவும் காட்டி முடிக்கின்றார். எனவே, சொல்ல எளியதாய், சொற்செட்டு உடையதாய், இன்னோசை தழுவியதாய், தட்டுப்படாததாய், அமைவுடையதாய் உள்ள வகையில் சொற்களைச் சேர்க்க உதவுவதே புணர்ச்சி இலக்கணம் என்பதும், அதை ஆய்ந்து உணர்ந்து வழக்காற்று நெறி வழியே பயன்படுத்துவதே முறை என்பதும் தேற்றம். இனி, இச்சொற்களால் அமைந்த தொடர்கள் அல்லது வாக்கியங்களின் அமைதியைக் காண்போம்.

# 6. சொற்றொடர்கள்

மக்கள் உள்ளக் கருத்தை வெளிக்காட்டப் பயன்படுவதே மொழி. எனவே, அந்த மொழி செம்மையாக அமைந்தாலன்றி, மக்கள் தங்கள் உள்ளக் கருத்தை மற்றவர்களுக்கு உணர்த்த முடியாது. அந்தக் கருத்தை உணர்த்தும் மொழி பல சொற்றொடர்கள் அல்லது வாக்கியங்களால் ஆன ஒன்றாகும். உலகில் எத்தனையோ மொழிகள் வழக்கத்தில் உள்ளன. சில, பேச்சு வழக்கில் மட்டும் உள்ளன. சில, எழுத்து வழக்கில் மட்டும் உள்ளன. சில, இரு வகைகளிலும் அமைந்துள்ளன. அந்த மொழிகள் இன்று மொழி ஆராய்ச்சியாளர்களால் பல வகையிலும் பிரிக்கப்படுகின்றன. அந்த வகையில் அவர்கள் அவைகளைப் பிரிப்பதற்கு எத்தனையோ காரணங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று அந்த மொழிகளின் வாக்கிய அமைப்பும் வழக்கு முறையுமே யாகும். வாக்கியங்களில் சொற்கள் வழங்கும் முறைகள் மொழிதொறும் மாறுபடுவதுண்டு. சில ஒன்றியும் சில மாறுபட்டும் இருப்பதும் உண்டு.

வாக்கியங்களுக்கு இன்றியமையாமல் வேண்டப்படுவன எழுவாயும் பயனிலையும். அடுத்தது செயப்படுபொருள். இந்த மூன்றும் வழங்கும் முறை மொழிதோறும் மாறுபடுவது உண்டு. தமிழில் 'வந்தேன்' என்றாலே 'நான் வந்தேன்' எனப் பொருள் நன்றாக விளங்கிவிடும். 'வந்தான்' என்றாலே 'அவன் வந்தான்' என்பதும், 'வந்தன' என்றால் அவை வந்தன என்பதும் நன்கு விளங்கும். ஆனால், ஆங்கிலத்தில் அவ்வாறு பெற முடியுமா என எண்ணிப் பார்க்க வேண்டும். 'Came' என்று சொன்னால் பொருள் விளங்காது. 'I came' 'He came', 'They came' என்று சொல்ல

வேண்டும் இவற்றுள்ளும் 'They' என்பது அவர்கள், அவைகள் என்று உயர்திணை, அஃறிணை என்ற இரு வகையிலும் வழங்கப் பெறும். எனவே, வாக்கிய அமைப்பு எழுவாய், பயனிலை அடிப்படையிலேயே மொழிதோறும் மாறுபடுவது இயற்கை.

ஆங்கிலத்தில் செயப்படுபொருள் பயனிலைக்குப்பின் வரும் 'Rama took the book' என்பதைப் போல ஆனால், தமிழில் 'இராமன் நூலை எடுத்தான்' என்று பயனிலைக்கு முன் செயப்படுபொருள் வந்து நிற்க, பயனிலையே வாக்கிய முடிபாக அமைகின்றது. இப்படியே எத்தனையோ மாற்றங்களைச் சொல்லிக்கொண்ட போகலாம். ஆனால் அவை இங்கே நமக்குத் தேவை இல்லை. சொற்றொடர் அமைப்பு மொழிதோறும் மாறுபடும் என்பதையும் தமிழ் தனக்கென ஓர் அமைதியில் செல்லுகிறது என்பதையும் அறிந்துகொள்வது போதும். தமிழைப் போன்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளும் மொழிகளும் உள்ளன. அவை பற்றியெல்லாம் நாம் ஆராய வேண்டா. ஒன்று முக்கியம்: இப்படிச் சில மொழிகளில் வாக்கிய அமைப்பு மாறுபடுவதனாலே, ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழி பெயர்க்க நினைக்கின்றவர்கள், அவ்வம்மொழி நிலைக்கு ஏற்ப, இலக்கண அமைதிக்கு ஏற்ப, மொழி பெயர்ப்பை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதை மட்டும் நன்கு அறிய வேண்டும்.

கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்கள் மொழி பெயர்ப்பைச் சிறப்பாகக் கற்கிறார்கள். அவர்கள் மொழி பெயர்க்கும்போது எத்தனையோ பிழைகளைச் செய்கிறார்கள். சொல்லுக்குப் பொருள் புரியாத நிலை ஒன்று. அதில் தவறுகூட இல்லை என்பேன். பொருள் புரிந்திருந்தும், அதை மொழி பெயர்க்கும் போது அம்மொழியில் திறம்பட எழுதத் தெரியாத அவல நிலையாலேயே பல

மாணவர்கள் பிழைபடுகின்றார்கள். ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கும் தமிழ் மாணவர்கள் இடர்ப்படுங் காட்சிகள் தமிழ் நாட்டில் பலப்பல. இன்று அரசாங்கம் அனைத்தையும் தமிழில் கொண்டுவருகின்றது அரசாங்கமே தமிழாக்கம் செய்து அனைத்தையும் வெளியிடுகிறது. எனினும், அதன் வெளியீட்டையே அது சரியானதென்றோ, அரசாங்கம் ஒப்புதல் பெற்றதென்றோ, முடிந்த முடிபு என்றோ கூறிக்கொள்ள அஞ்சுகின்றது. காரணம், மொழி பெயர்ப்பில் உள்ள சில சிக்கல்களே எனலாம். என்றாலும், அதற்குக் காரணம் பொருள் நன்றாகப் புரிந்துகொண்ட பிறகும், மொழியின் அமைப்பில் அவை செம்மையாக அமைக் கப்படவில்லை என்பது தானே? ஆகவே, மொழிக்கு வாக்கிய அமைப்பே இன்றியமையாதது.

தமிழில் இந்த வாக்கிய அமைப்புக்களின் வகையையும் முறையையும் நன்றாக விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். மிகு பழங்காலத்திலிருந்து தமிழில் உரைநடையும் பாட்டும் வழக் கத்தில் இருந்தன. அவை பற்றிய தெளிந்த அமைப்புக்களும் முறைகளும் தொல்காப்பியர் காலந்தொட்டே வரையறுத்த நிலையில் கொண்டு வரப்பட்டுள்ளன. நல்ல தமிழ் உருவா வதற்கு வாக்கிய அமைப்பு அல்லது சொற்றொடர் இலக் கணம் அடிப்படையாதலின், அதைப்பற்றி இனிக் காண் போம்.

**த**மிழில் சில வாக்கியங்கள் வெளிபடையாகவும், சில சில உறுப்புக்கள் குறைந்தும் பொருள் குறையாத நிலையில் வரும். அவற்றை விரி என்றும் தொகை என்றும் சொல்வார் கள். ஆயினும் அந்தத் தொகைகள் திட்டமாக இன்னின்ன வகையிலேதான் அமையவேண்டும் என வரையறை செய்து வைத்துள்ளனர். 'இது இராமன் நூல்', 'இராமன் மரம் வெட்டினான்' என்னும் இந்த இரண்டும் தமிழ் வாக்கியங்

களே. இவற்றின் பொருள்களும் நன்றாக விளங்குகின்றன. எனினும், இவை இரண்டும் தம்முள் ஒவ்வொன்றை மறைத்தே வைத்துள்ளன, அந்த முறையைத் தொகை என் பார்கள். 'இராமனுடைய நூல்' அல்லது 'இராமனது நூல்' என்றால்தான் முழு அமைப்பும் நிறைவெய்துகின்றது. அதே போல 'மரத்தை வெட்டினான்' என்றால்தான் பொருள் வெளிப்படையாக விளங்குகின்றது. 'உடைய', 'அது' என்பன வேற்றுமை உருபுகளே. இவ்வாறு வாக்கியங் களுக்கு—சொற்றொடர்களுக்கு—இடையில் வேற்றுமை உருபு மறைந்து வருவதையே 'வேற்றுமைத் தொகை' என்று இலக்கண நூலோர் கூறுவார்கள். இவ்வாறு கூறுவது இலக்கணப்படி தவறு அன்று என்றாலும், வெளிப்படை யாகக் கூறுவதற்கும் இந்தத் தொகைகளுக்கும் வேறுபாடு காட்டுவதற்காகவே இரண்டாகப் பிரித்தார்கள். மற்றும் நாம் முன்னே கண்ட 'சொற்செட்டு' இந்தத் தொகை வாக் கியங்களில் இருப்பதால், இவை மொழியின் இனிமையையும் திறமையையும் வளர்க்க நன்கு பயன்படுகின்றன அல்லவா! கவிதை ஓட்டத்தில் இவை நன்கு பயன்படுகின்றன. இவ் வேற்றுமைகளெல்லாம் மொழிக்கு அவசியமா என்பது பற்றித் தேவையானால் பிறகு ஆராய்வோம்.

இந்த வேற்றுமைத் தொகை போன்றே இன்னும் ஐந்து தொகைகள் உள்ளன. அவை வினைத்தொகை, பண்புத் தொகை உவமத்தொகை உம்மைத்தொகை, அன்மொழித் தொகை என்பன. அவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் கண்டு மேலே செல்வோம். முன்னே பெயரெச்சம் என்பதைக் கண் டோமல்லவா? பெயர் எஞ்சி நிற்பதுதானே பெயரெச்சம்? 'வந்த பையன்' என்பது அத்தொடர்அல்லவா? இதில் 'வந்த' என்பதில் காலம் அறிய முடிகின்றது. ஆனால், காலம் மறைந் துள்ள பெயரெச்சங்களும் உள்ளன. அவற்றையே வினைத் தொகை என்பார்கள் **'காலம் கரந்த பெயரெச்சம் வினைத் தொகை'** என்பது இலக்கணம். 'கொல் களிறு' 'அடு புலி'

என்பன இதற்கு உதாரணங்கள். கொல் களிறு என்பது கொன்ற களிறு, கொல்லுகின்ற களிறு, கொல்லும் களிறு என்று மூன்று காலத்துக்கும் வரும். இவ்வாறு வருவனவெல்லாம் வினைத்தொகை.

பண்புத்தொகையென்பது பண்பை விளக்கும் 'ஆகிய' என்னும் பண்புருபு மறைந்து வருவதாகும். 'புது வீடு' என்பது 'புதுமையாகிய வீடு' என விரியும். 'போன்ற' முதலிய உவம உருபுகள் மறைந்து வருவது உவமத்தொகை. 'மலர் முகம்' என்பது 'மலர் போன்ற முகம்' என விரியும். 'கபில பரணர்' என்ற உம்மைத் தொகை, 'கபிலனும் பரணனும்' என விரியும். இவ்வாறு எளிமையில் ஐந்தையும் கண்டு விட்டோம். அன்மொழித்தொகை இவற்றினும் சற்று வேறுபட்டது. அல்லாத-தொடரில் சேராத-சொல் இதில் மறைந்திருப்பதால் இது 'அல் மொழித் தொகை' எனப் பெயர் பெற்றது. இது மேலே கண்ட ஐந்து தொகை மொழிகளுக்குப் பின்னேதான் தொக்கு வரும்; '**ஐந்தொகை மொழி மேல் பிறதொகல் அன்மொழி**' என்பது சூத்திரம். 'பைந்தொடி' என்ற சொல் என்ன தொகை? பண்புத் தொகை. பசுமையான வளையல் என்பது பொருள். ஆனால், இது ஒரு பெண்ணையும் குறிப்பதை வழக்கத்தில் காண்கிறோமல்லவா! 'பசுமையாகிய (பொன்னாற் செய்த) வளையலை அணிந்த பெண்' என்று இத்தொடர்- பண்புத்தொகையின் அடியில் பொருள் தருகிறதே! எனவே, இத்தொகை 'பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை'யாகின்றது. இவ்வாறே வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை என வரும். இவற்றின் அடிப்படை உண்மைகளை இவ்வாறு பகுத்து உணர்ந்து, அவற்றைப் பேசும் போதும் எழுதும் போதும் எடுத்தாண்

டால் சொற்செட்டுடன் பேசும் முயற்சி வேகமும் மட்டுப் படுவதோடு, மொழியும் அழகியதாக அமையுமன்றோ? மொழியியலில் இத்தகைய தொடர்களின் அமைப்பு நன்கு போற்றப்படுகின்றது.

மறைந்து வருகின்ற சொற்றொடர்கள் இவையென்றால், மறையாது வெளிப்பட்டு வருகின்ற சொற்றொடர்களும் உள என்பது தெரிகின்றதல்லவா? அவற்றை நன்னூலார் நன்கு விளக்கியுள்ளார். வினைமுற்றுத் தொடர், வினையெச்சத் தொடர், பெயரெச்சத் தொடர், எழுவாய்த் தொடர், விளித்தொடர், வேற்றுமைத் தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல் தொடர், அடுக்குத் தொடர் என்பன அவை. இவற்றின் பொருள் எல்லாம் நன்றாக விளங்குவதோடு இவையெல்லாம் மறையாது வெளிப்படையாக அமைந்துள்ளமையின் வேறு விளக்கம் வேண்டா என நினைத்து உதாரணத்தோடு அமைகின்றேன்.

வந்தான் இராமன்—வினைமுற்றுத் தொடர்
வந்து போனான்—வினையெச்சத் தொடர்
வந்த இராமன்—பெயரெச்சத் தொடர்
இராமன் அவன்—எழுவாய்த் தொடர்
இராமா வா—விளித் தொடர் (எட்டாம் வேற்றுமை)
மரத்தை வெட்டினான்—இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
வாளால் வெட்டினான்—மூன்றாம் ,,
வயலுக்கு வேலி—நான்காம் ,,
கல்வியிற் பெரியவன்—ஐந்தாம் ,,
இராமனது நூல்—ஆறாம் ,,
வீட்டின் கண் இருந்தான்—ஏழாம் ,,
இராமனே கொண்டான்—இடைச்சொல் தொடர்

நனி நல்லவன்—உரிச்சொல் தொடர்
பாம்பு பாம்பு—அடுக்குத் தொடர்

இவற்றின் விரிவெல்லாம் நமக்குத் தேவை இல்லை. இவற்றின் அமைப்பு முறைகளாலே நல்ல வாக்கியங்கள் அமைய, அவற்றின் வழி மொழி செம்மைப்படும் என அறிதல் போதும். இவற்றுள் பல நம் வழக்கத்தில் தாமே வந்துவிடும். இப்படி அமைவது இன்ன தொடராயிற்றே என நாம் எண்ணிக்கொண்டிருக்க வேண்டுவதில்லை. பேசும் முறையும் எழுதும் வகையும் அறிந்து நல்ல தமிழை நாம் எழுதவோ பேசவோ முயல்வோமானால், இவை—தொகையும் விரியும்—இயல்பாகவே அமைந்துவிடும். அதனாலேதான் 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்ற தொடர் நாட்டில் உலவுகின்றது.

இனி இத்தகைய சொற்றொடர்களை அமைக்கும்போது — எழுதினாலும் பேசினாலும் — சில விடங்களில் உணர்ச்சி வயப்பட்டு நாம் தவறிவிடுகிறோம் என்பதை நமது அன்றாட வாழ்வில் காண இயலும். நாம் சாப்பிட உட்கார்ந்திருக்கவும் மாட்டோம்; விளையாட்டு மைதானத்துக்குப் போவதற்கு, முன் ஏற்பாட்டின்படியே நண்பன் நம் வாயிலில் வந்து 'சாப்பிட்டு விட்டாயா?' என்று கேட்பான் நாம் என்ன சொல்வோம்? எண்ணிப் பாருங்கள், 'இதோ சாப்பிட்டுவிட்டேன்' என்று சொல்லி அவசரமாக எழுந்து அப்போதுதான் சாப்பிட உள்ளே செல்வோம். இவ்வாறு சொல்வது சரிதானா? சரியன்று. ஆனால், இலக்கணப் புலவர்கள் எண்ணிப் பார்த்தார்கள். சாப்பிட இலையில் உட்காரவுமில்லை. இப்படி இறந்த காலத்தில் 'சாப்பிட்டு விட்டேன்' என்று பொய் சொல்லுகிறானே என நினைத்தனர். 'அது பொய்யா? அப்படிச் சொல்லலாமா?' என்றெல்லாம் ஆராய்ந்தது அவர்கள் உள்ளம். முடிவில் அதைத்

தவறு என்று என்று கொள்ள வேண்டுவதில்லை என முடிவு கட்டினார்கள். அதை 'வழு அமைதி' என அமைத்துக் கொண்டார்கள். ஏன் அப்படி? ஏன் பொய்யை மெய்யாக்க வேண்டும்? அதற்கு அவர்கள் கண்ட காரணம் ஒன்றேதான் ஆம்: விரைவினாலே — 'நாம் நிச்சயம் சீக்கிரம் உண்டு விடு வோம்' என்ற உணர்ச்சியால் - அவசரப்பட்டுக் கூறுகிறோம். எனவே, அதையும் தழுவிக் கொள்ளலாம் என்று கருதியே இது விரைவு பற்றி வந்த எதிர்காலத்தை இறந்த காலமாக் கிய 'காலவழு அமைதி' என்று அமைத்துக்கொண்டார்கள். எனவே, மக்கள் உள்ள உணர்ச்சியைக் காட்டப் பயன்படு வதுதான் மொழியின் அடிப்படையென்று இக்கட்டுரை முதலில் நான் தொடங்கியது தமிழைப் பொறுத்தவரையில் எத்துணை உண்மையென்பது தெரிகின்றதல்லவா; இது கால வழு அமைதி.

இப்படியே திணை, பால், எண், இட வழுஅமைதிகளும் உள்ளன. பெண் குழந்தையை 'வாடா கண்ணே' எனவும், ஆண் குழந்தையை 'அம்மா வருக', எனவும் அன்பினால் அழைக்கின்றோம். அந்த அன்பின் வழிப்பிறந்த சொல். இலக்கணப் புலவர்களால் எப்படிக் குற்றமாக்கப் பெறும்? அது பால் வழு அமைதியாயிற்று. இப்படியே பிற வழு அமைதிகளும் உள்ளன. இவை அனைத்தும் மொழியின் செம்மை நலம் கெடாதிருப்பதற்கெனவும், பல்வேறு நிலை களில் பல்வேறு உணர்வுகளில் பட்டுழலும் மக்கள் மொழி வரம்பில் நின்றுதான் செயலாற்ற முடியும் என்பது முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை அறுதியிடுதற் கெனவும், மொழியே அந்தந்த வகைகளில் பல நிலைகளில் 'பிசி'னென இழுக்கப்பெறும் திறம் வாய்ந்ததெனவும், ஆகவே அந்த இன்றியமையாத இடங்களிலெல்லாம் அவற்றை வழு அமைதி செய்து கொள்க எனவும் காட்ட எழுந்தனவேயாம். இவற்றிற்கெல்லாம் திட்டமாக நன்னூலார் விதி வகுத் துள்ளார்.

ஆனால், இதை வைத்துக்கொண்டு நாம் திணை, பால், எண், இடவேற்றுமைகளை நம் விருப்பம்போல மாற்றியும் திரித்தும் கூட்டியும் குழப்பியும் கூறலாம் எனக் கொள்வது தவறாகும் ஏதோ உணர்ச்சியால் உந்தப்பட்ட - பிற நீக்க முடியாத சூழல்களுக்கு உட்பட்ட • உணர்வாளர் தம் வாய்ச் சொற்களையும் மதிக்கவேண்டும் என்ற நியதிக்கே இவை உரியனவேயன்றி, எல்லாரும் எப்போதும் இவற்றைக் கை யாளலாம் என்பது கருத்து அன்று. அதனாலேதான் இவற் றை 'வழு அமைதி' என்றே தனியாக விளக்கிக் காட்டி னார்கள்.

இனி, இவ்வாக்கியங்களை ஆங்கிலத்தில் உள்ளமை போன்றே தனிவாக்கியங்கள், இணைவாக்கியங்கள், தொடர் நிலை வாக்கியங்கள் (Simple sentence, Compound sentence Complex sentence) எனப் பல வகைகளாகப் பிரிப்பார்கள். சிலர், ஆங்கிலத்தில் கையாளுவது போன்று எளிய சிறு சிறு தனி வாக்கியங்களையே எழுத விரும்புவர். சிலர், தொடர் வாக்கியங்களையும், இணை வாக்கியங்களையும் எழுதி, படிப்பவர்களைப் பொருள் காணா வகையில் திண்டாட வைப்பர். சிலர் எளிதில் பொருள் விளங்காத சொற்களை இட்டுக் குழூஉக் குறிகளோ என்னுமாறு சொல்லடுக்கு வாக்கி யங்களை அமைப்பார்கள். என்றாலும் இவற்றுளெல்லாம் எல்லாராலும் விரும்பப்படுவன எளிய இனிய வாக்கியங்களே யாம். மொழி மனிதர் தம் உள்ளக் கருத்தை மற்றவர் களுக்குப் புலப்படுத்துவதற்குத்தான் ஏற்பட்டது என அறிந் தும், அப்படி எல்லாரும் புரிந்துகொள்ளமுடியாதபடி உயர்ந்த நடையில் எழுதுவதுதான் முறை என்று கொள்வது எதற் காகவோ? நாமறியோம்! ஒரு வேளை சிலர் அப்படி எழுதி னால்தான் தம் புலமையைக் காட்ட முடியும் என நம்பலாம். இன்று உலக மொழிகளில் – சிறப்பாக ஆங்கிலத்திலே–எளிய இனிய சொற்களை எளிய வாக்கியங்களில் அமைத்து எழுது

கின்றவர்களே காலத்தை வென்று வாழ்கிறார்கள் எனக் காண்கின்றோம். எளிய இனிய சொற்களாக அமைவதோடு-கருத்துப் பொதிந்த மொழிகளாகவும் அமைய வேண்டுவதும் இன்றியமையாததாகும். திருக்குறள் இதற்கு ஓர் எடுத்துக் காட்டு. ஒவ்வொரு குறளும் சிறு சிறு சொற்களாலேயே - பெரும்பாலும் எல்லோருக்கும் விளங்கும் சொற்களாலேயே-அமைந்துள்ளது. எனினும், அதிலுள்ள பொருட் செறிவும் நுணுக்கமும் காலமெனும் கடும்புனலை நீந்தி வெற்றி காண கின்றன. இந்தச் செய்யுள் முறையில் மாத்திரமன்றி, உரை நடையிலும் இந்த எளிமையைக் கையாளலாம். இடைக் காலத்தில் உரையாசிரியர் சிலர் பாட்டினும் சூத்திரத்தினும் கடுமையாக உரைகளை ஆக்கிச் சென்றுவிட்டனர். திருக் குறளை அறிந்துகொள்வதிலும் பரிமேலழகர் உரையை அறிந்து கொள்வதே கடினம் என்றும் தொல்காப்பியத்தை அறிந்துகொள்வதைவிட நச்சினார்க்கினியர் உரையையும், சேனாவரையர் உரையையும் அறிந்து கொள்வதே கடினம் என்றும் பல ஆண்டுகள் பயின்ற நல்ல மாணவர்களே கூறுகின்றார்கள். எனவே, வாக்கியங்கள் எளிமையும் இனி மையும் கலந்து பயில்வோர் புரிந்து கொள்ளும் வகையில் அமையவேண்டும்.

இனி இந்த வாக்கியங்களை எழுதும்போதும் பேசும் போதும் அறிந்தும் அறியாமலும் நாம் செய்யும் சில தவறு களைக் கண்டு, அவற்றைத் திருத்திக்கொள்வதே நல்ல தமிழை நாட்டில் பரப்ப வழி செய்வதாகும் என்பதை அடுத் துக் காண்போம்.

# 7. மயக்கமும் தெளிவும்

வாழ்வொடு பொருந்தியன மொழியும் அதன் அமைப்பும் இலக்கணமும் என்பதைத் தொடக்கத்திலேயே காட்டியுள்ளேன். வேற்றுமையும் அந்த அடிப்படையிலேதான் அமைந்துள்ளது. இன்று உலகில் வேற்றுமையும் ஒற்றுமையும் அரசியல்வாதிகளால் அலசி அலசிப் பேசப்படுகின்றன. சிறப்பாக இந்தியாவில் 'வேற்றுமையுள் ஒற்றுமை' (Unity in Diversity) என்ற தொடர் பேசப்படாத இடமே இல்லை. நாட்டில் நிலவும் இத்தனை வேற்றுமைகளும் ஒற்றுமைக்கு வழி கோலுவதற்கே என்று வாதிப்பவரும் உண்டு. ஆம்! இல்லாத வேற்றுமையை இருப்பதாகக் கற்பித்துக்கொண்டு, பின் அவற்றுள் ஒற்றுமை வளர்க்கப் பாடுபடுவானேன்? வரலாறு இதற்குப் பதில் சொல்லும். மக்களினம் சேர்ந்து வாழக் கற்றுக்கொண்ட காலத்தில் இவ்வேற்றுமை தேவைப்பட்டது 'சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்று வள்ளுவர் கூறியபடி தொழில் காரணமாக மக்கள் அமைப்பில் வேறுபாடுகள் உருவாயின. அவ்வேற்றுமை மக்கள் அனைவரும் ஒன்றி வாழ்ந்து உயர்வு அடைவதற்கெனவே அமைக்கப்பட்டது. ஒருவர் மற்றவருக்கு உதவுவதற்கெனவே தொழில் வேறுபாடு அமைந்தது. உடல் உறுப்புக்கள் அனைத்தும் ஒன்றிப் பாடுபட்டுப் பயன் பெறுவது போன்று, மக்கள் சமுதாய உறுப்புக்களாய் நின்று உழைத்து ஒன்றிச் சமுதாயம் வளரப் பாடுபடவே வேறுபாடு உண்டாயிற்று. ஆம். அதே நிலையிலேதான் இந்த மொழி வேற்றுமைகளும் தோன்றின. மக்கள் இனத்துத் தொழில் வேறுபாட்டை முதலில் நான்காகப் பிரித்தார்கள் என்பர். இன்று அப்பிரிவு நாற்பதினாயிரமாக வளர்ந்துவிட்டது. ஆனால், தமிழில் இவ்வேற்றுமை 'எட்டு' என்னும் அளவிலே அமைக்கப் பெற்

றது. முதலும் எட்டும் நீங்கினால், உருபு உள்ளவை இடையில் உள்ள ஆறுமேயாம்.

மக்களுள் உண்டான வேறுபாடு எப்படிச் சமுதாயத்தை வளர்க்க உதவி செய்ததோ, அது போன்றே மொழியிடை அமைந்த இந்த வேற்றுமைகளும் அம்மொழியை அழகுபடுத்தவும் விளங்க வைக்கவுமே பயன்பட்டன. இந்த வேற்றுமை உருபுகள் இல்லையானால், எப்படி எல்லா வாக்கியங்களின் பொருள்களையும் அறிந்துகொள்ள முடியும்? மனித இனம் தொழில் கருதிப் பிரியவில்லையானால் எப்படி நாட்டில் நல்ல பல தொழில்களும் பண்பாடுகளும் வளர்ந்து மக்கள் சமுதாயத்தை வளர்க்க முடியும்? ஆனால், ஒன்றில் வேறுபாடு காண்கிறது. ஒன்றிய சமுதாயத்தை வாழவைக்கத் தோன்றிய தொழில் வேறுபாடு, இன்று அச்சமுதாயத்தையே கருவறுக்கும் கூரிய வாளாக மாறிவிட்டது, நாட்டில் எங்கும் இவ்வேறுபாட்டின் அடிப்படையில் எத்தனை எத்தனை கொடுமைகளைக் காண்கிறோம்! சாதி மத வேறுபாடற்ற சமுதாயம் என்று வாயால் பேசியும் எழுதியும், அதே மூச்சில் அந்தச் சாதி அடிப்படையில் சண்டைகளை மூட்டிவிடும் கொடுமையை நாட்டில் இன்று நாள்தோறும் காண்கின்றோம். இந்தக் கொடுமை மொழியின் வேற்றுமையில் இல்லை. மொழியில் உண்டான அந்த வேற்றுமைகள் - அன்றும் சரி, இன்றும் சரி - அந்த மொழியை வளர்க்கவும், செம்மைப்படுத்தவும், விளங்க வைக்கவுமே பயன்படுகின்றன. இந்த நிலையில் அவற்றைப்பற்றிக் கண்டு அறிந்துகொள்ள விரும்புவது நலமேயாகும்.

இவ்வேற்றுமை தமிழில் மட்டும் இருக்கிறது 'என எண்ண வேண்டா. வடமொழி, ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் இருப்பதை அம்மொழி அறிந்த மாணவர்கள் நன்கு அறிவார்கள். தமிழில் இதற்கு இட்ட பெயர்தான் சிறப்புடைத்து.

பிறமொழியில் இந்த வேற்றுமைக்கு அமைந்த பெயர்களின் காரணங்கள் திட்டமாக விளங்கவில்லை. ஆனால், தமிழில் இதன் பெயர்க் காரணத்தை இலக்கணப் புலவர்கள் நன்றாக விளக்கியே செல்கிறார்கள். தொல்காப்பியர் 'வேற்றுமை தாமே ஏழென மொழிப' என்று கூறி, பின் விளியைச் சேர்த்து எட்டாக்கி, அவற்றிற்கெனச் சொல்லதிகாரத்தில் மூன்று இயல்களை அமைத்து, நன்றாக விளக்கிச் சொல்லு கின்றார். நன்னூலார்,

**''ஏற்கும் எவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்**
**வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை.''**

என்று தொல்காப்பிய இயல்களைத் தழுவி வேற்றுமை எட்டே என்று கூறி, அதன் பெயர்க் காரணத்தையும் விளக்குகின்றார்; வேற்றுமையென்பது பெயர்ச் சொல்லின் இறுதியில் வரும் என்றும், அவ்வாறு வந்து அந்தப் பெயர்ச் சொல்லுக்கு உரிய பொருளை மாற்றி நிற்கும் என்றும் காட்டுகின்றார். 'இராமன்' என்பதற்கும், 'இராமனை' என்பதற்கும், 'இராமனால்' என்பதற்கும் உள்ள வேறுபாடு யாருக்குத்தான் விளங்காது? இராமன் என்ற ஒரே சொல்லில் வெவ்வேறு வேற்றுமை உருபுகள் வந்து அச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவதாலேயே அது வேற்றுமையா யிற்று என்பதை இதனினும் எப்படி நன்றாக எடுத்துக்காட்ட இயலும்? இந்த வேறுபாடுகள் எடுத்துக் காட்டப் பெறா விட்டால், மொழி எப்படி உண்மையில் கருத்தை விளக்குவ தாகும்? 'இராமன் மரம் வாள் வெட்டினான்' என்று வேற்றுமை உருபுகள் இல்லாமல் சொல்லிப் பாருங்கள். இதன் பொருள் நன்றாக விளங்குகிறதா? எப்படி விளங்கும்? 'இராமன் மரத்தை வாளால் வெட்டினான்' என்றால், சிறு குழந்தைக்கும் பொருள் விளங்குமல்லவா? எனவே, இவ்வாறு தெளிவு பெற்ற மொழியை இசைத்து, அதன் பயனை மக்கள் நன்கு உணரும் பொருட்டு அமைப்பதே வேற்றுமையாகும்.

இதில் முதல் வேற்றுமை என்று, உள்ளதையே வேறுபடுத்தாத நிலையில், ஏன் கூற வேண்டும் என்ற ஐயம் சிலருக்கு எழலாம். எனினும், ஆராய்ந்தால் அதற்கும் காரணம் உண்டு 'இராமன்' என்ற சொல்லை மாத்திரம் சொன்னால், அது முதல் வேற்றுமையாகாது. அச்சொல் அடுத்து வரும் பயனிலைக்கு எழுவாயாய் 'இராமன் வந்தான்' என அமைந்தாற்றான் அது எழுவாய் வேற்றுமையாகும் அதில் 'இராமன்' என்ற சொல் மாறுபாடின்றி வரினும், அதன் பொருளிலும் செயலிலும் மாறுபாடு காண்கின்றமையாலும், 'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்' (தொல்) என்ற விதியின் வழியில் உள்ளது இதில் சிறக்க எடுத்துக் காட்டுதலாலும், தனிச் சொல்லிலும் இத்தொடரில் வரும் சொல் பொருளளவில் மாறுபடுதலாலும் அதையும் வேற்றுமை என்றே கொண்டனர். அது பொருத்தந்தானே!

வேற்றுமைகளின் உருபுகளை மேலே கண்டோம். எனவே, இந்த அளவோடு வேற்றுமை பற்றி நிறுத்திக்கொள்ளலாம். என்றாலும், செய்யுளில் வரும் இந்த வேற்றுமை பற்றியும், ஒரே வாக்கியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வேற்றுமைகள் வருவது பற்றியும் காண்போம் 'வேற்றுமை மயங்கியல்' என்ற ஓர் இயல் அமைத்துத் தொல்காப்பியர் அதில் உண்டாகும் மயக்கத்தையும் வேறுபாட்டையும் காட்டியுள்ளார். நன்னூலார்,

**'யாதன் உருபிற் கூறிற் றாயினும்**
**பொருள் செல் மருங்கின் வேற்றுமை சாரும்.'**

என வரையறுத்தார். எனவே, உருபுகள் முக்கியமாயினும், செய்யுளிலும் பிற தேவையான இடங்களிலும் ஒரு வேற்றுமை உருபு நிற்றற்குரிய இடத்தில் வேறு வேற்றுமை உருபு வந்து அமைவதும் உண்டு. அப்போது என்ன பொருளில் அது

வருகின்றதோ, அந்த வேற்றுமை என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். பெரும்பாலும் இவ்வேற்றுமை மயக்கம் செய்யுளிலேதான் இடம் பெறும். மற்றும், தொல்காப்பியர் இன்னின்ன வேற்றுமை இன்னின்ன வகையில் வரும் என்று விளக்கிக் காட்டுகின்றார். 'மரத்தைக் கிளையை வெட்டினான்,' என்று சொல்லுவது சரிதானா? எண்ணிப் பார்த்தால், சரியெனவே படுகின்றது. இலக்கணத்திலும் தவறு இல்லை என்றுகூடச் சொல்லிவிடலாம். என்றாலும், அதைச் சொல்லும் போது மொழி தடுமாறுவது போன்ற உணர்ச்சி உண்டாகின்றது. 'மரத்திலிருந்து கிளையை வெட்டினான்,' என்றாலும் சரி போலத் தெரிகின்றது என்றாலும், அதிலும் சொற் செட்டும் சொல் அழகு அமைப்பும் இல்லை எனத் தெரிகின்றதல்லவா? அதனால், தொல்காப்பியர் 'மரத்தினது கிளையை வெட்டினான்' எனச் சொல்லுமாறு விதி அமைக்கிறார். (அவர் இவ்விதிகளை அவர் காலத்துக்கு முன் இருந்த இலக்கிய மரபுகளைக் கொண்டே இயற்றினார் என்பது நன்கு அறிந்த ஒன்று.)

**'முதற்சினைக் கிளவிக்கு அதுவென் வேற்றுமை**
**முதற்கண் வரினே சினைக்குஐ வருமே'** (571)

என்று தொல்காப்பியர் திட்டமிட்டுக் கூறியுள்ளார்.

**'அது முதற் காயின் சினைக்கு ஐயாகும்.'**

என்பது நன்னூல்.

இவ்வாறு தமிழ் இலக்கண நூலார் வேற்றுமையை இடமறிந்து பயன்படுத்த வேண்டுமென்று கூறி, அதன் வழியின் செம்மை நலம் கெடாமல் பாதுகாப்பதோடு, இனிமையும் எளிமையும் மாறா நிலையினையும் வலியுறுத்துகின்றார்கள். மொழிக்கு இவ்வேற்றுமை இன்றியமையாத காரணத்தினாலேதான் இது பற்றி ஆசிரியர்கள் அதிக இலக்கண நெறி

காட்டியுள்ளார்கள். இப்போது இது போதும் என அமை கிறேன். இப்படியே திணையும், பாலும், எண்ணும், இடமும், மொழி செம்மையும் எளிமையும் செட்டும் சிறப்பும் பெறப் பயன்படுவனவே என்று கூறி, இன்னும் இவை பற்றி விரிப்பின் பெருகும் என்று அஞ்சி மேலே செல்லலாம் என நினைக்கிறேன்.

வாக்கியங்களின் அமைப்புக்களைப் பார்த்துக் கொண்டே வந்தோமல்லவா? மொழியை வாக்கிய அமைப்புக்களே விளக்குவன என்பதை அறிந்தோம். அந்த வாக்கிய அமைப்புக்களில் முன்னரே சில தொடர்களைக் கண்டோம். தொகை நிலைத் தொடர், தொகா நிலைத் தொடர் என அவை அமைந்த நிலையினை அறிந்தோம். தமிழ் மொழியில் வாக்கியங்களைப் பிழைபடப் பலர் எழுதுகின்றனர். அவற்றை விளக்கி அவற்றின் திருத்தங்களைக் காட்டுவதன் முன், இம் மொழியில் ஒரே தன்மையுடையனவாகத் தோன்றினும், சில வகையில் மாறுபடும் சில தொடர்களைப் பற்றிக் கூறுதல் நலம் எனக் கருதுகின்றேன்.

தமிழில் **இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர்** என்று இரு பிரிவுகள் உள்ளன. இரண்டிலும் ஒரு சொல் இரு முறை வந்து ஒலிப்பது போலவும் அவற்றுள் வேறுபாடு இல்லாதது போலவும் தோன்றும். என்றாலும், ஆராய்ந்து பார்த்தால், இரண்டுக்கும் வேறுபாடு உண்டு எனத் தோன்றும். அவை யாவை?

## இரட்டைக் கிளவி

**சலசல**வென நீர் ஓடிற்று.

1. சலசல என்பதைப் பிரித்தால் இது பொருள் தாராது.
2. இது ஒலிக் குறிப்பு.
3. இது இரண்டுக்குமேல் சேர்ந்து வாராது.

## அடுக்குத் தொடர்

**பாம்புபாம்பு** எனக் கூவினன்

1. இதைப் பிரிப்பினும், ஒவ்வொரு சொல்லும் தனி நின்று பொருள் தரும்,
2. இத்தொடர் சந்தர்ப்பத்திற்கியைந்தபடி அடுக்கி வரும். (பெயர், வினை, இடை, உரி என்ற நான்கு சொற்களும் அடுக்கி வரும்.)
3. இரண்டு, மூன்று நான்கு முறை அடுக்கி வரும்.

இப்படியே ஆகுபெயர் அன்மொழித் தொகை என்ற இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. அன்மொழித் தொகையைப் பற்றி ஓரளவு முன்னரே கண்டுள்ளோம். ஆகுபெயர், ஒன்றன் இயற்பெயர் அதன் சம்பந்தமுடைய வேறு ஒன்றற்கு ஆகிவருவது. 'கார் அறுத்தான்' என்பதில் 'கார்' என்னும் காலத்தின் பெயர், அக்காலத்தில் விளையும் நெல்லுக்கு ஆகி வந்தது. அன்மொழித் தொகை பிற தொகையோடு சார்ந்து அதில் உள்ளது அல்லாத வேறொரு சொல்லில் பொருள் சிறந்து முடிவது. இரண்டும் வேறு பொருள்களைக் குறிப்பனவேயாயினும், இவற்றின் அமைப்பிலும் ஆட்சி முறையிலும் சில வேறுபாடுகள் உள. அவை யாவை?

## ஆகு பெயர்

1. ஒன்றன் பெயர் மற்றொன்றற்குப் பெயராய் வருவது.
2. ஒரு மொழியில் வருவது.
3. சொல்லோடு இயைபு பற்றிய பிறிதொன்றை விளக்குவது.

## அன்மொழித் தொகை

1. தொகையாய் வருவது.
2. தொடர்மொழியில் வருவது.

3. சொற்களோடு இயைபு இல்லாத பிறிதொன்றினை விளக்குவது.

வினைச் சொல்லில் ஏவல் வினை, வியங்கோள் வினை என்று இருவகை உண்டு. இரண்டும் ஒன்றை ஒன்று ஒத்தன வாகவே காணப்பெறும். எனினும், பொருளில் வேறுபாடு உண்டு. வா' என்பதற்கும் 'வருக' என்பதற்கும் வேறுபாடு ஓரளவு தெரிகிறதன்றோ? என்றாலும், அது என்ன என்பது தெரியவில்லை. அதையும் நன்கு அறிந்துகொள்ளுதல் அவசியம்.

### ஏவல்

1. கட்டளைப் பொருளில் வரும்.
2. ஒருமை பன்மை வேறுபாடு உண்டு.
3. முன்னலைக்கே உரியது.

### வியங்கோள்

1. மரியாதை, வாழ்த்தல், வைதல் முதலிய பொருள்களில் வரும்.
2. ஒருமை பன்மை வேறுபாடு இல்லை.
3 தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடங்களுக்கும் உரியது.

வினையின் சார்பில் வரும் பெயர்கள் சில உள. அவற்றுள் தொழிற்பெயரும் வினையால் அணையும் பெயரும் எண்ணத் தக்கன. '**நடத்தல்** நல்லது,' என்பதில் நடத்தல் தொழிற்பெயர். '**நடந்தானைக்** கண்டேன்,' இதில் நடந்தான் வினையால் அணையும் பெயர். இவை இரண்டுக்குங் கூட வேறுபாடுகள் உண்டு. அவை என்ன என்பதைத் திட்டமாகத் தெரிந்துகொள்ளுதல் நல்ல தல்லவா?

### தொழிற் பெயர்

1. தொழிலுக்குப் பெயராய் வருவது.
2. பெரும்பாலும் காலம் காட்டாது.
3 படர்க்கை இடத்திற்கே உரியது.

### வினையால் அணையும் பெயர்

1. தொழிலைச் செய்த பொருளுக்குப் பெயராய் வருவது.
2. காலம் காட்டும்.
3 மூவிடத்துக்கும் உரியது.

இத்தகைய வேறுபாடுகளையெல்லாம் அவசியம் அறிந்து கொள்ளவேண்டுமா என்ற ஐயம் சிலருக்கு த்தோன்றும். மேற் போக்காகப் பார்த்தால், வேண்டா என்று கூடச் சொல்லத் தோன்றும். ஆயினும் சற்று ஆழ்ந்து எண்ணிப் பார்த்தால், இவற்றின் அடிப்படைகளை விளங்கிக்கொண்டாலன்றி இவற்றை மொழியில் வழங்கும் போது இடர்ப்பட வேண்டும் என்பது தெரிகிறதல்லவா? ஒன்றை மட்டுமே காட்டிச் செல்லலாம் என நினைக்கின்றேன்.

ஏவல், வியங்கோள் இரண்டினையும் பார்ப்போம். தமிழ் மொழி மரியாதை வழங்கும் மொழி. ஆங்கிலத்தில் முன்னிலையில் யாராயிருந்தாலும் 'You' என்று தான் சொல்லுகிறோம். 'வா' என்பதற்கு 'Come' என்றுதான் சொல்லுகிறோம். மரியாதைக்கு வேண்டுமாயின், 'Please' என்னும் வேறு சொல்லையும் சேர்த்துக்கொள்ளுகிறோம். அது அந்த மொழியின் மரபு. தமிழில் தனிச் சொற்களே அந்தச் சிறப்பைச் செய்கின்றன. முன்னுள்ளவர் தகுதிக்கு ஏற்ப நீ, நீர், நீங்கள் என வழங்குகின்றோம். தகுதி கருதி வா, வாரும், வருக என அழைக்கின்றோம். இதில் 'வா' என்பது ஏவல். 'வருக' என்பது வியங்கோள். இவற்றின்

வேறுபாடு அறியாவிட்டால், நாம் நிச்சயம் இடர்ப்படவே நேருமல்லவா? பணியாளனைப் பார்த்து 'வருக' என அழைத் தலும், ஆசிரியரை 'வா' என அழைத்தலும் கேலிக் கூத்தும் வெட்கக் கேடுமாமல்லவா? எனவேதான் இவை அனைத்தும், இவற்றின் வேறுபாடுகளும் அறிந்துகொள்ளுதல் நல்ல தமிழ் எழுதப் பயன்படும் எனக் காட்ட விழைந்தேன். இப்படியே பிற வேறுபாடுகளையும் உணர்ந்து, இவற்றால் மொழியின் நலம் காணல் சிறப்புடைத்தாகும்.

தமிழில் இப்படியே சில சொற்களின் அமைப்புக்களும் உள்ளன. ஆங்கிலத்தில் 'We' என்ற சொல் படர்க்கை யாரையும், முன்னிலையாரையும் உளப்படுத்தி வழங்கும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைச்சொல்லாகும். 'We three came', என்பது மூவகையிலும் பொருள்படுவதை எண்ணிப் பார்க்கலாம். தமிழில் நாம், நாங்கள் என்ற இரு சொற் களும் பொருள் நுணுக்கம் வாய்ந்தனவாம். 'நாம்' என்ற போது முன் உள்ளவனையும் அது பிணிக்கிறது. 'நாங்கள்' என்ற போது அவனை நீக்குகின்றது. இந்தச் சிறு வேறு பாட்டால் மொழியின் நுண்மை விளங்குகின்றதன்றோ?

இவ்வாறே பல சொற்களும் சொற்றொடர்களும் ஒவ்வொரு மொழியிலும் நன்கு அறிந்து பயன்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளன.

# 8. வாக்கியங்கள்

**வா**க்கியங்களைப் பற்றி அறிந்து கொள்ளுமுன் அவ் வாக்கியங்களைச் செம்மையாக அமைக்க உதவும் குறியீடு களைப் பற்றி அறிந்து கொள்ளுவது அவசியம். தமிழுக்கு மட்டுமன்றி எல்லா மொழிகளுக்குமே இக்குறிகள் அவசியம் தேவை. மொழி கருத்தை விளக்கப் பயன்படுகிறது அன்றோ? அக்கருத்தைச் சொல்லும் முறையில் சொன்னால் அன்றோ விளக்கமாகத் தெரியும்? அவ்வாறு தெளிவான முறையில் சொல்லுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படு வனவே இக்குறியீடுகள். இவை எல்லா மொழிகளிலும் ஒரே வகையிலேதான் அமைந்துள்ளன. சொல்லில் எடுத்தலும் படுத்தலும் பொருந்தச் சொல்லுவதோடு, அவை பயிலும் வாக்கியங்களிலேயும் இக்குறியீடுகளை அமைத்தே திட்ட மாகத் தத்தம் கருத்தை யாரும் வெளிப்படுத்த முடியும். பேச்சு வழக்கில் அவற்றைப் பிற எழுத்துக்களின் உச்சரிப் பைப் போலக் காட்ட முடியாது என்றாலும், சொல்லும் முறையிலே அவை விளங்குவதோடு எழுதும் போது அவற்றைக் கட்டாயம் இட்டே எழுத வேண்டும். இம்முறை எல்லா மொழிக்கும் பொதுவே.

ஒரு வாக்கியம் அல்லது சொற்றொடர் முடிந்துவிட்டது என்றும், அதில் எடுத்த ஒரு பொருள் நிறைவெய்தக் காட்டப்பெற்றது என்றும் எப்படி அறிந்து கொள்ளுவது? வாக்கிய முடிவை அல்லது முற்றைக் காட்டுவதே **முற்றுப் புள்ளி**. இப்படியே **காற்புள்ளி அரைப்புள்ளி, முக்காற்புள்ளி** என்ற புள்ளிக் குறியீடுகளும், **வினாக் குறி, வியப்புக் குறி, மேற்கோட்குறி** போன்ற சிலவும் எம்மொழிக்கும் பொதுவாய் உள்ளன. தமிழில் இந்த நிறுத்துக் குறிகளைக் கால அளவைக்கு ஏற்பவே பெயரிட்டு வழங்கியிருக்கிறார்கள்.

என்றாலும், இந்தக் குறியீடுகளை நம் தமிழ் ஓலைகளில் அதிகமாகக் காண இயலாது. அதனாலே பல ஏட்டுப் பிரதிகளில் பிழைகள் உண்டாவதையும் அவற்றைப் படி எடுப்பதில் தவறு உண்டாவதையும் காண்கின்றோம். இன்று தமிழில் செம்மையாகச் செய்யப்பட்ட இம்முறை பெரும்பாலும் ஆங்கிலத்தைத் தழுவியே மேற்கொள்ளப் பட்டது.

மாத்திரையின் அளவு ஒரு நொடி. அந்த அடிப்படை யிலேதான் இந்த நிறுத்துக் குறிகள் அமைகின்றன. காற் புள்ளிக்கு (Cama ,) ஒரு மாத்திரை அளவும், அரைப்புள்ளிக்கு (Semicolan ;) இரண்டு மாத்திரை அளவும், முக்காற்புள்ளிக்கு (Colan :) மூன்று மாத்திரை அளவும், முற்றுப்புள்ளிக்கு (Full stop .) நான்கு மாத்திரை அளவும் அளவாம் என்பர். இந்த அமைப்பாலேயே அவற்றின் பெயர்க் காரணங்களும் விளங்குகின்றன அல்லவா? இவைகளை இடமறிந்து முறை யறிந்து பயன்படுத்த வேண்டும். அன்றேல், பெருந்தவறு களெல்லாம் நேரும். ஆங்கிலத்தில் இவற்றிற்கெல்லாம் நல்ல உதாரணங்கள் காட்டுவார்கள் 'Kill him not, bring him,' என்று எழுத நினைத்தவர் 'Kill him, not bring him' என்று எழுதி உத்தரவிட்டாராம். முடிவு என்ன? எப்படி இருக்கும்? அந்தக் காற்புள்ளி இடம் மாறியதால் கொல்ல வேண்டா எனக் கூற நினைத்தமைக்கு மாறான செயலே நிகழ்ந்தது. தமிழிலும் பிற மொழிகளிலும் இப்படிப்பட்ட அமைப்புக்கள் உள. எனவே, இக்குறியீடுகள் சொல் அமைப்பில் இனிமையும் ஒழுங்கும் காட்ட வருவதோடு நினைத்த பொருளை மாறாது காட்டவும் நன்கு பயன்படு கின்றன என்பதை அறிய வேண்டும். எனவே, நல்ல மொழிக்கு இவையும் இன்றியமையாது வேண்டப் பெறு கின்றன.

இவ்வமைப்பு, பெரும்பாலும் ஆங்கில மொழி நாட்டில் பரவிய பிறகே சிறப்பாக வளர்ந்தது. என்றாலும், இன்று

சிலர் தம் மனம் போன வழிகளில் இக்குறியீடுகளை இட்டு மொழிக் கொலை செய்கின்றனர் தேவை இல்லாத இடங்களிலெல்லாம் சிலர் அளவுக்கு மீறி இக்குறியீடுகளை இட்டுப் பொருளைக் கெடுக்கின்றனர். சிலர் இதை உபயோகிப்பதே இல்லை. இரண்டோருதாரணம் காட்டி அமையலாம். 'கல்வி, அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றைத் தரும் என எழுதுதல் சரியாகும். சிலர் இவற்றுக்கு இடையில் உம்மையைச் சேர்த்தும் இக்குறியிட்டு எழுதுவார்கள். 'கல்வி, அறமும், பொருளும், இன்பமும், வீடும் பயக்கும்' என எழுதுவது தவறாகும். உம்மை இட்டபின் அக்குறியீடு தேவையில்லை. இவ்வாறே அரைப் புள்ளியிடுவதிலும் முக்காற்புள்ளி இடுவதிலும் தவறு நேர்தல் இயற்கை. முற்றுப் புள்ளியைப் பற்றி யாருக்கும் இக்காலத்தில் ஐயம் இல்லை இந்தக் குறியீடுகளைப் பயன்படுத்திப் பழைய இலக்கண நூல்களுள் திட்டமான வரையறைகளும் முறைகளும் இல்லை என்றாலும், இன்று ஆங்கிலம் முதலிய மொழிகளின் அமைப்புக்களைக் கண்டும், சொல்லுக்கு இனிமையும் முறையும் அறிந்தும், இன்னின்ன குறியீடுகளை அமைத்தல் வேண்டுமென்று அறிஞர்கள் நன்கு திட்டமாக எழுதியுள்ளார்கள். அவற்றின் விரிவெல்லாம் இங்கு விளக்கின் பெருகும். அவற்றைக் கண்டு அந்த முறைகள் தவறாத வகையில் குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறி மேலே செல்லுகிறேன்.

இனி வாக்கியங்களைப் பற்றிக் காண்போம். தனி வாக்கியம் (Simple), தொடர் வாக்கியம் (Complex), இணைப்பு வாக்கியம் (Compound) என மூவகையாக வாக்கியங்களைப் பிரிப்டார்கள் என்பதை முன்னமே கண்டோம். இவை பற்றித் தமிழ் இலக்கணங்கள் அதிகமாகக் காட்டவில்லை. எனினும், இன்று ஆங்கிலத்தில் வழங்கும் அமைப்பை ஒட்டி இவற்றை நாம் வரையறுத்துக் கொள்கிறோம். தொல்காப்பியரோ, நன்னூலாரோ இவற்றை

நன்கு காட்டாத காரணத்தாலே எப்படி வேண்டுமானாலும் எழுதலாம் என்பது அவர்கள் கருத்தன்று. எழுத்தையும் சொல்லையும் பகுத்துக் காட்டி விளக்கம் கூறிய பின், அச் சொற்கள்—சொற்றொடர்கள்—தொகை விரியாக அமைய வேண்டுவதைக் காட்டி, அவற்றின் அமைப்புக்களைக் காண விட்டுவிட்டார்கள். மற்றும் தமிழில் பாட்டும் உரைநடையும் பண்டைக் காலத்திலிருந்தே இருந்து வந்தன. என்றாலும், நாம் இன்று பண்டைத் தமிழ் என நம்முன் காண்பன வெல்லாம் பாட்டாகவே உள்ளமையின், அப்பாட்டின் இலக்கணத்தைத்தான் தொல்காப்பியர் செய்யுளியலில் காட்டியிருக்கின்றார். உரைநடை உண்டு என அவர் சூத்திரம் குறிக்கின்றது. அந்த உரை நடையாகிய சொற்றொடர்களின் அமைப்பையும் அவர் குறித்துள்ளார். ஆகவே, அவற்றின் விளக்கம், மொழி வளர வளர, வளர வேண்டிய ஒன்றாக அமைந்துவிட்டது. இன்று, மேலை நாட்டார் நம் நாட்டிற்கு வந்து மொழி வளர்க்கத் தொடங்கிய பிறகு, உரைநடை அதிகமாக வளர்ந்து வருகின்றது. எனவே, அதற்கேற்பவே உரைநடையை விளக்கும் இலக்கண அமைதிகளும், குறியீடுகளும் அவை பற்றிய விளக்கங்களும் வளர்ந்து வருகின்றன. அந்த அடிப்படையிலேதான் உரை நடையை அல்லது வாக்கிய அமைப்பை இந்த மூவகைப் பிரிவில் அமைத்துள்ளார்கள்.

நான் முதலில் காட்டியபடி எளிய இனிய நடையில் எழுதுவது நலம் பயப்பதாகும். அதற்குத் தனி வாக்கியங்களே போதும். என்றாலும், சொல்லும் பொருளைத் திட்டமாகவும் தொடர்பு கெடாமலும் கூறவும், அப்பொருளோடு தொடர்புடைய வேறு சிலவற்றைச் சேர்க்கவும் பிற வாக்கியங்களும் இன்றியமையாது வேண்டப்படுவனவேயாம். ஆயினும், அவற்றைப் பொருள் விளங்காத வகையில் பின்னிப் பிணைத்து, எழுதினவரே திரும்பப் படிக்கத் திண்டாடும் நிலையில் அமைக்காது, எளிய வகையில் எழுத வேண்டும்.

அதிலும், இன்று எல்லாரும் படிக்க வேண்டிய வகையில் நல்ல நூல்கள் வரவேண்டுமெனத் தமிழ் அறிஞரும் அரசாங்கத் தாரும் விரும்புகின்றனர் எனவே, உரைநடை எளிய வகை யில் அமைய வேண்டும். சங்க காலத்தில் உண்டான உரை நடை நூல்கள் வழக்கிழந்து அழிந்தமைக்கும், இடைக்காலத் தில் உண்டாகி இன்று ஏட்டளவில் உள்ள பல உரை விளக்க உரைநடைகள் பலரால் விரும்பப்படாமைக்கும் காரணம் அவற்றில் எளிமை காணாமையேயாகும். தமிழில் மட்டுமன்றி, ஆங்கிலத்திலும் இந்த நிலையைக் காண் கிறோம் பழைய ஆங்கில உரைநடை இரண்டொரு நூற்றாண்டுகளிலேயே மறக்கப்பட்டு விடுகின்றது. எனவே, தமிழில் கூடிய வரை தனி வாக்கியங்களையும், தள்ள முடியாத இன்றியமையாத இடங்களில் தேவையாயின் பிற வாக்கியங்களையும் அமைத்து எழுதப் பழகல் நலம் பயப்ப தாகும். இனி அவற்றின் அமைப்புக்களைக் கண்டு மேலே செல்லலாம்.

இங்கே மற்றொன்றையும் நினைக்க வேண்டியுள்ளது. முன் ஒரு முறை வேற்று மொழி தமிழில் வந்து வழங்குவது பற்றிக் குறித்தேன். அந்த வகையில் இங்கு வாக்கிய அமைப் பினைக் காணல் நலம். தமிழின் எம்மொழியையும் கற்கும் ஆற்றல் வாய்ந்தவன். அவனது ஆங்கிலப் புலமையை ஆங் கில நாட்டவரே மிக வியந்து போற்றியுள்ளனர். எனவே, எல்லா மொழியையும் கற்கவும் எழுதவும் அவனால் இயலும். ஆனால், ஒன்று: ஆங்கிலத்தை ஆங்கிலமாகவும் தமிழைத் தமிழாகவும் எழுத வேண்டும் என்ற அடிப்படையைச் சிலர் மறந்து விடுகின்றனர். இரண்டையும் இணைத்து எழுதுவதில் தவறில்லை எனவும் சிலர் கூறி வருகின்றனர். நம்முள் பலர் தமிழையும் ஆங்கிலத்தையும் விரவிப் பேசுவதைக் காண் கிறோம். அப்படியே எழுதின் என்னாவது? 'பையன் ஸ்லேட் டையும் புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு ஸ்கூலுக்குப் போனான்,' என்று எழுதினாலும் பொருள் விளங்குகின்றது.

ஆனால், அது 'நல்ல தயிழ்' ஆகுமா? எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, எளிய இனிய தமிழ் எழுவதோடு அதற்குரிய அமைப்பில் நின்று வாக்கியங்களை எழுதுவதும் மிகச் சிறந்ததாகும்.

மூன்று வாக்கியங்களின் தன்மை இவைதாம்: தனி வாக்கியம் என்பது ஓர் எழுவாயும் ஒரு பயனிலையும் கொண்டு முடிவது. பயனிலைக்குச் செயப்படு பொருள் இருப்பினும் இருக்கலாம்; இல்லையானாலும் தவறு இல்லை. அது போன்றே எழுவாயே ஒன்று என்ற போது, அதனோடு தொடர்ந்து அந்த ஒரே பயனிலைக் கொண்டு முடிவதாக உள்ள வேறு சில சொற்களும் வரலாம்.

இராமன் வந்தான்.
இர்ாமன் மரத்தை வெட்டினான்.

இராமலும் கிருஷ்ணனும் கந்தனும் கோவிந்தனும் வந்தார்கள்.

இவை மூன்றும் தனிவாக்கியங்களே. மூன்றாவது வக்ரியத்தில் நான்கு எழுவாய்கள் இருப்பினும், அவை அனைத்தும் ஒரே பயனினைலயைக் கொண்டு முடிவதால் இது தனி வாக்கியமே; மற்றும் இந்த வாக்கியங்களின் பொருள்கள் மற்றவர்கள் விளக்க வேண்டாத வகையில் நன்கு விளங்குகின்றன அல்லவா?

இரண்டாவதாக உள்ன தொடர்நிலை வாக்கியம் ஒரே எழுவாயைக் கொண்டாலும் பல பயனிலைகளைக் கொண்டு முடிவதாகும். ஒவ்வொரு பயனிலையையும் நாம் முன் கண்ட குறுயீடுகளில் அரைப் புள்ளி (Semicolon) இட்டுப் பிரிக்க வேண்டும். மற்றும் அந்த ஒவ்வொரு பயனிலைக்கும் தனித் தனி திரும்பத் திரும்ப அந்த எழுவாயைச் சொல்லிக்கொண்

டிருக்க வேண்டுவதில்லை. அப்படிச் சொல்லின், ஒவ் வொன்றும் தனித்தனியாக நின்று தனி வாக்சியங்களாகவே முடியும்.

'கற்பது நல்லது மட்டுமன்று; வாழ்வுக்கும் வழி காட்டு கிறது,' என்பதில் கற்பது என்ற ஒரே எழுவாய்க்கு இரு பயனிலைகள் (நல்லது, காட்டுகிறது) வந்துள்ளன. சிலர் இரண்டாவது பிரிவிற்கு மாற்றுப் பெயர்ச்சொல் (Pronoun) எழுதுவது உண்டு. 'கற்பது நல்லது மட்டுமன்று; அது வாழ் வுக்கும் வழி காட்டுகிறது,' என அந்த வாக்கியம் அமையும். இதில் 'அது' தனி எழுவாயாக அமையினும், அரைப்புள்ளி இட்டு வாக்கியம் அமைந்திருப்பதால், இதையும் தொடர் வாக்கியம் என்று ஏற்றுக்கொள்வதில் தவறு இல்லை எனலாம்.

'ஆசிரியர் கணக்கை வீட்டில் போடவேண்டும் என்று சொன்ன காரணத்தால், எனக்கு வீட்டில் வேறு வேலைகள் இருந்த போதிலும், எனது உடல் நலம் சரியாக இல்லை என் றாலும், அவர் சொல்லிய படியே செய்ய வேண்டும் என்று கருதி, மறுநாள் பள்ளிக்கூடம் போகும் போது, அக்கணக் கைப் போட்டு எடுத்துக்கொண்டே சென்றேன்.' இது இணை வாக்கியம். இதில் பல பொருள்கள் பிணைந்துள்ளன. ஆசிரியர் மாணவருக்கு இட்டபணி, அம்மாணவரின் வீட்டு வேலைகள், அவருக்கு உடல் நலம் இல்லா நிலை எனினும் ஆசிரியர் சொற்படி நடந்த பண்பு இத்தனையும் இதில் அடங் கியுள்ளன. எனவே, இது இணைப்பு வாக்கியமாகின்றது. இத்துணைப் பெருவாக்கியம் தேவையா? இல்லைதான். பின் ஏன் உண்டாயிற்று? இவர் தாம் கூற வேண்டிய பொருளை அழகுபடக் கோவையாக்கிக் கூற நினைத்திருக்கலாம்; நீண்ட வாக்கிய அமைப்பின் திறன் காட்ட எண்ணியிருக்கலாம்; இடையில் பொருள் கெடாத அமைப்பையும் கருதியிருக் கலாம். எனவே, இவ்வாறு கூறுதல் இலக்கணப்படி தவறு அன்று. என்றாலும், இதையே பொருள் தொடர்பு கெடாத

படி தனித்தனி சிறு வாக்கியங்களாகப் பிரித்துச் சொல்லி யிருந்தால் எளிமையாய் இருக்கும். இருப்பினும், இத்தகைய இணைந்த சொற்றொடர்களும் மொழி இனிமைக்கு ஓரளவு தேவையாகவே உள்ளன.

சிறு தனிச்சொற்றொடர்கள், சொல்உரம் பெற்றவை யாகிப் பொருளை விளக்குவதோடு, அப்பொருள் சிறக்கும் வகையில் வற்புறுத்தப் பெறுவதைக் காணலாம். காலஞ் சென்ற **திரு. வி. க.** அவர்கள் உரைநடையில் இந்தப் பண்பைக் காணலாம். அவர் நடையைக் கற்றாரும் மற்றாரும் ஆணும்-பெண்ணும்-ஒரு சேர விரும்பியதன் இரகசியம் அவர் தம் எளிய நடையின் இனிமையேயாகும். சங்க காலப் பாடல்களிலுங்கூட இந்த உண்மையைக் காணலாம், எனவே நல்ல தமிழ் எழுத விரும்புகின்றவர்கள், கூடிய வரையில் தொடர் வாக்கியத்தையோ இணை வாக்கியத்தையோ எழுதுவதை விடுத்துத் தனி வாக்கியங்களிலே பொருள் சிறக்க எளிய முறையில் நன்கு எழுதக் கற்றுக்கொள்ள வேண்டும். இன்று உலகம் போற்றும் சிறந்த ஆங்கில அறி ஞரின் நூல்களின் நடை இதை வலியுறுத்தும்.

வாக்கியங்களை எழுதுகின்றபோது பலர் சாதாரணத் தவறுகளையும் செய்துவிடுகின்றனர். ஒருமை பன்மையைப் பற்றி முன்னமே குறிப்பிட்டுள்ளேன், இங்கேயும் அதைக் கூற வேண்டியுள்ளது. இது மிக முஃகியமாக எண்ணத் தக்கது! நாம் நாள் இதழ்கள் பலவற்றில் இத்தகைய குறை பாடுகளைச் காண்கிறோம். வானொலியில் செய்தியைப் படிக்கும்போது 'வாசிப்பது இன்னார்' என்கின்றனர். 'வாசிப்பது கல்யாணி' என்றால், கல்யாணி அஃறிணையா? 'வாசிப்பவர்' என்றல்லவா சொல்லவேண்டும்? 'இது எழு தியது இன்னார்' எனச் சாசனம் முதலியவற்றில் எழுதுவார் கள். 'இதை எழுதியவர்' என்று அத்தொடர் இருக்க வேண்

டும். 'இது', எழுதியது' என்னும் இரு சொற்களுமே இவ்வாறு தவறாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளன. இவையெல்லாம் மிக எளிமையாக நீக்கப்பட வேண்டுவன. சற்று எண்ணிப் பார்த்தால், மொழியின் அடிப்படையாகிய எழுவாய் வேற்றுமை அமைப்பைச் சிந்தித்தால், இந்த மிகச் சாதாரணமான பிழைகளை அறவே நீக்கிவிட இயலும். எனவே, ஒவ்வொருவரும் நல்ல தமிழ் அன்றானாலும் குற்றமற்ற தமிழையாயினும் பேசவும் எழுதவும் கற்றுக்கொள்ள வேண்டும். அதிலும், மற்றவர்களுக்கு அறிவுறுத்தவும். விளக்கந் தரவும் பயன்படும் வானொலி, நாளிதழ் போன்றவற்றுள் இத்தகைய மிகவும் சாதாரணப் பிழைகள் வாராமல் காத்துக்கொள்வது அவசியம். 'இன்று வண்டிகள் வாராது' என்று சொல்லுவது தவறு அல்லவா? வண்டிகள் என்ற பன்மை எழுவாய் 'வாராது' என்ற ஒருமைப் பயனிலை கொண்டு முடியுமா? சற்று நினைத்தால் இந்த உண்மை நன்கு புலப்படுமல்லவா?

இவ்வாறே உயர்திணைக்கு அஃறிணையை வழக்குவதும் உண்டு. காலம் மாற்றி வழங்குவது உண்டு. அவற்றை ஓரளவு வழு அமைதியாகக் கொள்ளலாம் என மேலே காட்டினேன். என்றாலும், அந்த வழு அமைதி நிலையெல்லாம் செய்யுளுக்குத்தானே ஒழிய, உரை நடைக்கோ—பேச்சு வழக்குக்கோ—அல்ல என்பதை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். எனவே, பேச்சிலும் உரை நடையிலும் எழுவாய்க்கும் பயனிலைக்கும் உரிய திணை, பால், எண், இடம் இவை மாறாமல் இருக்கப் பார்த்துக் கொள்ளல் இன்றியமையாததாகும். மொழியின் செம்மைக்கு இதுவே அடிப்படை.

ஒரு சிலருக்கு இரண்டோர் ஐயம் தோன்றுதல் கூடும். சில இடங்களில் அஃறிணையை உயர்திணையாகக் கூறலாம் என இலக்கணம் வகுத்துள்ளார்களே?' எனக் கேட்கலாம்.

**"ஞாயிறு திங்கள் அறிவே நாணே**
**கடலே கானல் விலங்கே மரனே**
**புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே**
**அவையல பிறவும் நுதலிய நெறியால்**
**சொல்லுந போலவும் கேட்குந போலவும்**
**சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்"**
**(தொல் பொருள். 502)**

*என்று தொல்காப்பியரும், 'கேட்குந போலவும்' என்று நன்னூலாரும் இதற்கு இலக்கணம் வகுத்தாலும், அவை செய்யுள் நடைக்கு உரியனவே அன்றி, உரை நடைக்கு உரியவை யாகா. இந்தத் தொல்காப்பியச் சூத்திரம் செய்யுள் இயலிலேதான் வந்துள்ளது; இந்த வேறுபாட்டை நன்றாக ஆராய்ந்து, எழுவாய் பயனிலை மாறாத வகையில் இனிய தனி வாக்கியங்களை எழுதக் கற்று நல்ல தமிழ் வளர்ப்போமாக! இனி, இத்தொடர் அமைப்பில் நம்மை அறியாது செய்யும் வேறு சில தவறுகளையும் அவற்றின் திருத்தங்களையும் காண்போம்.*

# 9. அடிப்படை அமைதிகள்

**வா**க்கியம் அல்லது சொற்றொடர்கள் நன்கு அமைவதே மொழியின் சிறப்பு என்பதைக் கண்டோம் அல்லவா? அந்த வாக்கியப் பிரிவுகளை அறிந்துகொண்டதோடு அமையாது, அவற்றின் பல்வேறு பாகுபாடுகளையும், இடமும் காலமும் பிறவும் நோக்க அவை மாறும் நெறிகளையும் நாம் அறிந்துகொள்ளுதல் நலம் என்றுகருதி அவ்வமைப்புக்களில் ஒரு சில காணலாம் என நினைக்கிறேன்.

வினையில் பல பிரிவுகள் உள்ளன என்பதை முன்னமே கண்டோம். இங்கே இன்னும் சில வேற்றுமைகளைக்காண்போம். ஒரே பொருளை இருவகையாகக் கூறலாம் 'நான் மரத்தை வெட்டினேன்', 'மரம் என்னால் வெட்டப்பட்டது' என்ற இரண்டுக்கும் பொருள் ஒன்றுதான் 'வெட்டினேன்' 'வெட்டப்பட்டது' என்ற இரண்டும் வினைகள். முதல் வாக்கியத்தில் நான் என்ற எழுவாய்க்கு ஏற்ப 'வெட்டினேன்' என்றும், இரண்டாவதில் மரம் என்ற எழுவாய்க்கு ஏற்ப 'வெட்டப்பட்டது' என்றும் உயர்திணைத் தன்மை ஒருமையும் அஃறிணைப் படர்க்கை ஒருமையும் பெற வினைகள் எடுத்தாளப்பட்டன. முன்னது செய்வினை; பின்னது செயப்பாட்டுவினை. இப்படி ஒரே கருத்தைத் தெரிவிக்க இருவகையான வாக்கியங்கள் வருவானேன்? சற்று எண்ணிப் பார்த்தால், சில உண்மைகள் விளங்கலாம்.

இலக்கண அமைப்பில் தொல்காப்பியர் காலத்தில் செயப்பாட்டு வினை இல்லை என்பர். பின்பு அது தோற்றக் காரணம் என்ன? சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற இலக்கியங்களைக் காணும் போது ஓரளவு இதன் காரணத்தை அறிய இயல்கின்றது. சில செயல்களைத்

தாமே செய்ததாகக் கூறிக்கொள்வது தற்பெருமையின்பாற் படும். எனவே, செய்யப்பட்ட பொருள்மேல் அவ்வினையை ஏற்றித் தற்பெருமையையும் அதனால் உண்டாகும் செருக்கையும் குறைக்க இதைக் கையாண்டார்கள் என்று கொள்ளலாம்.

கம்பராமாயணத்தில் அனுமன் தான் செய்த சிறப்புச் செயல்களை மற்ற வானர வீரர்களுக்குச் சொல்ல நாணினான் எனக் கம்பர் காட்டுகின்றார். இன்னும் இராமாயணத்திலும் சிந்தாமணியிலும் வேறொரு காரணமும் காட்டப் பெறுகின்றது. இராமன் முதல் முதல் தாடகையைக் கொல்லச் சென்றான்; கொன்றும் வெற்றி கண்டான். எனினும், இராமனுக்கு அதனால் சிறப்பு உண்டோ? இல்லை. எனவே, அவன் தாடகையைக் கொன்றான் என்பது—முதல் முதல் நடைபெற்ற போரில் ஒரு பெண்ணைக் கொன்றான் என்பது—அவனுக்கு இழுக்கு எனப் புலவர் எண்ணியிருக்கலாம். எனவே, அந்த வினையை இராமன்மேல் ஏற்றாது அவள்மேல் ஏற்றிக் 'கொல்லப்பட்டாள்' எனக் கூறியிருக்கலாம். இப்படியே சிந்தாமணியில் சீவகன் காந்தருவதத்தையை யாழ்ப்போரில் வென்றான் என்று கூற வேண்டும். அங்கேயும் ஆண்மை நிரம்பிய காப்பியத் தலைவனாகிய சீவகன் முதல் முதல் ஓர் பெண்ணை வென்றான் என்பதில் பெருமை இல்லையல்லவா? எனவே, 'சீவகன் வெற்றி கொண்டான்' எனக் கூறாது, 'காந்தருவதத்தை தோற்கடிக்கப்பட்டாள்,' எனக் கூற நினைத்திருப்பார் தேவர். எனினும், அதிலும் அவருக்கு ஓர் ஐயம் உண்டு. தத்தை சீவகன் அழகில் மயங்கியதை முன் சில பாடல்களால், அவரே காட்டியுள்ளமையின் அவள்மேல் தோல்வி மனப்பான்மையை அமைத்து, 'வீணையில் தோற்றவாறும்' என முடித்தார். கம்பரிடம் இந்த முடிவுக்கு இடமில்லை. எனவே, அப்படியே செயப்பாட்டு வினையில் கூறினார். இப்படியே மொழியில் பல மாற்றங்கள்-காலம் கருதியும் இடம் கருதியும் பண்பாடு

முதலிய நலம் கருதியும் புதுப்புது அமைப்புக்கள்-வருமென வும் அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் புற நடை களை அமைத்துள்ளனர். எனவே, செயப்பாட்டு வினை பிந்தியதாயினும், பின்பு வந்த பவணந்தியார் அதற்கும் இலக்கணம் வகுத்தார் என்பர்.

இவ்வாறே இலக்கணத்தில் சில சொற்களை வெளிப் படையாக வழங்கலாகாது என்பதற்கும் இலக்கணம் செய்துள்ளார். அவற்றையும் கண்டு மேலே செல்லலாம்.

'இடக்கரடக்கல், மங்கலம், குழூஉகுறி,' என்ற மூன் றையும், இலக்கண எல்லையில் அவை பொருந்தாவிட்டா லும், உலக வாழ்வு கருதி—அதில் அவை பயன் பெறும் நிலை கருதி—அவற்றையும் வழக்கில் உள்ள சொற்களாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுகின்றது நன் னூல். பலர் நடுவில் சிலவற்றைக் கூறாதிருக்க வேண்டும். சேக்கிழார் பண்பாடுள்ளவர்; அவர் பரவையாரைப் பாட நேர்ந்தது. பரவையார் குலத்தைக் கூற வேண்டும். என்ன செய்வார்? பண்பாடற்று வெளிப்படையாகக் கூற முடிய வில்லை—நாகரிகமாகப் 'பதியிலாக் குலத்து வந்தார்' எனக் காட்டுவார். இது செய்யுள் வழக்கு. உலக வழக்கில் பள்ளி யில் பிள்ளைகள் ஆசிரியரிடம் வெளிக்குப் போகக் கேட்கும் முறையை நாம் அறிவோம். 'மலங் கழுவி வருதல்' என்பது நாகரிகமா? எனவே, 'கால் கழுவி வருதல்' என்போம். இதை இலக்கணத்தில் 'இடக்கரடக்கல்' என்றார்கள். தொல் காப்பியர் இதை 'மறைக்குங் காலை மரீஇய தொரால்' (927) என்றார். அடுத்து நல்லதை வாயால் சொல்வார் களேயன்றிக் கெட்டதைத் தமிழர்கள் வாயாலும் சொல்ல மாட்டார்கள். கெட்டவர்களைக்கூடக் 'கெட்டவர்' என் னாது 'அவர் யாரோ' என்று கூறுவது தமிழர் பண்பாடு. 'கொல்லா விரதமெனக் கொண்டவரே நல்லோர் மற்றல்லாதார் யாரோ அறியேன் பாரபரமே' என்பார்

தாயுமானவர். எனவே, பலர் இடையில் அமங்கலச் சொல்லைச் சொல்ல மயங்கினர். அதற்குத் துணையாயிற்று மங்கலச் சொல். செத்தாரைத் 'துஞ்சினார்' என்றும், 'தாலி அறுவதை'த் 'தாலி பெருகிற்று' என்றும் 'சாவினை, 'மூதானந்தம்' என்றும் கூறினார் இவற்றைத் தொல்காப்பியர் 'அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்,' (926) என்றார். இப்படியே பலரிடையில் ஒரு துறையில் பழகிய இருவர் தம் கருத்தைப் பரிமாறிக்கொள்ளப் பண்பட்ட வகையில் பயன் படுத்தப் பயன்பட்டது 'குழூஉக்குறி'. இது பெரும்பாலும் வணிகத்துறையில் பயன்படும் என்பர். எனினும், பிற துறைகளுக்கும் இது விலக்கு அன்று எனவே, இவையும் இவை போன்ற பிற இலக்கண அமைதிகளும் தமிழில் காலமும் இடமும் கருதி, தமிழர்தம் பண்பும் நாகரிகமும் கெடாத வகையில் பயன்படுகின்றன என்று கூறி மேலே செல்லலாம்.

வினையில் உடன்பாடு எதிர்மறை என்னும் இரண்டு உண்டல்லவா? அவற்றையும் முறை அறிந்து பயன்படுத்த வேண்டும். 'வேண்டும்' என்பது உடன்பாடு. 'வேண்டா' என்பது எதிர்மறை. சில வினைச்சொற்களுக்கு எதிர்மறை காணச் சிலர் சங்கடப்படுவர். மிகு பழங்காலந்தொட்டு, இன்னதற்கு இன்னது எதிர்மறை என வழங்கி வந்துள்ளார்கள். அவற்றையெல்லாம் யாரும்—எந்த இலக்கண நூலும்-தொகுத்துக் காட்டவில்லை என்றாலும், பழக்கம் அறிந்து அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

வருவேன் என்ற உடன்பாட்டு வினைக்கு வாரேன் என்றும் வரமாட்டேன் என்றும் எதிர்மறை வினைகள் அமைவதைக் காண்கின்றோம். 'வாராநின்றேன்' என்ற ஒரு தொடர் சிலவேளை மயக்கத்தில் ஆழ்த்தும், 'வாரா' எனத் தனியே பிரித்து 'வாராமல் நின்றுவிட்டேன்' எனப் பொருள் கொண்டால் எதிர்மறை. ஒரு சொல்லாகவே கொண்டால்

'வருகிறேன்' என்ற உடன்பாட்டில் பொருள் சிறக்கும். இவற்றிற்கெல்லாம் ஆங்கிலத்திலே, சில கணித முறைக்கு வாய்பாடுகள் (Formulas) உள்ளன போன்று, சில வாய்பாடுகள் வரையறுத்து வைத்துள்ளார்கள். இவ்வாறு உடன்பாட்டு வினை எதிர்மறை வினைகளை வகைப்படுத்தி முறை கெடாத வகையில் மரபுப்படி தமிழில் அமைந்துள்ளதை அனைவரும் நன்றாக அறிந்து கொள்ளவேண்டும்.

தன்வினை பிறவினை என்ற இரு வகை வினைகளையும் நன்றாக அறிய வேண்டும். இவற்றுள் பலர் தவறுவதும் உண்டு. 'அரசன் கோயிலைக் கட்டினான்,' என எழுதுகின்றோம். முறைப்படி பார்த்தால் இது தவறு ஆகும். கட்டுதல் ஒரு தொழில். அதில் எத்தனையோ பணியாளர்—தச்சரும் கொல்லரும் பிறரும்—பங்கு கொண்டனர். எனவே, கட்டும் தொழிலை அரசன்மேல் ஏற்றல் எப்படிப் பொருந்தும்? ஆயினும், அவன் பொருளே கோயிலை உருவாக்கிற்று. அரசன் கோயிலைக் கட்ட உதவினவன்—பிறரைச் செயலாற்றத் தூண்டினவன். எனவே, இது பிறர் வினைக்கு ஊன்றுகோல் அல்லவா? எனவே, 'கட்டினான்' என்பதைக் காட்டிலும் 'கட்டுவித்தான்' என்பது சிறப்பாக இருக்கிறது. முன்னது தன்வினை; பின்னது பிறவினை. இந்த வகையில் தன்வினைகளைப் பகுத்துக் காட்டச் சில விதிகளை இலக்கண நூலோர் வகுத்துள்ளார்கள். அவற்றின் விளக்கங்கள் வேண்டா. பெரும்பாலும் 'வி', 'பி' என்ற எழுத்துக்கள் தன் வினையோடு இணைந்தால் பிறவினையாகும் என்பது பொது விதி.

செய்தான் — செய்வித்தான்
வந்தான் — வருவித்தான்
எடுத்தான் — எடுப்பித்தான்

இவ்வாறன்றி, தன்வினையில் உள்ள இரண்டோர் எழுத்துக்கள் மாறிப் பிறவினையாதலும் உண்டு. இந்த வகையிலே

தான் எழுதுபவர் நன்றாகக் கவனித்து எழுத வேண்டும். ஓர் எழுத்து மாறுவதாலே ஒரு சொல்லின் அல்லது வாக்கியத்தின் பொருளே மாறிவிடும்! உதாரணம் காண்போம்:

'திரும்புகிறான்' என்பது தன்வினை: 'திருப்புகிறான்' என்பது பிறவினை. 'ம்' என்றது 'ப்' ஆகிய நின்றது. இந்த மாற்றம் வினையின் செயல் செய்யும் மனிதனையே மாற்றி விடுகின்றது, அல்லவா? 'அவனே திரும்புகிறான்' என்றும், 'அவன் மற்றவரைத் திரும்பச் செய்கிறான்' என்றும் விளங்கக் காண்கிறோமல்லவா?

வருந்தினான்—வருத்தினான் இவற்றில் 'ந்' என்ற தன் வினையின் எழுத்து, 'த்' எனப் பிற வினையில் மாறுகின்றது.

மாறுகிறான்—மாற்றுகிறான்:— இந்தத் தன்வினை பிற வினையில் மற்றொரு வேறுபாடும் காண்கிறோம். முன் கண்டவற்றுள் தன்வினையில் வரும் மெல்லின ஒற்று பிற வினையில் அதன் இனமான வல்லின ஒற்றாக மாறிப் பிற வினையாகின்றது. இதில் அந்த முறையில் அன்றி, வல்லின ஒற்று இரட்டிக்கிறது. இவ்வாறே சில அடிப்படை விதிகளைக் கொண்டு சிந்தித்து எழுதத் தொடங்கினால் மிகவும் சாதாரணப் பிழைகளையெல்லாம் நீக்கி விடலாம்.

இவ்வாறே இன்னும் பல வகைகளில் வினைகள் மாறுபடுவதைக் காண்கிறோம். ஆங்கிலத்தில் நேரில் பேசுவதையும், அன்றி வேறுபட்டு மற்றவர் பேசுவதாகக் காட்டுவதையும் (Direct and indirect Speech) நன்கு விளக்குவார்கள். பள்ளிப் பிள்ளைகளுக்கு அந்த முறை நன்கு காட்டப்பெறும் நேர்க்கூற்றில் இருபுறம் எடுத்துக்காட்டு அல்லது மேற்கோள் ("...") குறியிட்டு எழுதுவதும், அயல் கூற்றில் 'என' அல்லது 'என்று' என வினை முடித்து எழுதுவதும் ஆங்கில மரபு. தமிழிலும் அதே மரபைக் கையாளுவது சரியே. இது

பெரும்பாலும் எழுதும் முறையிலேதான் ஊன்றிக் கவனிக்கப் பெறும். இவ்வாறு ஒவ்வொரு வகையிலும் வாக்கிய அமைப்புக்கள் நன்கு ஆராய்ந்து எழுதப்படின், 'நல்ல தமிழ்' உருவாவதற்குத் தடையும் உண்டோ!

தமிழில் வினா விடைகளைப் பற்றியும் விளக்கியிருக்கிறார்கள். அந்த நிலைகளை நன்கு அறிந்து கொண்டால் பல உண்மைகள் விளங்கும். ஆசிரியர் மாணவனைப் பார்த்துத் 'தமிழ் எழுத்துக்கள் எத்தனை?' என்று கேட்பதற்கு என்ன பொருள்? ஆசிரியருக்கு அந்த எண் தெரியாது என்பது பொருளா? அன்று. அதை ஆசிரியர் அறிவார். மற்று அங்ஙனம் ஏன் கேட்கிறார்? மாணவனுக்கு அது தெரிந்துள்ளதா என அறிவதற்காகத்தானே? ஆம்! அத்தகைய வினாவிற்கு 'அறி வினா' என்பது பெயர். அதே கேள்வியை மாணவன் கேட்டால் அறியா வினா ஆகின்றது. சில இடங்களில் (இதுவோ, அதுவோ எனும்) ஐயத்தாலும் சில இடங்களில் பொருளைப் பெறவும் (இதை எனக்குத் தருவாயா?), சிலவிடங்களில் கொடுப்பதற்காகவும் (இது உனக்கு வேண்டுமா?), சிலவிடங்களில் ஏவுவதற்காகவும் (நீ இதை செய்கிறாயா?) வினாவை எழுப்புவர். இவற்றால் வினா இன்னின்ன பொருளில் வரும் என நுணுகி ஆராய்ந்த திறன் எண்ணி வியக்கக் கூடியதாய் இல்லையா? இவ்வாறு நாம் பேசும் போதும் எழுதும் போதும் சாதாரணமாக உபயோகப் படுத்தும் வினாவுக்கும் விடைக்குங்கூடத் திட்டமான வரையறுத்த பொருளையும் நிலையையும் வகுத்து அவற்றின் வரம்பு மீறா நிலையில் இருந்து மொழியைப் பாதுகாக்க வேண்டுமென வகுத்த இலக்கண அமைப்பு எண்ணத்தக்கதன்றோ? இனி இந்த வினாவுக்கு எந்தெந்த எழுத்துக்கள் பயன்படும் என்பதை இடையியலில் நன்கு காட்டுகிறார்கள். 'ஏ' 'ஓ' போன்ற இடைச்சொற்களாக வரும் எழுத்துக்கள் இவ்வினாவை உணர்த்துவதோடு, வேறு என்னென்ன பொருள்களில் வழங்கப்பெறும் என்பதையும் காட்டுகின்

றனர். கண்ணுள்ளவர் இவற்றின் நுண்மைகளைக் கண்டு அறிந்து மொழியின் நிலையைக் கெடாது காப்பாராக.

இவ்வினாவைப் போன்றே விடையையும் நன்கு பகுத்து ஆராய்ந்துள்ளார்கள். அது பற்றிய சூத்திரத்தை மட்டும் கூறி அமைகின்றேன்.

**'சுட்டு மறை நேர் ஏவல் வினாதல்**
**உற்ற துரைத்தல் உறுவது கூறல்**
**இனமொழி எனும்எண் இறையுள் இறுதி**
**வினவிய ஐந்தும்அப் பொருண்மையி னேர்ப'** (386)

என்பது நன்னூல். இது மேற்கண்ட ஐவகைப் பட்ட வினா வினாவுக்கு இந்த எட்டு வகையிலும் விடை கூறும் வகையினைக் காட்டுகின்றது. 'சுட்டியும், மறைத்தும், நேராகவும், வினவாகவும், ஏவல் முறையிலும், உற்றதைக் கூறியும், வரப் போவதைக் காட்டியும், இன மொழியினாலும் விடைகளைக் கூறுவார்கள்,' என்பது உரை, எனவே, எதையும் எப்படியும் கேட்கலாம் என்பது தவறாகும் என்ற உண்மையை உணர்ந்து, ஆன்ற வகையில் அமைந்த முறையில் வினாவின் நிலை அறிந்து விடை இறுக்கப் பழக வேண்டும் என வரையறுத்த நெறி சிறந்தது. இந்த முறையில் பேசத் தெரியாத காரணத்தினாலேதான் பலர் தவறிச் சொற்சோர்வுபடுகின்றனர். தமிழில் 'பேசப் போனாயோ சாகப் போனாயோ!' என்று ஒரு பழமொழி உண்டு. அதன் கருத்து என்ன? பேசும் போது எண்ணி, முன் உள்ளவர் தவறாகப் புரிந்துகொள்ளா வகையில் பேச வேண்டும். அல்லாவிட்டால் பெருந்தொல்லைகள்—சில சச்சரவு அளிக்கும் கொடுமைகள்—நிகழ்வதுண்டு. முன்னின்று பேசும் முறையே ஒருவரது பண்பு முதலியவற்றை விளக்கும். நாவடக்கி, கேட்பாருக்குத் தக்க வகையில்—அவர்தம் மனம் கொள்ளும் வகையில்—பேச வேண்டும். அவ்வாறு பேச இயலாவிட்டால், வாய் மூடி

மௌனியாகி இருப்பதே மேல். இவற்றையெல்லாம் எண்ணித்தான் திருவள்ளுவனார்,

**''யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்**
**சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு'.**

என்று எடுத்துக் கூறிச் செம்மையான முறையில் பேச வேண்டும் எனக் காட்டினார். பேசுவதற்கு மட்டுமன்றி, எழுதுவதற்கும் இவ்வுண்மை பொருந்துவதாகும்.

தமிழில் சில சொற்களைப் பயன்படுத்துவதற்கும் வரையறை செய்துள்ளார்கள். ஒன்றைக் கண்டு அமைவோம். ஒரு பொருள் நமக்குத் தேவை. அது அயலான் ஒருவனிடமிருக்கின்றது. அவன் நம்மினும் மிக்கவனாகவும் இருக்கலாம்; ஒத்த நண்பனாகவும் இருக்கலாம். தாழ்ந்த பணியாளனாகவும் இருக்கலாம்; இம்மூவரையும் ஒரே வகையில் விளித்து அதைத் தருமாறு கேட்லாமா? ஆங்கிலத்தில் 'Give it' என்று சொல்லுவார்கள். மரியாதையாகச் சொல்ல வேண்டுமானால், 'Please give it' என்று ஒரு சொல்லை வருவித்துக் கொள்ளவார்கள். தமிழில் அந்தத் தேவை இல்லை. சொற்களின் இயல்பே உயர்ந்தோர், ஒப்போர், தாழ்ந்தோர் நிலையைக் காட்டிவிடுகின்றது.

**'ஈ தா கொடுஎனக் கிளக்கும் மூனறும்**
**'இரவின் கிளவி ஆகிடன் உடைய.'** (928)

என்று கூறி, அவற்றுள்

**'ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே;**
**'தாவென் கிளவி ஒப்போன் கூற்றே;**
**'கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே.**
(929-31)

என வரையறுத்தார் தொல்காப்பியனார். இவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்த நன்னூலாசிரியர்,

'ஈதா கொடுவெனு மூன்றும் முறையே
இழிந்தோன ஒப்போன் மிக்கோன் இரப்புரை.
(407)

என்று காட்டியுள்ளார். இவற்றாலெல்லாம் நாம் அறிவது யாது? முறை கெடாதபடி தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற உண்மையினையே இவை வற்புறுத்துகின்றன அல்லவா? உயர்ந்தோன் தாழ்ந்தோனை நோக்கி, 'ஐயா, அதை ஈவாயோ?' என்று கேட்டால், நாட்டார் நகைக்க மாட்டார்களோ? அவன், 'அதைக் கொடு' என்று கேட்க வேண்டும். அப்படியே ஒத்தவனிடத்தில் 'அதைத் தா' எனக் கேட்டுப் பெற வேண்டும். தாழ்ந்தோனே உயர்ந்தோன் ஈகைக்கு ஏங்கி நின்று, 'ஐயா, அதை எனக்கு ஈதல் வேண்டும்,' என இரக்க வேண்டும். இவற்றை விளக்கும் போது இரண்டு ஆசிரியர்களும் ஓர் உண்மையை மறைத்துக் காட்டியுள்ளார்கள். யார் யாரைக் கேட்டாலும் அது பிச்சையேயாகும் என்ற உண்மையை 'இரத்தல்' என்ற சொல்லால் விளக்கிவிட்டார்களல்லவோ! 'கௌரவப் பிச்சை' என்று இக்காலத்தில் கூறுவார்கள். அது போல உயர்ந்தவன் தனது இல்லாத காரணத்தால் ஒரு பொருளைத் தன் கீழ் உள்ளவனிடம் ஆணை வழியாகக் 'கொடு' என்று பிடுங்கிக்கொண்டாலும் அதுவும் ஏற்றலே என்ற உண்மையைத் தொல்காப்பியரும் பவணந்தியாரும் எடுத்துக் காட்டத் தவறவில்லை. இவ்வாறு இலக்கண அமைதி கூற வந்த இடத்தும், மரபும், பண்பும், முறையும், நிலையும், பிற இயல்புகளும் கெடா வகையில் எடுத்துக் காட்டும் நெறிகள் அளவிடற்கரியன. அவற்றையெல்லாம் எழுதிக் காட்டல் என்பது இயலாது. மெள்ள மெள்ள மரபு வழியறிந்து பயின்று, எழுதி அல்லது பேசிப் பழகி, 'நல்ல தமிழ்' வளர்த்து வல்லவராதல் வேண்டும். இனி, இந்த மரபு நிலை பற்றியும் பிற சிறப்பியல்புகளைப் பற்றியும் காண்போம். பிழையற்று எழுதச் சில வழிகளையும் காணல்வேண்டும்.

# 10. மரபின் வழியே

தமிழ் எழுத்துக்களின் அமைப்புத் தொடங்கி, இது வரை, அவ்வெழுத்துக்களின் நிலை, அவற்றால் ஆக்கப்படும் சொற்கள், அவற்றின் பாகுபாடு, அச்சொற்கள் சேரும் முறை, அம்முறையாகிய புணர்ச்சியில் உள்ள பல வகைகள் அச்சொற்களாலாகிய தொடர்கள், அவற்றின் பிரிவுகள் அவற்றின் மாறுபாடுகள், அவை செம்மையாக அமையும் முறைகள் ஆகியவற்றைக் கண்டு கொண்டே வந்தோம். இனி, பல சட்ட திட்டங்களுக்கு இடையிலும் அச்சொற்றொடர்களில் உண்டாகும் தவறுகளையும், அவற்றின் வழி மொழியின் நலம் கெடுவதையும்காண்போம். மற்றும் இந்த இலக்கண விதிகளின் எல்லைக்குப் புறம்பாக அமையும் சில அமைதிகளையும் காணல் நலம். சில சாதாரண எழுத்துப் பிழைகளையும் எண்ணிப் பார்த்தல் அவசியமாகும்.

புணர்ச்சி விதிப்படி பலர் எழுதப்பழகாத காரணத்தால் மிக எளிமையாக உணரக்கூடிய பிழைகளும் நேர்கின்றன என்பதை முன்னமே கண்டோம். 'வாழைபழம், கடைபிடித்து, பள்ளிக்கு சென்றான்,' என்பன போன்ற சாதாரண அமைப்புக்களிலும் சந்தியில் வரவேண்டிய எழுத்துக்களை (க், ச், த், ப்) விடுத்துக் கற்றவரும் எழுதுவதைக் காண்கிறோம். அவற்றை ஒரு முறை திருப்பிப் படிப்பார்களாயின் நிச்சயம் அவை அவர்களுக்குப் புலப்படாமல் போகா. தேர்வு எழுதச் செல்லும் மாணவர்களுக்கு, 'எழுதிய விடைகளைத் திரும்பப் படித்தல் அவசியம்,' என்று சொல்லி அனுப்புவது போன்றே வேறு சிலருக்கும் சொல்ல வேண்டியுள்ளது.

தமிழில் ஏறக்குறைய ஒரே ஒலியை உடைய எழுத்துக்கள் சில இருக்கின்றன. அவற்றை உச்சரிக்கும் போதும் சொற்களோடு அவற்றைப் பிணைக்கும் போதும் பலர் பெருந்தவறுகள் செய்கின்றனர். 'கதவைத் திரக்க' என்று எழுதிருப்பதைக் காண்கிறோம். ஆங்கிலத்தில் இம்மாதிரியான சாதாரணப் பிழைகளைக் கண்டால் நாம் கோபிக்கின்றோம். ஆனால், நம் தாய் மொழியில் மிகச் சாதாரணமான பிழைகளையும் எழுதுகின்றோம். 'அரம்', 'அறம்' என்ற இரண்டு சொற்களுக்கும் வேற்றுமை கருதாமல் எழுதுபவர் பலர் உளர். சிலர் 'ர, ற என்னும் இரண்டு எழுத்துக்களே தேவையில்லை; ஒன்றே போதும்,' என வாதிடுவர்; அப்படியே 'ந, ன, ண' என்ற மூன்றைப் பற்றியும் வாதிப்பர். இது வரையில் நாம் வகைப்படுத்தி வந்த மொழியிலக்கண முறையைக் கவனித்தால், இப்பிரிவுகள் மொழிக்கு எத்துணைப் பேருதவியாய் இருக்கின்றன என்பது சொல்லாமலே விளங்குமல்லவா? சற்று எண்ணி எங்கு எதைப் பயன்படுத்துவது என அறியச் சோம்பி நம் விருப்பப்படி எழுத்துக்களை மாற்ற வேண்டுமென்று மொழித்திறம் அறிந்த யாரும் கூறமாட்டார். ஒரு சில வேறுபாடுகளை இங்கே குறித்துவிட்டு மேலே செல்லுகின்றேன்.

| ர | ற |
|---|---|
| **அரம் - ஒரு கருவி** | **அறம் - தருமம்** |
| **அலரி - ஒரு மலர்** | **அலறி - பயத்தால் கதறி** |
| **இரங்கு - இரக்கப்படு** | **இறங்கு - கீழ் இறங்கு** |
| **நரை - வெண்மயிர்** | **நறை - தேன்** |
| **திரை - அலை** | **திறை - கப்பம்** |

இப்படி இரண்டு எழுத்துக்களின் அமைப்பில் எத்தனையோ சொற்கள் வந்துள்ளன. அவற்றின் இடமும் பொருளும் அறிந்து நன்கு உபயோகிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

அப்பழக்கம் பல நல்ல அறிஞர்களுடைய நூல்களைப் படிப் பதனால் தானாகவே வந்து சேரும். இந்த வேறுபாடுகளெல் லாம் எந்த இலக்கண நூலினும் விளக்கமாகக் கூறப்படா விடினும், பின்னால் வந்த நிகண்டு, திவாகரம் போன்ற நூல்களில் நன்கு விளக்கப் பெற்றுள்ளன. ஆயினும், இன்று அவைகளும் பலருக்குத் தெரிய வழியில்லை. அகராதிகள் பல வெளி வந்துகொண்டேயிருக்கின்றன. அவற்றை மனப் பாடம் செய்வதும் இயலாது. என்றாலும், 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்றபடி நல்ல நூல்களைப் பயின்று இவற் றைப் பழக்கத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

தமிழில் 'ழ' ஒரு சிறப்பெழுத்து. உலகில் எந்த மொழி யிலும் இல்லாத எழுத்து இது. ஆயினும், நம்முள் பலர் இந்த எழுத்தை உச்சரிக்க முடியாமல் திண்டாடுகின்றனர். 'வாளப் பளம்' என்றும் 'மளை பெய்தது' என்றும் சிலர் பேசுகின்ற னர். பேசுவதோடு மட்டுமின்றிச் சிலர் அவ்வாறே எழுதவும் செய்கின்றனர். இது எத்துணைப் பெருந் தவறு! இரண் டொரு சொற்களைக் காண்போம். 'ஒழி' என்பதற்கு நீக்கு என்பது பொருள். 'ஒளி' என்பதற்கு வெளிச்சம் என்பது பொருள். 'குழவி' என்பது குழந்தை: 'குளவி' என்பது கொட்டும் வண்டு. இப்படியே பல. இந்த வேறுபாடு ஒரு புறம் இருக்க, தமிழுக்கே உரிய சிறப்பெழுத்தாகிய 'ழ' கரத்தைத் தமிழனே உச்சரிக்கவும் எழுதவும் தயங்குவானா யின், உலகம் அவனைப் பார்த்து நகையாதா!

மரபு என்பது தமிழில் மட்டுமன்றிப் பிற பழைய மொழி களிலும் இன்றியமையாததாயுள்ளது. தொல்காப்பியத்தில் **'மரபியல்'** என்றே ஓர் இயல் வகுத்துள்ளனர். அதில் உலக வழக்கில் உள்ள பல பொருள்களின் பெயர்களை அப்படி அப்படியே வழங்க வேண்டும் என்று காட்டியுள்ளனர். ஒரு சிலவற்றைக் காட்டி அவ்வாறே பிறவற்றையும் பெறவைத் துள்ளனர்.

"எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே." (338)

என்று நன்னூலார் அந்த அடிப்படையிலே இலக்கணமும அமைத்துவிட்டார். ஓரறிவுடைய உயிராகிய மரம் தொடங்கி ஆறறிவுடைய மனிதன் வரையில் வகைப்படுத்தி, அவ்வவற்றின் கான் முளைகளை எவ்வெவ்வாறு வழங்க வேண்டும் என மரபு கூறியுள்ளது தொல்காப்பியம்; மற்றும் வழக்கில் உள்ள சில சொற்களையும் அவற்றின் பொருள் முறைகளையும் வகைப்படுத்தி உள்ளது. இலக்கண அமைப்பிலே காலந்தோறும் உண்டாகும் சில மாறுதல்களை ஏற்றுக் கொள்ள இடம் தரும் தொல்காப்பியர், இந்தச் சொற்களைப் பற்றிய மரபிலே மட்டும் திட்டமாக வரையறை செய்கிறார். ஆம்! இச்சொற்களே மொழியின் தொன்மையையும் சிறப்பையும் விளக்கப் பயன்படுகின்றனவே. இன்றும் இதனாலன்றோ 'இச்சொற்கள் எம்மொழியைச் சேர்ந்தன?' என்ற ஆராய்ச்சியைச் சிலர் மேற்கொள்ள வேண்டியுள்ளது! எனவே, 'நல்ல தமிழ்' எழுத வேண்டுமானால், வாக்கியங்களைப் பிழையற எழுதுவது மட்டுமன்றி, மரபு வகை கெடாமல் எழுதவும் பழகிக்கொள்ள வேண்டும்.

இலக்கணத்தில் வரையறுக்கப் பெறாவிட்டாலும் மரபு வழியே தமிழ் வாக்கியங்களில் சில அமைப்புக்கள் இடம் பெற்றுள்ளன. ஆங்கிலத்தில் 'A' 'An' என்ற இரண்டையும் எங்கெங்கே உபயோகிக்கிறோம் என்பது தெரியுமல்லவா? A, E, I, O, U என்பவற்றின் முன் 'an' வருகின்றது. ஏனைய எழுத்துக்களின் முன் 'a' வருகின்றது. இப்படியே தமிழிலும் 'ஒரு', 'ஓர்' என்ற இரண்டு சொற்களும், 'அது', 'அஃது' என்ற சொற்களும் வழக்கத்தில் உள்ளன. பள்ளிக்கூடத்தில் ஆங்கில இலக்கணம் கற்கப் புகும் ஆரம்ப மாணவனுக்கு அந்த ஆங்கில முறையைக் கற்றுக் கொடுப்பது போன்று, தமிழில் இந்த முறையைக் கற்றுக்கொடுப்பதில்லை. அதனால்,

மாணவர் பலர் தவறு செய்கின்றனர். மாணவர் மட்டுமன்றி, நம்முள் பலரும் அறிந்தோ அறியாமலோ இத்தவறு செய்கின்றனர். இம்முறைகள் இலக்கண அமைதியால் சூத்திரம் காட்டி வரையறுக்கப்படவில்லையாயினும், மரபு வழியிலும் சொல்லும்போது இனிமைநலம் பயப்பது கருதியும் முறைப்படி எழுதுதல் நல்லதாகும். 'ஓர்' என்பதும் 'அஃது' என்பதும் வருமொழி முதலில் உயிர் எழுத்து வருங்கால் பயன்படுத்தப்பெற வேண்டும். பிறவிடங்களில் 'ஒரு' 'அது' என்பன இடம் பெறும்.

**ஒரு நாடு — ஓர் ஊர்**
**ஒரு மனிதன்— ஓர் இலை**
**அது நாடு — அஃது உலகு**
**இது நாய் — இஃது உலக்கை**

தமிழில் பெண்பால் ஒருமையைக் குறிக்கும் 'ஒருத்தி' என்பதும் இங்கே நினைவுக்கு வருகின்றது. கற்றறிந்தவருள்ளும் சிலர் 'ஒருவள்' என எழுதுகின்றனர். 'ஒருவன்' என்பது ஆண்பாலாயின் 'ஒருவள்' தான் பெண்பாலாக வேண்டும் என்ற நியதி எங்கே? 'அன்' ஆண்பால் விகுதி, 'அள்' பெண்பால் விகுதியாயினும், சிலவற்றிற்கு விதி விலக்கு உண்டல்லவா? 'கணவனு'க்குப் பெண்பால் 'கணவி' என்று எழுதுவது இல்லையே! 'மனைவி' என்றே எழுதுகிறோம். அதைப்போன்றே ஒரு சில, இலக்கண முறைக்குப் பொருந்துமாயினும் உலகமுறைக்கு மாறுபட்டு நிற்கும். 'இல்லாள்' என்ற பெண்பாற்பெயர் 'மனைக்கிழத்தி' என்ற பொருள் தந்து சிறக்கின்றது. ஆனால். மனைத் தலைவனை 'இல்லான்' என்று சொல்லுவோமா? அதன் பொருள் 'ஒன்றுமில்லாதவன்' என்று அல்லவா அமைகின்றது? இலக்கணப்படி அது தவறு அன்றாயினும், மரபு வழி தவறுதானே? எனவே, எல்லாவற்றிற்கும் சில விதி விலக்குள் உள்ளன. ஒருவனுக்கு ஒருத்தியும், கணவனுக்கு மனைவியும் பெண்பாற்

பெயர்களே. இந்தச் சிறப்பு விதிகள் ஆங்கிலம் முதலிய மொழிகளிலும் இருக்கக் காண்கிறோம். நான் இளமையில் கற்ற ஒன்று நினைவுக்கு வருகின்றது.

பள்ளியில் கற்கும்போது ஆசிரியர் 'ly' என இறுவன எல்லாம் 'adverb' என்று சொன்னார்; பின்பு உதாரணம் கேட்டார். மாணவர் ஒருவர், 'Tiruchirappally' என்றார். அனைவரும் நகைத்தனர். ஆசிரியர் பின்பு பொது விதியையும் சில விலக்குகளையும் விளக்கினார். இப்படியே ஆங்கிலத்தில் உள்ள ஒருமை பன்மை விதி விலக்குகளையும் எடுத்துக் காட்டினார். எனவே, தமிழிலும் இந்த வகையில் உள்ள வேறுபாடுகளைப் பகுத்தறிந்து, இடமறிந்து நல்ல முறையில் எழுதப் பழக வேண்டும்.

தமிழில் ஒருவர் என்ற சொல் முக்கியமானது; ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் இல்லாத ஒன்று. இது மிக நுணுக்கமாகப் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணம் காண்போம்: தூரத்திலே ஓர் உருவம் வருகிறது. அந்த உருவம் ஆணா பெண்ணா என்பது தெரியவில்லை. அதை எப்படிக் குறிப்பது? 'அதோ வருகின்றவள் ஆணா பெண்ணா?' என்று கேட்டால் கேள்விக்கே பொருள் இல்லை. 'அள்' விகுதியிட்டுக் கேட்டவரே பெண்ணாக்கி விட்டார். 'அன்' என்றதும் அப்படியே. 'வருகின்றவர்' என்றால் இந்த இடர்ப்பாடு இல்லை. 'ஒருவர்' என்ற அடிப்படையிலேதான் இந்தச் சொல்லும் இது போன்ற பிறவும் தோன்றின. இந்த முறையில் ஐயம் உண்டாவதையும் அதை மாற்றும் வழிகளையும் நன்னூல் பொதுவியலில் ஆசிரியர் நன்கு விளக்குகிறார். அவை யாவும் பழக்கத்தில் வருகின்றமையின் அவற்றை நாம் இங்கு ஆராய வேண்டா. ஒவ்வொருவரும் எழுதும் போதும் பேசும் போதும் இவற்றை நன்கு பயன்படுத்தப் பழகிக்கொள்வதே போதும்.

'ஒருவர்' என்ற சொல்லை எண்ணி எண்ணி மகிழ்கின்றார் குமரகுருபரர் அவர் சிவபெருமானைக் காண்கிறார். ஒரு பக்கம் ஆண் உருவும் ஒரு பக்கம் பெண் உருவும் காட்சியளிக்கின்றன. எப்படிச் சொல்லுவது அவ்வுருவை? 'ஒருவன் என்னலாமா, அன்றி ஒருத்தி என்னலாமா?' என எண்ணி எண்ணிப் பார்க்கிறார். திடீரென்று இந்த **ஒருவர்** என்ற சொல் அவர் முன் வந்து குதிக்கிறது. அவரும் மகிழ்ச்சியால் குதித்துப் பாடத் தொடங்கிவிட்டார்.

**'அருவருக்கும் உலகவாழ் வடங்க நீத்தோர்**
**ஆனந்தப் பெருவாழ்வாம் ஆடல் காட்ட**
**மருஅருக்கன் மதிவளிவான் யமானன் தீநீர்**
**மண்எனும்எண் வகைஉறுப்பின் வடிவுகொண்ட**
**ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவொன் றாலவ்**
**வுருவைஇஃது ஒருத்தன்என்கோ ஒருத்தி என்கோ!**
**இருவருக்கும் உரித்தாக ஒருவர் என்றோர்**
**இயற்சொல்இல தெனில்யான்மற் றென்செய்**
**கேனோ!'**

என்று சிதம்பரத்தில் தாண்டவம் புரியும் ஆண்டவன் முன் நின்று பாடினார். இறைவனைப் பாடும் தம்மை மறந்த அந்த நிலையிலுங்கூட அறிஞர்கள் இலக்கண வரம்பை எண்ணி எண்ணி மகிழ்கின்றார்கள் என்றால், நாம் அவற்றை இடமறிந்து நன்கு பயன்படுத்தவாவது கற்றுக்கொள்ள வேண்டாவா!

மரபு என்று முன்பு சொன்னேன் அல்லவா? இன்று பலர் அதைக் கையாளுவதில்லை. தொல்காப்பியர் அந்த மரபை வற்புறுத்தும் நிலையைச் சில மேற்கோள்களில் இங்குக் காட்டலாம் என நினைக்கிறேன். யானைத் தலைவனைப் பாகன் என்றும், ஆடு மாடு மேய்ப்பவனை இடையன் என்றும் சொல்ல வேண்டும். 'ஆட்டுப் பாகன்' என்று சொல்லு

வது தவறு. தென்னம் பிள்ளை, புளியங் கன்று என்று சொல்ல வேண்டும். தென்னங் கன்று என்று சொல்லலாகாது. அதைப் பிள்ளை போல நாம் காப்பாற்றி வளர்க்கிறோமல்லவா! இதுவே அப்பெயருக்குக் காரணமாகலாம். 'வாழை இலை' என்பது சரி; 'பனை ஓலை' என்றுதான் சொல்ல வேண்டும். 'தென்னை ஓலை' என்பது சரி. 'புளியங் கிளை, தென்னை மட்டை' என்பவை வழக்கு. இப்படியே எத்துணையோ சொல்லிக்கொண்டு போகலாம். எனினும், இந்த அளவிலே போதும் என அமைகின்றேன்.

தொல்காப்பியர் இலக்கணம் செய்வதற்கு முன்பே, எத்தனையோ இலக்கியங்கள் தோன்றியுள்ளன என்றும், அவற்றின் அமைதியைக் கண்டே அவர் இலக்கணம் வகுத்தார் என்றும், அவர் எழுதும் பல சூத்திரங்களிலிருந்து நாம் நன்கு அறிந்துகொள்கிறோம். எனவே, அவர் காலத்துக்கு முன்பே எத்தனையோ மாறுதல்களைப் பெற்று, அவர் காலத்தில் இந்த நிலையில் தமிழ் மொழியின் இலக்கணம் அமைந்தது என்பதை அவர் காட்டியுள்ளார். என்றாலும், மொழியில் காலந்தோறும் உண்டாகும் மாறுதல்களுக்கும் இலக்கணம் அமைய வேண்டும். அன்றேல், அம்மொழி வழக்கிழந்தோ வாழ்விழந்தோ அழிந்தொழியும் என்பது மொழி நூலோர் கண்ட உண்மை. தமிழ் அந்த நிலை எய்தாத காரணத்தால், அந்த மொழி காலந்தோறும் உண்டாகும் மாறுதல்களுக்கு இடம் தந்து செல்கிறது என்பது தேற்றம்.

**'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.'**

என நன்னூலார் இதை எண்ணியே ஒரு பொது விதியை இறுதியாகச் செய்தார். தொல்காப்பியரோ, எழுத்ததிகாரத்தில் மட்டுந்தான் புறநடை கூறியுள்ளார். அந்த

அழைப்பிலேதான் மாற்றங்கள் பெறுமன்றிப் பிற தெளிந்த சொல், பொருள் அமைப்புக்களில் என்றும் மாற்றங்கள் தேவை இரா எனக் கண்டுள்ளார். வேண்டுமாயின், சில சேரலாம். எனவே, மொழி நிலை பெற்று வாழ வேண்டுமானால், அதன் நிலை கெடாத வகையில், காலந்தோறும் அதனிடம் தோன்றும் அடிப்படை மாறுதல்களை ஏற்று இடமளித்து, அதற்கேற்ற அடிப்படையை அமைத்துக் கொள்ளின் அது என்றென்றும் வாழும் என்பது உறுதி. இந்த நிலையைத் தான் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் அடிப்படையில் மாறாது மொழி தோன்றி வாழும் முறை மேல் வைத்துத் தமது மனோன்மணீயத்தில்,

'பல்லுயிரும் பலஉலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையா ளமும்துளுவும்
உன்உதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக்
கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே.'

என எடுத்துக் காட்டுகின்றார். நாம் இங்கே தொல்காப்பியர் தம் புறநடைச் சூத்திரத்தைக் கண்டு அமைவோம்.

'கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்'

விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத் தென்மனார் புலவர்.' (483)

என எழுத்ததிகாரத்துக்கும், இன்னும் அவ்வதிகாரத்தில வரும் சில இயல்களுக்கும் புறநடைச் சூத்திரங்கள் செய்த தொல்காப்பியனார், மற்ற இரண்டு அதிகாரங்களுக்கும் புறநடைச் சூத்திரம் செய்யவில்லை. ஒரு வேளை அவற்றில் மாறுபாடுகள் வாரா என்ற காரணத்தினால் சொல்லாமல் இருந்திருக்கலாம். அடிப்படை எழுத்துக்களிலும், அவற்றின் அமைப்பு முறையிலும், சொற்களிலும் அவை சேரும் வகையிலும் மொழியில் மாற்றம் இருக்குமன்றி, செம்மை செய்யப் பெற்ற சொல் நிலையிலும் பொருள் அமைதியிலும் அவற்றின் மரபு, பண்பாட்டு நிலையிலும் மாற்றம் தேவை இல்லை என்பதைக் காட்டியுள்ளார் அவர். இந்த நிலையிலேதான் இன்றும் மாற்றம் பற்றிப் பலர் வாதிடுகின்றனர். எனவே, தமிழ் இலக்கண மரபறிந்து சிறக்க எழுதப் பழகினால், நல்ல தமிழ் உருவாகும் என்பது உறுதி.

# 11. யாப்பின் அமைதி

இறையனார் அகப்பொருள் தோன்றிய வரலாற்றைப் பற்றிய கதை நாடறிந்தது, பாண்டி நாட்டில் வாழ்ந்த புலவர் பலர் பஞ்சத்தால் பல காலம் வெளியே சென்றனராம். பின்பு நல்ல மழை பெய்ய, அவர்களுள் பலர் திரும்பி வந்தனராம். அவர்களுள் எழுத்தும் சொல்லும் அறிந்தவரே இருந்தனராம்; பொருள் அதிகாரம் அறிந்தவர் இல்லையாம். உடனே பாண்டியன் கவன்றானாம். 'எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளின் பொருட்டன்றே?' என்று கூறி, பொருளதிகாரம் வல்லாரைத் தேடிக் கொண்டு வருமாறு நாடெங்கும் ஆட்களை அனுப்பினானாம். அம்முயற்சி பயன்பெறவில்லை. அவன் மிகவும் வருந்தினான். அவ் வாட்ட நிலை கண்டு இறைவன் **இறையனார் அகப்பொருள்** சூத்திரங்களைச் செய்து உதவினான். இதுதான் வரலாறு. இது நடந்த கதையா அன்றிக் கற்பனையா என்னும் ஆராய்ச்சி நமக்கு வேண்டா. இதன் அடிப்படையை எண்ணிப் பார்க்கவேண்டும். எந்த மொழியிலும் எழுத்தும் சொல்லும் அறிதல் அவற்றால் பொருளை விளக்குவதற்குத்தானே? எனவே, பொருள் இன்றேல், எழுத்தாலும் சொல்லாலும் என்ன பயன்?

ஆனால், 'பொருள்கள் உலகில் உள்ளனவே! இலக்கணமெல்லாம் எழுத்துக்கும் சொல்லுக்குந்தானே?' எனச் சிலர் கேட்கலாம். அக்கேள்வி தமிழ் இலக்கணம் அறியாதவராலேயே கேட்கப்படும். பிற மொழிகளுக்கு இல்லாத ஒரு சிறப்பு, தமிழ் மொழிக்கு உண்டு என்றால், அது 'பொருளதிகாரம்' பெற்ற பெருஞ்சிறப்பேயாமெனலாம். எழுத்தையும் சொல்லையும் தெளிந்த இலக்கண முறைப்படி விளக்கிய

தோடு பிற மொழியாளர் அமைவர். ஆனால். தமிழ் இலக்கணத்தில், இவை இரண்டும் பொருளை ஆராயவல்லவா என எண்ணிப் பொருளை விளக்கி வருவதே பொருளதிகாரம். அதை உரைநடையாலும் பாட்டாலும் விளக்கினார்கள். உரை நடை இலக்கண அமைப்புக்களைப்பற்றி முன்னமே பல அறிவித்துள்ளேன். பாட்டின் இயல்பினை விளக்குவது யாப்பு. அப்பாட்டின் அழகின் பண்பை விளக்குவது அணி. தொல்காப்பியத்தில் **எழுத்து, சொல், பொருள்,** என்னும் மூன்று அதிகாரங்கள் இருந்தாலும், பொருளதிகாரத்தில் 'செய்யுள் இயலால்' யாப்பையும், 'உவம இயலால்' அணியையும் ஆசிரியர் நன்றாக விளக்கியுள்ளார். இதுவரை எழுத்தையும் சொல்லையும் பற்றி ஓரளவு கண்டநாம்; மற்றவற்றையும் சுருக்கமாகக் கண்டு அமைவோம். அவை பற்றியும் அறிந்த பிறகுதான் நல்ல தமிழ் கண்ட நிலையை எய்துவோம் என்ற காரணத்தால் அவற்றையும் அறிவோம்.

பிற மொழிகளுள் பொருள் பற்றிப் பேசவில்லை. தமிழில் மிகுபழங்காலம் தொட்டே இப்பொருள் பற்றி வரையறை செய்துள்ளனர். உலகில் மக்களுக்குத் தேவைப்படுகின்ற பொருள்களனைத்தையும் ஆராய்ந்து அவற்றை இரண்டு வகையிலே அடக்கினார்கள்; அவை '**அகப்பொருள், புறப்பொருள்**' என்பன. உலகில் ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் உள்ளத்தால் கலந்து கண்டு பெற்ற—பிறருக்கு இன்னதென எடுத்துக் காட்ட இயலாத நிலையிலுள்ள—இன்பத்தை **அகம்** என்றும், மற்ற அனைத்தையும் **புறம்** என்றும் கூறி வைத்தார்கள் சிலர் இவற்றை 'அறம் பொருள் இன்பம் வீடு' என நான்காகப் பகுப்பர். 'இன்பம்' ஒன்றுமே அகமாகவும், மற்ற மூன்றும் புறமாகவும் அமையும்.

தமிழில் இந்த இரு பொருள் பற்றியே எல்லா இலக்கியங்களும் அன்று தொட்டு இன்று வரை அமைகின்றன. தமிழில்

மட்டுமின்றி, வேறு எந்த மொழியிலாயினும் ஆராய்ந்து பார்த்தால், எல்லாப் பொருள்களும் இந்த இரண்டிலேயே அடங்கும் என்பது நன்கு விளங்கும். இந்த இருபொருள்பற்றிப் பாடும் பல பாடல்களுக்கு இலக்கணமும் சொல்லாட்சியும், மரபும், மெய்ப்பாடும், யாப்பும், அணியும் விளக்கிக் காட்டும் இயல்களை உடையதே பொருளதிகாரம்.

தமிழ் இலக்கியங்களுள் பல பழங்காலத்தில் அகப் பொருள் பற்றியே அமைந்துள்ளன. சங்க கால எட்டுத் தொகை நூலுள் ஆறு நூல்கள் அகப்பொருள் பற்றியன வேயாம். **பதிற்றுப் பத்தும், புறநானூறும்** புறப்பொருள் பற்றியவை. இந்தப் புறப்பொருட்பாக்களின் அடிப்படை யிலேதான் தமிழ் நாட்டுப் பழங்கால வரலாறே அறுதியிடப் பெறுகின்றது. அகப்பொருட் பாடல்களால் தமிழர்தம் பண் பாடு, நாகரிகம், சமயம், வாழ்வியல் போன்ற பலவற்றின் உண்மைகளையும் தன்மைகளையும் அறிந்துகொள்ள இய லும். இன்று தமிழ் நாட்டில் அவை பற்றிப் பல அறிஞர் ஆராய்ந்து நூற்றுக்கணக்கான நூல்களை வெளியிடுகின்ற னர். அவற்றின் அடிப்படையிலே கட்டுரைகள், கதைகள், கவிதைகள் புதுப்புது வகையில் வெளி வந்து கொண்டேயிருக் கின்றன. எனவே, இங்கு நானும் அவை பற்றி அதிகம் எழுதத் தேவை இல்லை. பொருளின் நிலையை விளக்கும் மரபு முதலியவை பற்றி ஓரளவு முன்னமே கண்டுள்ளோம். 'பொருளதிகாரம்' இன்றேல் பிறவற்றால் பயன் இல்லை என்னும் ஓர் உண்மையை மட்டும் அறிந்து, அதை உணர்ந்து, அன்றே அதற்கு இலக்கண வரம்பமைத்த தொல்காப்பியரைப் போற்றி மேலே செல்லலாம். யாப்பும் அணியும் நல்ல தமிழுக்கு உதவும் நெறி கண்டு அமைதல் சாலச்சிறந்தது.

தமிழில் மிகு பழங்காலந்தொட்டே உரையும் பாட்டும் வழக்கத்தில் இருந்து வருகின்றன. தொல்காப்பியத்திலும் இரண்டும் குறிப்பிடப்படுகின்றன. 'உரையும் பாட்டும்'

பயின்று வரும் வழக்கு, பிந்திய இலக்கிய இலக்கண நூல்களிலும் பேசப் பெறுகின்றது. எனினும், உரைநடைக்குத் தனியாக இலக்கணம் வகுக்கவில்லை என்பர் சிலர். நாம் இது வரையில் கண்ட வாக்கியம் அல்லது சொற்றொடரின் அமைப்புகளெல்லாம் உரைநடை இலக்கணம் பற்றியவைகளே. இரண்டொரு விகார அமைதிகள் தவிர்த்து மற்றவை அனைத்தும் உரைநடைக்கு அமைந்தனவே. உரைநடை அல்லது வசனம் எப்படி எழுத வேண்டும் என்பதைத்தான் சொற்றொடர் இலக்கணம் விளக்குகிறது. அதற்குரிய நிறுத்துக் குறிகளும், பொருள் மாறுபடாத சொற்றொடர் அமைப்புகளும் எவ்வாறு தமிழில் அமையும் என்னும் இலக்கணங்களையெல்லாம் கண்டோம். எனவே, தமிழ் உரைநடைக்கு – நல்ல தமிழுக்கு - அவைகளே இலக்கண வரம்புகள் எனக்கூறி, இனிச் செய்யுள் நடைக்குரிய இலக்கணங்கள் சில கண்டு அமைவோம்.

இன்று நாட்டில் எத்தனையோ வகையில் புதுப் புதுப் பாடல்கள் உண்டாகிக்கொண்டே வருகின்றன. அவை அத்தனையும் சரியானவை என்றோ இலக்கண அமைதி உடையன என்றோ கூற இயலாது. என்றாலும், பலரும்—இலக்கணம் அறியாதவர்களுங்கூடப்—பலப்பல பாடல்களை இயற்றுகின்றனர். சில நன்கு இனிய ஓசையுடையனவாய் அமைகின்றன. சில கெடுகின்றன. யாப்பிலக்கணம் பயின்று, அதன் வழிப் பாட்டிசைத்தல் அவ்வளவு எளிதன்று. அதைக் கருதித்தான் போலும் புலவர் ஒருவர்,

**'காரிகை கற்றுக் கவிபா டுவதினும்**
**பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே.'**

என்ப் பாடி வைத்தனர்! கவி, உள்ளக் கிளர்ச்சியால் ஊற்றெடுத்து ஓடி வருவது. என்றாலும், அதுவும் இலக்கண வரம்பிற்கு உட்பட்டு அமைய வேண்டும் என்பது அறிஞர் கொள்கை.

தொல்காப்பியர் தம் செய்யுளியலுக்கும் பின் வந்த யாப்பிலக்கணங்களுக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. தொல்காப்பிய எழுத்ததிகாரச் சொல்லதிகாரங்களுக்கும் சில வேறுபாடுகள் உள்ளன என்பதை முன்னமே காட்டியுள்ளேன். அப்படியே யாப்பிலக்கணத்திலும் அணியிலக்கணத்திலும் சிலவேறுபாடுகள் உள்ளமை காணலாம். இவற்றின் அடிப்படை காலந்தோறும்உண்டாகும் புதுப்புது இலக்கியங்களுக்கு ஏற்ப மாறாவிட்டாலும், இவற்றின் அமைப்புகளும், முறைகளும், எடுத்துக் காட்டுகளும், பிற இயல்புகளும் காலந்தொறும் மாற்றம் பெறுவதைக் காண்கின்றோம்.

சங்க காலத்திலோ, அதற்கு முன்போ எழுந்த பாடல்களுக்கும், இடைக் காலத்தில் எழுந்த பாடல்களுக்கும், இன்று எழும் பாடல்களுக்கும் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. சங்ககாலப் பாடல்கள் பெரும்பாலும் மக்கள் வாழ்வின் அடிப்படையை விளக்குவனவாய், வெறுஞ்சொல்லடுக்குகளாய் இல்லாமல், பொருள் பொதிந்த பெட்டகங்களாய் இருப்பதைக் காண்கிறோம். அவற்றுள் எதுகை மோனையை எதிர்பார்த்தால் ஏமாற்றமே உண்டாக்கும். வெறுஞ்சொல்லழகு கருதிப் பொருளைப் புறக்கணிப்பவர் பழங்காலத் தமிழர் அல்லர். டாக்டர். சாமிநாத ஐயர் அவர்கள் தம் வரலாற்றிலே திருக்குறளை எதுகைமோனை நயத்துக்காகத் திருத்திய துரைமகனார் தம் ஆசிரியரிடம் பட்ட பாட்டை நன்கு விளக்குகிறார்.

**தக்கார் தகவிலர் என்ப தவரவர்**
**எச்சத்தாற் காணப் படும்.**

என்ற குறளின் இரண்டாமடியில் 'எச்சம்' என்பதற்குப் பதில் 'மக்கள்' என்று சொல்லழகுக்காக எழுதுவது எவ்வளவு பொருள்கெடக் காரணமாகின்றது! எனவே, பழங்காலத்தில் வெறுஞ்சொற்கோவைகளாக அமையாது, அறிஞர் கவி

களைப் பொருட்செறிவுடையனவாகவே அமைத்தனர். அதனால், அக்காலத்தில் அதிக இலக்கண மரபு யாப்பில் உண்டாகவில்லை.

மற்றும் அக்காலத்தில் நால்வகைப் பாக்கள் மட்டும் இருந்தன என்பதை அறிகிறோம், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பனவே அவை. அவற்றுள்ளும் நாம் காணும் எல்லாச் சங்க நூல்களிலும் ஆசிரியப்பாவே அதிக மாகப் பயின்று வருவதை அறிகிறோம். வெண்பா ஒரோ விடங்களில் வருகின்றது. கலித்தொகை கலிப்பாவால் ஆனது. வஞ்சி அடிகளும் ஒரு சில பாக்களில் வரக் காண் கிறோம். பெரும்பான்மையாக வழக்கத்தில் ஆசிரியப்பா உள்ளமைக்குக் காரணம் என்ன? மொழி மக்களுக்குக் கருத்தை விளக்குவதற்காக அமைந்ததே என்ற காரணத் தால், தாம் பாட்டிடைக் கூறும் பொருளை அனைவரும் எளிதில் உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வினால் அறிஞர் அன்று பாட்டிசைத்தனர். எனவே, அவற்றின் பொருள்களை எளிமையாக உணர்ந்துகொள்ள முடிகின்றது. அவற்றுள் பத்துப்பாட்டுப்போன்ற நூறு அடிகளுக்கும் மேலே யுள்ள பாட்டுக்களுக்கு உரைகாணும் நச்சினார்க்கினியர் போன்ற இடைக்கால உரையாசிரியர்கள் எப்படி எப்படியோ கூட்டியும் மாற்றியும் உரைகண்டு, பாடலைக் கடுமையாக்கு கின்றார்கள். குறள் உட்படப் பல பாடல்களை உரைகள் இல்லாமலே நம்மால் நன்கு அறிந்து கொள்ள இயலும். சில பாடல்களை உரைகளே குழப்பிப் பொருள் விளங்கவொட் டாமல் தடை செய்கின்றன. எனவே, ஆழ்ந்து பார்ப்பின், சங்க காலப் புலவரது எளிய நடையும் பொருள் அமைப்பும் நன்கு விளங்கும் என்பது வெள்ளிடை மலை.

இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் பல ஆயிரக்கணக் கான பாடல்களைப் பாடியுள்ளனர். 'அம்' என்றால் ஆயிரம் பாட்டு' என்று பல பாடல்களைப் பாடுவதைப் பெரு

மையாகக்கொண்டனர். ஆனால், அந்த ஆயிரம் பாட்டுள் ஒன்றாயினும் பொருள் செறிவு உடையதாய் இருக்கிறதா? அது மட்டுமன்றிப் பொருள் எக்காலத்துக்கும் ஏற்புடைய மக்கள் வாழ்வொடு பிணைந்ததாக அமையவேண்டும் வாழ்வுக்குத் தேவையற்ற பொருள்களைப்பற்றி எத்தனைக் கற்பனை நலம் தோன்றப் பாடினும் அவை காலமென்னும் கடும் புனலை நீந்தி வாழ முடியாது என்பதைத் தமிழ் இலக்கிய வரலாறு காட்டுகின்றது. எனவே, பாட்டின் இலக்கண அமைதியைக் காட்டிலும் பொருள் அமைதியே நல்ல தமிழுக்கு ஏற்றது.

பெரும்பாலும் பழங்காலப் பாடல்கள் (உரையாசிரியர் குறுக்கீடு இல்லாதிருந்தால்) நேர்முகமாகப் பொருள் தருவன வாகவே உள்ளன. இடைக்காலத்தில் தேவை இல்லாத சொற்களை ஆண்டு, பொருள் முட்டுப்பாடுறப் பாட்டுகள் எழுதிய காரணத்தினாலே அவற்றின் பொருள்களைக் காண இலக்கணம் வேறு வகுக்கவேண்டிய தேவை உண்டாயிற்று. அவற்றை நன்னூலும், யாப்பிலக்கணமும் பலவகையில் அமைத்துக் காட்டுகின்றன. யாற்று நீர்ப் பொருள்கோள் முதல் அடி மாறி மாற்றுப் பொருள்கோள் வரையில் எட்டு வகையாக நன்னூல் அமைத்துக்காட்டுகின்றது. அவற்றின் விளக்கமெல்லாம் நமக்குத் தேவையில்லை. எனவே,

**யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்**
**தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்டு**
**அடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே',**

என்ற நன்னூல் சூத்திரம் (411) காட்டி அமைகின்றேன்.

இனி, இந்த யாப்பிலக்கணத்திலே எழுத்திலக்கணத்தில் கண்ட அத்தனை எழுத்துக்களும் இடம் பெறுகின்றன. பாட்டுக்கு அடிப்படை எழுத்துக்கள் அல்லவா? எழுத்து,

சொல், சொற்றொடர், என்று உரைநடைக்கு உள்ளவை போல யாப்புக்கு எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை பாட்டு என்ற பிரிவுகள் உள்ளன. எழுத்தால் ஆகிய அசையில் நேரசை, நிரையசை என்ற பிரிவுகள் உள்ளன. அந்த அசைகள் ஒன்றோ பலவோ பாட்டுக்குப் பொருத்தமாய் அமைவது சீர். இரண்டு சீர்கள் இணைவது தளை. தளைகள் உண்டாக்குவது அடி. அடிகளை இணைப்பது தொடை. இவற்றால் அமைவது பாட்டு. இப்படி யாப்பிலக்கண அமைதி அமைகின்றது. இந்த யாப்பிலக்கண அமைதிகள் யாவும் யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலம் என்ற பிற் காலத்து நூல்களிலெல்லாம் விளக்கப் பெற்றுள்ளன. தொல் காப்பியச் செய்யுள் இயலிலும் இவற்றின் விளக்கங்கள் உள்ளன. எனினும், பிற்காலத்தில் உண்டான—இன்று நாட்டில் அதிகமாக உலவுகின்ற வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பாக்களுக்குரிய இனங்களாகிய விருத்தப் பாக்கள். பண்டு நாட்டில் இல்லாதவை. 'விருத்தமென்னும் ஒண்பா' என்ற சிறப்பு பிற்காலத்தில் உண்டானதே. அன்று நால்வகைப் பாவொடு சில சில விகற்பப்பட்ட இரண்டொரு பா வகைகளே காட்டப் பெறுகின்றன. அவை பரிபாடல் மருட்பாப் போன்றவை. யாப்பு என்பதற்கு இலக்கணம் கூற வந்த தொல்காப்பியர்.

> 'எழுத்து முதலா ஈண்டிய அடியில்
> குறித்த பொருளை முடிய நாட்டல்
> யாப்பென மொழிப யாப்பறி புலவர். (பொருள்.384)

என்று சொல்லி அக்கருத்தையும் தாம் கூறியதாகக் காட்டாது, அத்துறையில் வல்ல புலவர் தம் உள்ளக்கிடக்கை அது எனக் காட்டுகின்றார். மற்றும் பிற்காலத்து யாப்பிலக்கண நூல்கள் போலன்றி, தொல்காப்பியர் வெறும் பாட்டு ஆக்கும் உறுப்புக்களைப் பற்றியும், அவற்றின் விசுற்பங்

களைப் பற்றியும் மட்டுமே கூறாது, அப்பாடல்கள் காட்டும் பொருள் அமைதியையே அதிகமாக விளக்குகிறார். அப் பாட்டுக்கள் அகப்பொருள் புறப்பொருள் என்னும் இரு வகைப் பொருள்களிடத்தும் எவ்வெவ்வகையில் எவ்வெம் முறையில் எடுத்தாளப் பெறும் என்பதைக் காட்டுகின்றார். ஆனால், பின்னர் யாப்பின் திறம் பாட வந்த புலவர்கள், அந்த யாப்பின் உறுப்புக்களைத் தனியாகக் காட்டி உறுப் பியலாகவும், பின்னர்ப் பல்வேறு வகைப்பட்ட பாக்களைக் காட்டிச் செய்யுள் இயலாகவும், இவ்விரண்டினையும் சார்ந்த பிறவற்றைக் காட்டி ஒழிபியலாகவும் செய்துள்ளார் கள். அஃது அவர்கள் குறையன்று. அக்காலத்தில் நாட்டிற் பாக்கள் அத்துணை விரிந்த அளவில் வழங்கியமையும், அவற் றின் விகற்பங்கள் எண்ணிறந்து நின்றமையுமே காரணங்களாக லாம். எனினும், அவையெல்லாம் காலப் போக்கில் வாழ் விழந்து மறைய, பழைய ஆசிரியப்பாவே மீண்டும் தழைத்து வருவதைக் காண்கின்றோமல்லவோ! சிலப்பதிகாரம் சிறந்த நாடக நூல். அதற்குப் பிறகு நாம் **மனோன்மணீயம்** பெற்றுள்ளோம். இரண்டும் பெரும்பாலும் ஆசிரியப்பா வால் ஆக்கப் பெற்றனவே. ஆசிரியப்பா எழுவதற்கு எளிமை என்பது மட்டுமின்றி, அதனால் மற்றவர்க்கு எளிமையாகப் பொருளை விளக்கவும் முடியும் என்பதும் எண்ணிப் பார்க்க வேண்டும். முன் உரைநடைக்கு எழுதிய அமைதி பாட்டுக் கும்—செய்யுளுக்கும்—பொருந்துவதாகும். தன்னை உயர்ந்த புலவன் எனப் பிறர் மதித்துக்கொள்ள வேண்டும் என்று கருதி, விளங்காத சொற்களையும் சொல் அமைப்புகளை யும் யாப்பு முறைகளையும் அமைத்து ஒரு புலவன் பாட்டுப் பாடுவானானால் அஃது அவன் காலத்திலேயே தன் முடிவைத் தேடிக்கொள்ளும். ஆனால், அதே வேளையில் சந்தமும் அமைப்பும் அற்று, சொற்களை அடுக்கித் தானும் புலவன் என்று காட்டிக்கொள்ளப் பொருட்டெளிவற்ற பாடல்களை—இக்காலத்தில் சிலர் பாடுவது போன்று— பாடுவதாலும் பயனில்லை. அந்தப் பாடல்களும் நிலைத்து

வாழா! எனவே, செய்யப்படுவது செய்யுள் ஆதலால், அதைச் செய்யும் திறனை முதலில் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். அதற்கு இலக்கணம் கற்க வேண்டும் என்பதில்லை. பழங்காலப் புலவர் தம் பாடல்களை முறையாகப் பயில்வதே போதும். அந்தப் பாடல்களின் அடிப்படையில், சொல்லின் பழும் இன்னோசையும் தழுவியதாய், எடுத்த பொருளை விளக்கும் தன்மை வாய்ந்ததாயமையச் செய்யவேண்டும். அச்செய்யுள் காட்டும் பொருள் அந்த நிலத்து மக்களின் வாழ்வுக்கும் வரலாற்றுக்கும் பண்புக்கும் பற்றுக்கும் ஏற்ற தாக அமையவேண்டும். அத்தகைய செய்யுளை இயற்றி னால், அஃது அப்புலவனை நெடுங்காலம் வாழவைக்கும். அவன் உடலும் உயிரும் - ஏன் - சிலர் பெயரும் - கெட்டா லும், தான் கெடாது, தன்னைப் பாடியவனை வாழவைக் கும் என்பது உறுதி. கம்பரும், வள்ளுவரும், இளங்கோவும், திருத்தக்க தேவரும், தேய்புரிப் பழங்கயிற்றாரும், செம்புலப் பெயல் நீராரும் இன்றளவும் எதனால் வாழ்கின்றார்கள்? அவர்தம் பொருள் பொதிந்த பாடல்களாலன்றோ! அத்த கைய பாடல்களைப் பெற்றிருக்கும் காரணத்தாலன்றோ தமிழும் நல்ல தமிழ் என நானிலம் போற்றச் சிறந்து வாழ் கின்றது! எனவே, நம்முள் பாட்டிசைக்க—செய்யுள் யாக்க— விரும்புகின்றவர்களும் பழங்காலப் புலவர்தம் மரபு கெடா வகையில் பொருள் பொதிந்த பாடல்களை இயற்றி, அவற் றால் தாமும் வாழ்ந்து, 'நல்ல தமிழை'யும் வாழவைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

# 12. அணியும் தேவை

மக்கள் உள்ளக் கருத்தைப் பிறருக்கு உணர்த்தப் பயன் படுவதே மொழி என்பதைக் கண்டோம்; அவ்வாறு உணர்த்துவதில் எளிமையும் உண்டு; உணர்த்த உணரா நிலையும் உண்டு. கண்டவற்றைப் பற்றிப் பேசுவதும் உண்டு; காணாதவற்றை விளக்குவதும் உண்டு. காணாதவற்றை விளக்குவது எப்படி? காணாதவற்றைக் கண்டது கொண்டே விளக்க வேண்டும். எதிரே உள்ள ஒரு பொருளைச் சுட்டிக் காட்டி, 'இதோ நீ காணும் இதைப் போன்றேதான், காணாத நெடுந்தொலைவிலுள்ள பொருள் இருக்கும். என்று சொன்னால், காணாத பொருளை ஒருவாறு உணர்ந்துகொள்ள முடியும். இந்த முறையைப் பள்ளிக் கூடத்தில் படிக்கும் சிறு பிள்ளைகளுக்குத் தொடக்கத்திலேயே சொல்லிக் கொடுத்துவிடுவார்கள். 'உவமானம்' என்றும், உவமேயம், என்றும் இரண்டைத் தனித்தனியாக விளக்கி, ஒன்றினால் மற்றொன்று விளக்கப்பெறும் எனக் காட்டுவார்கள். உவமேயம் காட்டவேண்டிய பொருள்; உவமானம் அதைக் காட்டப் பயன்படுகின்ற பொருள். இவற்றிற்கெல்லாம் சிறுவர்கள் உள்ம்கொள்ளும் வகையில் ஔவையார் பாடியுள்ள சில வற்றைமேற்கொள்களாகக் காட்டுவார்கள்.

**'சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை**
**ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்:—மாந்தர்**
**குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து**
**மறைக்குமாம் கண்டீர் மரம்!'**

இது ஔவையார் பாட்டு. இதில் நன்மக்கள் இயல்பைக் காட்ட விரும்புகிறார் ஔவையார். அவர் நல்லவர்கள்

தங்களுக்குப் பிறர் சாகும் வரை துன்பமே செய்தாலும் அவர்களைத் தங்களாலான வரையில் காத்தே உதவி செய் வார்கள் என்பதை விளக்க விரும்பினார். கேட்பவருக்கு, அவருள்ளும் சிறுவருக்கு, அது நன்கு விளங்காமல் இருக் கலாம். எனவே, அங்கு அவர்களுக்கு முன்னே நின்ற ஒரு மரத்தைக் சுாட்டி விளக்க வேண்டிய தேவை உண்டாயிற்று. அம்மரத்தின் கிளைகளைப் பலமுறை வெட்டுகிறார்கள். எனினும், அது தழைத்துத் தழைத்து நிழல் தந்துகொண்டே இருக்கிறது. தன்னை வெட்டுபவனுக்கும் கடுங்கோடையில் நல்ல நிழலைத் தந்து களைப்பாறச் செய்கிறது. அதைப் போன்றே நல்ல அறிவுடையவர்கள் தமக்குக் கெடுதி செய் பவர்களுக்கும் நல்லதையே செய்வார்கள் என்று ஒன்றைக் காட்டி மற்றொன்றை விளக்க வேண்டிய தேவை உண்டா யிற்று. அந்த வழியிலேதான் 'உவமை' இலக்கணம் தோன் றிற்று. மனித வாழ்வின் அடிப்படையே இலக்கணத்தின் அடிப்படை என்று முதலில் எழுத்தைப்பற்றி நான் சொல்லிய கருத்து, எல்லாவற்றிற்கும்—ஐந்து இலக்கணத்திற்கும்— பொருந்துவதாகும். உவமையைப் பற்றி மட்டுந்தான் தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் 'உவம இயல்' என்னும் பகுதியிற் குறித்துள்ளனர். எனினும், பிற்காலத்தில் அணிபற்றித் தண்டி அலங்காரம், மாறன் அலங்காரம் என்ற பெயர் பெற்ற நூல்களெல்லாம் உண்டாயின. அவை அணி யிலக்கணத்தைப் பெருக்கி விளக்குகின்றன. எனினும் அவை அனைத்தும் தொல்காப்பியர் கண்ட உவம இயலிலே அடங் கும் எனலாம்.

உவமை என்பது இன்ன தன்மையது என்று எடுத்துக் கூறக்கூடத் தேவை இல்லை. உலகம் தோன்றிய நாள் தொட்டு—மொழி தோன்றுவதற்கு முன்னமே — இந்த உவமை இருந்து வந்திருக்க வேண்டும். ஒன்றைப் பகுத்தறிய மனிதன் கற்றுக்கொண்ட அந்த நாளிலேயே உவமம் வாழ்

வில் வந்துவிட்டது. ஏதோ ஒன்றை ஒருவன் புதிதாகக் கண்டதாகக் குறித்திருப்பான். அதிலிருந்து கேட்டவனுக்கு ஒரு வேளை அது விளங்காது இருந்திருக்கும். எனவே, முன்னவன் அங்கே இருவருக்கும் அறிமுகமான தெரிந்த மற்றொரு பொருளைக் காட்டி, 'அப்பொருள் இப்படி இருக்கும்,' எனக் காட்டியிருப்பான். இவ்வாறு மொழி தோன்று முன்னே உவமை தோன்றிவிட்டது. மொழிக்கு இவ்வுவமை எவ்வளவு அவசியம் என்பதை முன்னமே கண்டோம் அல்லவா?

தொல்காப்பியர் செய்யுளிலும் உரை நடையிலும் காட்டவிழைந்த பொருளை விளக்குவதற்குத்தான் உவமையைக் கையாண்டார். எனினும், பின் வந்த பலர், யாப்பிலக்கணத்திலே எத்தனையோ புதுப்புது மாறுபாடுகளைச் செய்தமை போன்றே இந்த இலக்கணத்திலும் செய்துவிட்டனர். அணியிலக்கணம் என்றே பெருநூல் எழுந்து விட்டது. தொல்காப்பியர் பொருளின் சிறப்பை எல்லாம் அகத்திலும் புறத்திலும், களவிலும், கற்பிலும் நன்கு காட்டிப் பின் சொல்லாதவற்றையெல்லாம் பொருளியலிலும் காட்டி, அம்மக்கள் வாழ்வில் தோன்றும் மெய்ப்பாடுகளைப் பின் ஓர் இயலில் காட்டி, அவர்தம் உலக வழக்குக்கும் செய்யுள் வழக்குக்கும் உவமம் எந்த அளவில் உதவுகின்றது என்பதையே தம் உவம இயலில் காட்டுகின்றார். (பின்னர்ச் செய்யுளும் மரபும் அமைகின்றன.) உவமம் இன்னது என்றே விளக்கத் தேவை இல்லாமையினால் அதை விட்டு, அந்த உவம மரபு மக்கள் வாழ்வுக்கு எவ்வாறு பயன்படுகின்றது என்பதை மட்டும் சுட்டிக் காட்டினார். பின்னர் அந்த ஓர் உவமையை வைத்துக் கொண்டே 'தன்மை முதல் பாவிகம்' ஈறாக, நாற்பதுக்கு மேல் தொகுத்து அவற்றைப் பல நூறாக வகுத்துப் பிரித்தனர் பின்னையவர். இவை அனைத்தும் தேவையா என்று எண்ண வேண்டியுள்ளது. இவை தேவை

அற்றன என்னும் உண்மை, அந்த அலங்கார நூல்கள் மெல்ல மெல்ல வழக்கிலிருந்து மறைந்துகொண்டு போவதிலிருந்தே விளங்குகின்றதல்லவா! உவமையொடு தொடர்புடைய உருவகம் போன்ற ஒரு சில அணிகள் மட்டுமேயன்றி, பிறவற்றின் பெயர்களும் புலவர்களுக்கே தெரியா. தெரியும் ஒரு சிலவும், பள்ளிப் பிள்ளைகளின் தேர்வுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன. முன்பு யாப்பில் கண்டபடி, தத்தம் மனம்போலப் பலர் இடைக்காலத்தில் பல வகையான பாடல்களைப் பாடித் தம் மனம் போன போக்கில் யாப்பும் அணியும் அமைத்தனர். எனவே, அவை பற்றிய இலக்கண நூல்கள் எழுந்தன எனினும், அப்பாடல்கள் கால வெள்ளத்தை நீந்தாது, வெள்ளத்தோடே அடித்துப் போகப்பட்டமையால், அவற்றின் இலக்கணங்களும் மறையத் தொடங்விட்டன. நாம் இங்கு நல்ல தமிழை உருவாக்க உதவும் இரண்டோர் அணிகளைக் கண்டு அமைவோம்.

தண்டியலங்காரக் காலத்தில் காப்பியங்களைப் பற்றியெல்லாம் இலக்கணம் கூறவேண்டிய நியதி உண்டாயிற்று. எனவே, அதன் ஆசிரியர் அவற்றையெல்லாம் அடக்கிப் பொதுவணி இயல் செய்தார். பின்னரே பொருள் நலம் காணும் வகையில் முப்பத்தைந்து அணிகளை வகுத்தார். ஒரு சிலவற்றைப் பலப்பல வகையில் பிரித்து வைத்தார். சற்றே ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பின், அனைத்தும் தொல்காப்பியர் கூறுகின்ற உவமை அணியினுள் அடங்கும் என்பது நன்றாக விளங்கும்.

தொல்காப்பியர், வினை, பயன், மெய், உரு என்ற நான்கு அடியாக உவமை பிறக்கும் என்று கூறி அமைந்தார். தண்டி அலங்காரத்திலோ, 24 வகையாக அந்த உவமை அணி பிரிக்கப்படுகின்றது. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வகையில் காரணம் காட்டி விளக்குவார் ஆசிரியர். ஆனால்

அத்தனையும் தேவையே இல்லை. காணாத ஒன்றைக் காவடுவது மட்டுமன்றி அகப்பொருள் நிலையில் — காதல் வாழ்வில் — சில இடங்களில் கற்பனையும் சேர்ந்திருக்கும். கற்பனை ஓரளவு கலவாத வாழ்வு பயன்படாது என்பதை இன்றைய எழுத்தாளர்கள் அறிகிறார்கள். ஆனால், இவர்களது கற்பனை உண்மைப் பொருளின் எல்லையையும் மீறி, எது பொருள் எது கற்பனை என அறியமுடியாதபடி செய்து வருகின்றதுதான் தவறாக முடிகின்றது. இரண்டும் இலக்கியத்தில் வாழும் என்ற உண்மையைத் தொல்காப்பியர்,

**'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம் (பொருள், 50)**

என்ற அடிகளால் விளக்கினார். எனவே, அந்த நாடக வழக்காகிய கற்பனைக்கும் உவமை ஓரளவு பயன்படும் என்பதை உணர வேண்டும். ஆனால், அந்தக் கற்பனையும் அதை ஒட்டி எழும் உவமம், உள்ளுறை யுவமம் போன்றனவெல்லாம் அகப்பொருள் பற்றி வரும் எனக் கருதியே அவை பற்றிய சூத்திரங்களை அகத்திணையியலில் அமைத்துள்ளார். ஆகவே, கருத்தொருமித்த காதல் வாழ்வுக்கு அவை ஓரளவு பயன்படும் என்பது உண்மை.

சங்க இவக்கியங்களிலே இந்த உவமைகளை அகத்திலும் புறத்திலும் பலப்பல இடங்களில் காண்கின்றோம் புலவர் சிலரின் இயற்பெயர்கள் மறந்துவிட்டாலும், அவர்கள் கூறிய உவமைகளாலேயே பெயர் பெற்று வாழ்கின்றார்கள், 'செம்புலப் பெயல் நீரார்', 'தேய்புரிப் பழங் கயிற்றார்' போன்ற பெயர்கள் அப்படிப்பட்டனவே. எனவே, உவமை இலக்கியத்துக்குத் தேவை. பெரும்பாலும் கற்பனை கலந்த இவ்வுவமை செய்யுளில் இடம் பெறும். எனினும், நாம் முதலிற் கண்டபடி கற்பனை கலவாது பொருளை விளக்க வேண்டி வரும் உவமைகள் சாதாரண உரைநடையிலும் வருவது உண்டு.

எனவே, இந்த உவமை இலக்கணத்தின் தன்மை அறிந்து தேவையான அளவுக்கு இடம் கருதி இதை எடுத்தாண்டு, நல்லதமிழ் எழுதுவது நலம் பயப்பதாகும்.

தொல்காப்பியர் இவ்வுவமை அணி எந்தெந்த வகையில் தோன்றும் என்பதைக் காட்டுவர். உவமானப் பொருளை மட்டும் எடுத்துக்காட்டி அது விளக்கவரும் உவமேயத்தைக் காட்டாவிட்டாலும் அந்தப் பொருள்களை உணர முடியும் என்கின்றார் அவர்.

**'நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்**
**உயிர்க்கிறுதி யாகிவிடும்' என்பது குறள் (476)**

இதில் வள்ளுவர் உவமானத்தை மட்டும் காட்டுகிறார், மரத்தில் ஏறும் ஒருவன் பெருங் கிளையின் கோடி வரையில் சென்று, அதன் சிறு கிளைகளையும் கடந்து சிறு கொம்பினையும் தாவிக் கடப்பானாயின் அவன் விழுந்து இறக்கத்தானே வேண்டும். இதை மட்டும் தான் வள்ளுவர் சொல்லுகிறார். ஆனால் சொல்ல வந்த பொருள் வேறு. ஒருவன் தன் நிலை, தகுதி முதலியவற்றின் எல்லையைக் கடந்து ஏதேனும் செய்யத் தொடங்குவனாயின் அவன் வாழ்வு கெடும் என்பதை உணர்த்துகிறார். இதனால் 'அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்' என்று உடனேயே வெளிப்படையாகவே காட்டுகிறார் அல்லவா?

அகப்பொருள் இலக்கணத்தில் உள்ளுறை உவமம் இறைச்சிப் பொருள் என்பன போன்ற பல உவம நிலைக்களங்கள் நன்கு காட்டப் பெறுகின்றன.

கொண்டவன் தன் மனைவியை விட்டுப் பரத்தையர் வீட்டை நாடித் திரிந்து கெடுகின்றான். அவனைத் திருத்த நினைத்த புலவர் பலர். அவனோ பல வகையில் உயர்ந்தவன். வெளிப்படையாக அவன் செயலைக் கூறமுடியாது.

மற்றும் இத்துறை காட்ட வரும் பல பாடல்கள் பெரும்பாலும் தோழி கூற்றாகவே அமைகின்றமையானும் தோழி தலைவன், தலைவிக்கு அடங்கியவளேயாதலானும் அவள் வெளிப்படையாக அவன் செயலைக் குறை கூறமுடியாது. பழங்காலப் புலவர்கள் இந்நிலைகளிலே தான் உள்ளுறை, இறைச்சி என்பவற்றை எடுத்தாண்டார்கள். எனவே, இந்த உவமம் தவறியவரைத் திருத்தவும் பயன்படுகிறது என்பதை உணரல் வேண்டும். மற்றும் அறிவறிந்த தலைவன் அதைக் கேட்டுத் திருந்திவிடுகிறான் என்பதையும் இலக்கியங்கள் காட்டுகின்றன. எனவே, உவமை வாழ்வில் பல நல்ல செயல்களைச் செய்யப் பயன்படுகின்றது.

இந்த உவமையில் பல வகை உண்டு என்றேனல்லவா? அவற்றுள் இரண்டொன்று காணலாம். திருக்குறள் முதற் பாட்டு,

**'அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி**
**பகவன் முதற்றே உலகு.'**

என்பது. இஃது உவமையின்பாற்பட்டது. 'எழுத்தெல்லாம் அகரத்தை முதலாக உடையன; (அது போல) உலகம் 'ஆண்டவனை முதலாக உடையது,' என்பது இதன் பொருள். இப்பாட்டில் உவமையை விளக்கும் 'போல' உருபு இல்லை. முன்னே நாம் பார்த்தபடி இதைத் தொகையாகவோ அல்லது வழுவமைதியாகவோ கொள்ளலாமா என எண்ணத் தோன்றும் சிலருக்கு. என்றாலும், இதை அந்த வகையில் சேர்ப்பதில்லை. அது சொற்றொடருக்கு அமைந்த இலக்கணமே அல்லாது பாட்டுக்கு அமைந்ததன்று. எனவே, இதை **'எடுத்துக்காட்டு உவமை'** என்பார்கள். இப்படியே ஐய உவமை, விபரீத உவமை, மாலை உவமை, இல்பொருள் உவமையென்று பலப்பல கூறுவார்கள். இவற்றுக்குத் தண்டியலங்காரம் நல்ல விளக்கம் தருகின்றது.

இவற்றுள் இல்பொருள் உவமை என்பது ஒன்று. இல்லாத பொருளை உவமையாகக் கூறலாமா? அது தவறு அல்லவா? எனினும், சிலவற்றை விளக்க அது பயன்படுகிறது. அதனால் யாருக்கும் கெடுதல் இல்லை. எனவே, அதனை எடுத்துக்கொள்ளலாம் என்பர் புலவர். இதோ இந்தத் தண்டி அலங்காரப் பாடலைக் காண்போம்.

**'எல்லாக் கமலத் தெழிலுந் திரண்டொன்றின்**
**வில்லேர் புருவத்து வேல்நெடுங்கண்—நல்லீர்!**
**முகம்போலு மென்ன முறுவலித்தார் வாழும்**
**அகம்போலு மெங்க ளகம்',**

'வில்லினையொத்த புருவத்தினையும் வேல் போன்ற நெடிய கண்ணினையும் உடைய நல்லீர், எங்கும் உள்ள கமலப்பூக்களின் அழகும் செறிந்து பொருந்துமாயின், எம்முடைய முகத்தினை ஒக்கும்; என, முறுவலைச் செய்தார் மருவி வாழும் இடம்போலும் எங்கள் உள்ளம் என்பது இதன் பொருள். எல்லாக் கமலங்களின் அழகும் ஒன்று சேர்வது இல்லை அல்லவா! எனவே, இது இல்பொருள் உவமை. இல்லாததனை உவமையாக்கியுரைப்பது இதன் இலக்கணம்.

இவ்வாறே பல உவமைகள் உள. உருவகம் என்பது ஒன்று. 'காளை போன்றவன் வந்தான்' என்பது உவமை. அவனையே காளையாக்கி, 'காளை வந்தான்' என்பது உருவகம். ஆங்கிலத்தில் இந்த இரு வகை மரபும் உண்டு. உவமையைக் காட்டிலும் உருவகத்தால் அந்தப் பொருள்களின் தன்மை சிறக்கிறது அல்லவா? இந்த உருவகமும் பல வகையாக அமையும். உருவகத்தில் உவமானமே அல்லது எடுத்துக் காட்டுக்கென வரும் பொருளாகவே உவமேயத்தைக் குறிப்பது மரபு. இந்த இரு அணிகளையும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். நான் முன் கூறியபடி ஆராய்ந்து பார்த்தால், இந்த உருவகமும் உவமையுள் அடங்கும். இது போன்றே

பிற அணிகளெல்லாம் உவமை என்னும் பேராற்றின் கிளை நதிகளேயாகும். இவற்றைப் படிக்கப்படிக்க நன்கு புரிந்து கொள்ளலாம்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து இலக்கணங்களின் அமைதியையும் அறிவதே நல்ல தமிழை அறிவதாகும். நாம் இது வரை இவற்றையெல்லாம் ஓரளவு கண்டு வந்தோம். இவற்றின் எல்லை விரிந்தது. இலக்கண நூலாசிரியர்களே எல்லாவற்றிற்கும் புறநடை வகுத்துள்ள மையின், நாம் வரையறுத்துக் கூறு இயலாது. பள்ளி யில் பயிலும் மாணவர்கள் தங்கள் தமிழ்ப்பாடங்களை முறையாகப் பயிலும் போது அவற்றில் உள்ள இந்த இலக்கண மரபுகளை அறிந்து கொள்ள வேண் டும். பின் தாங்கள் எழுதும் கட்டுரைகளிலும் பாடல்களிலும் இவற்றை முறை அறிந்து பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பழகின் வருங்காலத்தில் அவர்கள் நல்ல தமிழ் எழுத்தாளர்களாக வருவார்கள் என்பது உறுதி. மற்றவரும் இந்த வகையில் குறைவற்ற தமிழ் எழுதப்பழகின் நலன் விளையும். இவற்றை அடிப்படையாகக்கொண்டு இலக் கியங்களைப் பயின்று பயின்று உணரத் தொடங்கினால், யாரும் நல்ல தமிழ் எழுத முடியும் என்ற உண்மையைக் கூறி அமைகின்றேன். மக்களுக்கு 'நல்ல தமிழ்' உருவாகும் நிலை இது என்று கூறி அத்தமிழை வளர்க்க வேண்டுமென்ற வேண்டுகோளோடு என் உரையை முடித்துக் கொள்ளு கிறேன்.

வாழ்க நல்ல தமிழ்! வளர்க அதன் பண்பு நலன்!

## அ. மு. ப.வின் நூல்கள்

(மொத்தம் 80) உள்ளவை

| | | ரூ. காசு |
|---|---|---|
| சமுதாயமும் பண்பாடும் (புதியபதிப்பு) | — | 25-00 |
| கவிதையும் வாழ்க்கையும் | — | 15-00 |
| தமிழக வரலாறு | — | 20-00 |
| பல்கலைக் கழகச் சொற்பொழிவுகள் | — | 20-00 |
| காப்பியக் கதைகள் | — | 5-00 |
| வாழ்வுப் பாதை (நாவல்) | — | 4-00 |
| வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும் | — | 10-00 |
| இளமையின் நினைவுகள் | — | 2-50 |
| கொய்த மலர்கள் | — | 4-00 |
| துன்பச் சுழல் (நாவல்) | — | 2-00 |
| மக்கட் செல்வம் | — | 2-00 |
| பெண் | — | 1-50 |
| மனிதன் எங்கே செல்கிறான் | — | 1-50 |
| மணி பல்லவம் | — | 1-25 |
| தொழில் வளம் | — | 5-00 |
| எல்லோரும் வாழவேண்டும் | — | 3-00 |
| வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள் | — | 3-00 |
| வழுவிலா மணிவாசகர் | — | 7-00 |
| மலைவாழ் மக்கள் மாண்பு | — | 5-00 |
| வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நெறி | — | 2-50 |
| கவிதை உள்ளம் | — | 5-00 |
| சிறுவர்களுக்கு (வானொலி) | — | 2-50 |
| வானொலி வழியே | — | 3-00 |
| நாலும் இரண்டும் | — | 2-50 |
| தமிழ் உரைநடை | — | 8-00 |
| வையைத் தமிழ் | — | 3-50 |
| கங்கைக் கரையில் காவிரித் தமிழ் | — | 5-00 |
| வாய்மொழி இலக்கியம் | — | 12-00 |
| 19ஆம் நூற்றாண்டின் உரைநடைவளர்ச்சி | — | 7-00 |
| சாத்தனார் | — | 6-00 |
| மு. வ. தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு | — | 5-00 |
| புதிய கல்வி முறை | — | 3-00 |
| ஏழு நாடுகளில் எழுபது நாட்கள் | — | 36-00 |
| Gleanings of Tamil Culture | — | 1-50 |
| Ancient Temples of Tamil nadu | — | 30-00 |
| Historical Studies of Thevaram | — | 12-00 |